# பொருளடக்கம்


வரலாறு 01

அரசியல் அறிவியல் 16

புவியியல் 17






பொருளாதாரம் 18

அறிவியல் 24



தினசரி
தேசிய நிகழ்வு 25





44 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 47



# 1. வரலாறு





## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 01 | **பாகுபாடின்மை தினம்** | ▪ இந்த ஆண்டின் கருத்துரு, "தீங்கு தரும் சட்டங்களை விலக்கி, அதிகாரமளிக்கும் சட்டங்களை உருவாக்குதல்" என்பதாகும். |
| | **உலக குடிமைப் பாதுகாப்பு தினம்** | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "பேரிடர்கள் மற்றும் நெருக்கடி போன்ற நிலைகளின் காரணமாக இடம் பெயர்த்தப்பட்ட மக்களின் குடிமைப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை, பெருந்தொற்றிற்கு எதிராகப் போராட்டம் மற்றும் தன்னார்வலர்களின் பங்கு" (Civil defence and management of displaced populations in face of disasters and crises; role of volunteers and the fight against pandemics) என்பதாகும். |
| மார்ச் 01 முதல் மார்ச் 07 வரை | **ஜன் அவுசதி திவாஸ் 2022** | ▪ இது 4வது ஜன் அவுசதி திவாஸ் ஆகும்.<br>▪ 4வது ஜன் அவுசதி திவாசின் கருத்துரு, "ஜன் அவுசதி–ஜன் உப்யோகி" (Jan Aushadhi–Jan Upyogi) என்பதாகும். |
| மார்ச் 02 | **பொதுக் கணக்குகள் தினம் 2022** | ▪ 46வது பொதுக் கணக்குகள் தினமானது புதுடெல்லியின் ஜன்பாத்தில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் 2022 ஆம் ஆண்டு மார்ச் 02 அன்று கொண்டாடப் பட்டது.<br>▪ நிதித் துறை மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் ஆவார்.<br>▪ இதில் அமைச்சர் மின்னணு ரசீது வழங்கீட்டு அமைப்பு என்ற முக்கிய மின்னாளுகை முன்னெடுப்பினைத் துவக்கி வைத்தார்.<br>▪ இது வணிகம் செய்தலை எளிமையாக்குதல் மற்றும் டிஜிட்டல் இந்தியா சூழலமைவின் ஒரு பகுதியாகத் துவங்கப்பட்டது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 03 | உலக வனவிலங்கு தினம் | ▪ இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "சூழலமைவின் மறுசீரமைப்பிற்காக முக்கிய உயிரினங்களை மீட்டெடுத்தல்" (Recovering key species for ecosystem restoration) என்பதாகும்.<br>▪ இந்தத் தினமானது தாய்லாந்து நாட்டினால் முன்மொழியப் பட்டு, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது. |
| | உலக செவித் திறன் (கேட்டல்) தினம் | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "To hear for life, listen with care" என்பதாகும். |
| மார்ச் 04 | தேசிய பாதுகாப்பு தினம் | ▪ இளம் தலைமுறையினருக்குப் பாதுகாப்பு கலாசாரத்தினை மேம்படுத்த புகட்டுவோம் என்ற கருவுடன் இன்று 51–ஆவது தேசிய பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது.<br>▪ தேசிய பாதுகாப்பு குழுமம் தொடங்கப்பட்ட மார்ச் 4–ஆம் தேதி ஒவ்வோர் ஆண்டும் தேசிய பாதுகாப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.<br>▪ இந்தாண்டு 51–ஆவது தேசிய பாதுகாப்பு தினம் இளம் தலைமுறையினருக்கு பாதுகாப்பு கலாசாரத்தை மேம்படுத்த புகட்டுவோம்' என்ற கருவுடன் கொண்டாடப்படுகிறது. |
| | உலக உடல்பருமன் தினம் | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும்" (Everybody Needs to Act) என்தாகும். |
| மார்ச் 8 | சர்வதேச பெண்கள் தினம் | ▪ ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 08 அன்று சர்வதேச பெண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது. பெண்களுக்கான உரிமைகள் இயக்கத்தில் இது ஒரு மையப் புள்ளியாகும்.<br>▪ 1909 ஆம் ஆண்டு ஜனவரி 28 அன்று நியூயார்க்கில் பெண்கள் தினத்தை அமெரிக்காவின் சமதர்மக் கட்சி ஒருங்கிணைத்தது.<br>▪ 1917 ஆம் ஆண்டு மார்ச் 08 அன்று சோவியத் இரஷ்யாவில் பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர். அங்கு மார்ச் 08 ஆம் தேதி தேசிய விடுமுறை தினமாகும்.<br>▪ இந்தத் தினமானது 1975 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை சமதர்ம இயக்கம் மற்றும் பொதுவுடைமைக் கட்சியினால் இத்தினம் அனுசரிக்கப்பட்டது.<br>▪ 2022 ஆண்டிற்கான கருப்பொருள், "Gender equality today for a sustainable tomorrow." |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 10 | உலக சிறுநீரக தினம் | ▪ உலக சிறுநீரக தினம் – மார்ச் 10, 2022 ஆம் ஆண்டிற்கான மையகருத்து Kidney Health for all. |
| | சர்வதேச பெண் நீதிபதிகள் தினம் | ▪ இது இந்தத் தினத்தின் உலகின் முதலாவது வருடாந்திர அனுசரிப்பாகும்.<br>▪ இந்த நாளில்தான், நீதித்துறை மற்றும் நிறுவனங்களின் மேலாண்மை மற்றும் தலைமைத்துவ நிலைகளில் பெண்களின் முன்னேற்றத்தினை மேம்படுத்தும் சில பொருத்தமான மற்றும் பயனுள்ள உத்திகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை உருவாக்கி அதைச் செயல்படுத்துவதற்கான உறுதிப்பாட்டினை ஐக்கிய நாடுகள் மீண்டும் உறுதிப்படுத்தியது.<br>▪ இது தொடர்பான பொதுச் சபையின் இரு தீர்மானமானது கத்தார் அரசினால் 2021 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. |
| | 53வது மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை நிறுவன தினம் | ▪ 1968 ஆம் ஆண்டு மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 1969 ஆம் ஆண்டு மார்ச் 10 அன்று மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை உருவாக்கப் பட்டு, 3 படைப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டன.<br>▪ அதன்பிறகு, இத்தினமானது ஆண்டுதோறும் மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையின் நிறுவன தினமாக அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் 6 துணை இராணுவப் படைப் பிரிவுகளுள் ஒன்றாகும். |
| மார்ச் 14 | சர்வதேச கணித தினம் | ▪ இத்தினத்திற்கான கருத்துரு, "கணிதம் ஒன்றிணைக்கிறது" (Mathematics Unites) என்பது ஆகும். |
| மார்ச் 15 | உலக நுகர்வோர் உரிமைகள் தினம் | ▪ சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் கொண்டாடப்பட்டது. இதில் மேம்படுத்தப்பட்ட பல்வேறு வாடிக்கையாளர் சேவைகளை அவ்வங்கி அறிமுகப்படுத்தியது.<br>▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் மையக்கருத்து "நியாயமான எண்ணிம நிதி வழங்கீடு" என்பதாகும். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **மார்ச் 16** | **தேசியத் தடுப்பூசி தினம்** | ▪ இந்த ஆண்டின் இத்தினத்திற்கான மையக்கருத்து, "Vaccines Work for all" என்பதாகும். |
| **மார்ச் 18** | **உலக மறுசுழற்சி தினம்** | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கவனம் "Recycling Fraternity" என்பதன் மீதானதாக இருக்கும். |
| | **உலக உறக்க தினம்** | ▪ "சரியான உறக்கம், நல்ல மனம், மகிழ்வான உலகம்" (Quality Sleep, Sourd Mind, Happy World) என்பதே இந்த ஆண்டிற்கான கருத்துருவாகும். |
| **மார்ச் 20 முதல் 26 வரை** | **சர்வதேச இளம்பருவத்தினர் ஆரோக்கிய வாரம்** | ▪ இந்த ஆண்டுக்கான இத்தினத்தின் கருத்துரு, மாற்றம் (Transition) என்பதாகும். |
| **மார்ச் 20** | **உலக வாய் சுகாதார தினம்** | ▪ 2022 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Be Proud of Your Mouth" என்பது ஆகும். |
| | **உலக சிட்டுக்குருவி தினம்** | ▪ 2022 ஆம் ஆண்டிற்கான உலக சிட்டுக்குருவி தினத்தின் கருத்துரு, "குருவிகளை நேசியுங்கள்" என்பதாகும். |
| | **சர்வதேச மகிழ்ச்சி தினம்** | ▪ 2022 ஆம் ஆண்டிற்கான மகிழ்ச்சி தினத்தின் கருத்துருவானது, அமைதியாக இருத்தல், புத்திசாலித்தனமாக செயல்படுதல் மற்றும் அன்பாக இருத்தல் (Keep Calm, Stay Wise and Be Kind) என்பதாகும். |
| **மார்ச் 21** | **உலக கவிதை தினம்** | ▪ மனித உள்ளத்தின் படைப்பாக்க உணர்வை உள்ளீர்க்கும் கவிதையின் தனித்துவமான ஒரு திறனை அங்கீகரிப்பதற்காக வேண்டி இவ்வோர் ஆண்டும் இந்தத் தினமானது அனுசரிக்கப் படுகிறது,<br>▪ 1999 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடைபெற்ற யுனெஸ்கோ அமைப்பின் 30வது கூட்டத்தில் யுனெஸ்கோ அமைப்பினால் இத்தினம் ஏற்றுக் கொள்ளப்பட்டது, |
| | **உலக "டவுன் சிண்ட்ரோம்" மரபணு நோய் விழிப்புணர்வு தினம்** | ▪ உலக 'டவுன் சிண்ட்ரோம்' மரபணு நோய் விழிப்புணர்வு தினம் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் நடைபெற்றது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 21 | உலக பொம்மலாட்ட தினம் | ▪ பொம்மலாட்டத்தை உலகளாவிய அளவில் இரு கலை வடிவமாக அங்கீகரிப்பதே இந்த தினம் அனுசரிக்கப்படுவதன் இரு நோக்கமாகும்.<br>▪ இது உலகெங்கிலும் உள்ள பொம்மலாட்டக் கலை வல்லுநர்களுக்கு கௌரவம் செலுத்துவதற்கும் மரியாதை செய்வதற்குமான முயற்சியாகும்.<br>▪ உலகப் பொம்மலாட்ட தினம் 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. |
| மார்ச் 22 | உலக தண்ணீர் தினம் | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Groundwater, making the Invisible Visible" என்பதாகும். |
| மார்ச் 23 | உலக வானிலை தினம் | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் மையக்கருத்து, "முன்னெச்சரிக்கை மற்றும் முன்கூட்டிய நடவடிக்கை" என்பதாகும். |
| மார்ச் 24 | சர்வதேச உண்மைக்கான உரிமை தினம் | ▪ இட்டு மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப் பட்டவர்களின் மரியாதை தொடர்பான உண்மைகளை அறிந்து கொள்வதற்கான உரிமைக்கான சர்வதேச தினமாக ஒவ்வோர் ஆண்டும் இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ அனைவருக்குமான மனித உரிமைகைளை மேம்படுத்துவதற்காகவும் பாதுகாக்கச் செய்வதற்காகவுமான போராட்டங்களில் தங்களது வாழ்வையே அர்ப்பணித்த நபர்களுக்கு மரியாதை செலுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும்.<br>▪ 1980 ஆம் ஆண்டு மார்ச் 24 அன்று படுகொலை செய்யப்பட்ட மான்சிங்னோர் ஆஸ்கார் அர்னுல்ஃபோ ரோமெரோ (Monsignor Oscar Arnulfo Romera) அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் இவ்வோர் ஆண்டும் மார்ச் 24 அன்று இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது, |
| மார்ச் 24 | உலக காசநோய் தினம் | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Irvest to End TB Save Lives" என்பதாகும். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 25 | **கருவில் உள்ள குழந்தைக்கான சர்வதேச தினம்** | ▪ கருவில் உள்ள குழந்தைக்கான சர்வதேச தினம் என்பது கருக்கலைப்புக்கு எதிரான ஒரு நாளாகக் கடைப்பிடிக்கப் படுகின்ற, பிறக்காத கருக்களின் வருடாந்திர நினைவு நாள் ஆகும்.<br>▪ இது போப் இரண்டாம் ஜான் பால் அவர்களால் நிறுவப்பட்டது.<br>▪ 1993 ஆம் ஆண்டில், பிறப்புரிமைத் தினத்தினை அதிகாரப்பூர்வமாக கொண்டாடிய இரு முதல் நாடு ஆக எல் சால்வடார் மாறியது. |
| மார்ச் 26 | **புவி நேரம்** | ▪ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Invest In Our Planet' என்பதாகும். |
| மார்ச் 31 | **திருநங்கையரைக் காணும் நிலையைக் கொண்ட சர்வதேச தினம்** | ▪ விழிப்புணர்வை இத்தினமானது திருநங்கையரைக் கொண்டாடுவதற்கும், அவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடுகள் குறித்த ஏற்படுத்துவதற்கும், சமூகத்திற்கு அவர்கள் ஆற்றியப் பங்களிப்பினைக் கொண்டாடுவதற்குமான ஒரு தினமாகும்.<br>▪ இந்தத் தினமானது 2009 ஆம் ஆண்டில் மிச்சிகனைச் சேர்ந்த அமெரிக்கத் திருநங்கை ஆர்வலரான ரேச்சல் கிராண்டல் என்பவரால் நிறுவப்பட்டது. |

## 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### இந்தியா–இலங்கை கூட்டு கடற்படை பயிற்சி தொடக்கம்

- இந்தியா–இலங்கை இடையிலான 9–வது கூட்டு கடற்படைபயிற்சி தொடங்கியது.
- இந்தியா–இலங்கை இடையிலான கூட்டு கடற்படை பயிற்சி இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. விசாகப்பட்டினம் துறைமுகத்தில் திங்கள்கிழமை தொடங்கிய முதல்கட்டப் பயிற்சி செவ்வாய்க்கிழமையும் தொடரவுள்ளது. அதனைத்தொடர்ந்து வங்கக் கடலில் மார்ச் 9,10–ம் தேதிகளில் இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெற உள்ளது. இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் கிர்ச் கப்பல், இலங்கை கடற்படையின் ரோந்து கப்பலான எல்எல்என்எஸ் சயூரலா ஆகியவை பயிற்சியில் இடம்பெற்றுள்ளன.

### ராணுவ பயிற்சி

- இந்தியா ஜப்பான் இருதரப்பு ராணுவப் பயிற்சி, தர்ம கார்டியன், பெல்காமில் நிறைவடைந்தது.

### இந்தியாவில் உருவாக்கப்பட்ட விமானிகள் பயிற்சி விமானம் ஹன்சா–என்.ஜி.யின் கடல் மட்ட சோதனை வெற்றி

- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் (சிஎஸ்ஐஆர்) ஆய்வுக்கூடங்களில் ஒன்று பெங்களூருவிலுள்ள தேசிய விமானவியல் ஆய்வகம் (என்ஏஎல்). இந்த ஆய்வகம், விமானி பயிற்சிக்காக ஹன்சா என்ற இரு நபர் விமானத்தை 1993–ல் உருவாக்கியது.

- மேம்பட்ட தொழில்நுட்பங்களைக் கொண்டபுதிய தலைமுறை ஹன்சா – என்.ஜி (New Generation) என்ற அடையாளத்தோடு செப்டம்பர் 2021–ல் முதன்முதலாக பறக்க விடப்பட்டது.
- ஹன்சா–என்.ஜி விமானத்தின் கடல்மட்ட சோதனைகள் புதுச்சேரியில் நடைபெற்றன. மணிக்கு 155 கி.மீ வேகத்தில் பறந்த விமானம் பெங்களூருவிலிருந்து புதுச்சேரி வரை உள்ள 140 கடல் மைல் தூரத்தை ஒன்றரை மணி நேரத்தில் அடைந்தது.

# 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

## உலக நாடுகளிடையே ஒத்துழைப்பு

- குறைந்தபட்சம் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஆக்கபூர்வ ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான ஐ.நா.வின் புதிய உயர்நிலை ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்திய பொருளாதார அறிஞர் ஜயதி கோஷ் (66) நியமிக்கப்பட்டுள்ளார்.
- பலதரப்பு ஒப்பந்தங்களை, குறிப்பாக நீடித்த வளர்ச்சிக்கு 2030–ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டத்தை வலுப்படுத்தியும், துரிதப்படுத்தியும் மக்களின் வாழ்வில் உறுதியான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்தச் செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில், குறைந்தபட்சம் மூன்று அல்லது அதற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இடையே ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு ஐ.நா. பொதுச் சபை சார்பில் 12 பேர் அடங்கிய புதிய உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் அறிவித்தார்.

# 1.4 சிறந்த நபர்கள்

## காலமானார் கரந்தைத் தமிழ்ச் சங்க தலைவர் ச.இராமநாதன்

- கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 1983–ஆம் ஆண்டு முதல் 1997–ஆம் ஆண்டு வரை தலைவராகவும், 2000–ஆம் ஆண்டு முதல் 2021–ஆம் ஆண்டு வரை செயலராகவும் பணியாற்றியவர் இவர். 2021–ஆம் ஆண்டு முதல் மீண்டும் தலைவராகப் பொறுப்பேற்று பணியாற்றி வந்தார்.
- இராமநாதன், கரந்தைத் தமிழ்ச் செம்மல், செயல் மாமணி, செம்மொழி வேளிர் போன்ற விருதுகளைப் பெற்றவர்.

## உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஆர்.சி.லகோதி காலமானார்

- உச்சநீதி மன்றத்தின் 37 வது மற்றும் முன்னாள் தலைமை நீதிபதி ஆர்.சி.லகோதி (81), உடல்நலக் குறைவு காரணமாக தில்லியில் உள்ள மருத்துவமனையில் காலமானார்.

# 1.5 விளையாட்டு

## உலக பாரா வில்வித்தை: பூஜாவுக்கு பதக்கம் வெள்ளி

- துபையில் நடைபெற்ற உலக பாரா வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் மகளிர் தனிநபர் பிரிவில் இந்தியாவின் பூஜா ஜத்யன் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.
- இறுதிச்சுற்றில் இத்தாலியின் பெட்ரிலி வின்சென்ஸாவை எதிர்கொண்ட பூஜா, அதில் 3–7 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். பெட்ரிலி, டோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் வெள்ளி வென்றதன் மூலம், உலக

பாரா வில்வித்தையில் தனிநபர் பிரிவில் வெள்ளி வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை பூஜா படைத்திருக்கிறார்.

- இதையடுத்து, 2 வெள்ளிப் பதக்கம் வென்று போட்டியை நிறைவு செய்திருக்கிறது இந்திய அணி.

## டென்னஸ் உலகின் நம்பர் 1 வீரர் ஆனார் டேனியல் மெத்வதெவ்

- ஆடவர் டென்னிஸுக்கான ஏடிபி உலகத் தரவரிசையில் நம்பர் 1 இடத்தை ரஷிய வீரர் டேனியல் மெத்வதெவ் அதிகாரப்பூர்வமாக எட்டினார்.
- இந்த இடத்துக்கு வந்திருக்கும் 27–ஆவது டென்னிஸ் வீரர் மெத்வதெவ்.

| வீரர் | நம்பர் 1 இடத்தில் மொத்த வாரங்கள் | தொடர்ச்சியாக நம்பர் 1 இடத்தில் இருந்த வாரங்கள் | நம்பர் 1 இடத்தை எட்டிய முறைகள் |
|---|---|---|---|
| ரோஜர் ஃபெடரர் | 310 | 237 | 6 |
| பீட் சாம்ப்ராஸ் | 286 | 102 | 11 |
| இவான் லெண்டல் | 270 | 157 | 8 |
| ஜிம்மி கானர்ஸ் | 268 | 160 | 9 |
| ரஃபேல் நடால் | 209 | 56 | 8 |
| ஜான் மெக்கன்ரோ | 170 | 58 | 14 |

## துப்பாக்கி சுடுதல்: இந்திய மகளிரணிக்கு தங்கம்

- எகிப்தில் நடைபெறும் ஐஎஸ்எஸ்எஃப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது.
- இறுதிச்சுற்றில் இந்தியாவின் ஸ்ரீநிவேதா, ஈஷா சிங், ருசிதா வினெர்கர் ஆகியோர் கூட்டணி 16–6 புள்ளிகள் கணக்கில் ஜெர்மனியின் ஆண்ட்ரியா கேத்தரினா ஹெக்னர், சாண்ட்ரா ரீட்ஸ், கேரினா விம்மர் கூட்டணியை வீழ்த்தி முதலிடம் பிடித்தது.

## தேசிய செஸ்: அர்ஜுன் சாம்பியன்

- உத்தர பிதேசத்தில் நடைபெற்ற 58–ஆவது சீனியர் தேசிய செஸ் சாம்பியன்ஷிப்பில் தெலங்கானாவின் அர்ஜுன் எரிகாய்சி வாகை சூடினார்.

## உலக ரேஸ் வாக்கிங்: இந்திய மகளிர் சாதனை

- உலக தடகள ரேஸ் வாக்கிங் சாம்பியன்ஷிப்பில் 20 கி.மீ. பந்தயத்தில் இந்திய மகளிரணி வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது.
- இந்தப் போட்டியின் 61 ஆண்டுகால வரலாற்றில் இந்திய மகளிர் பதக்கம் வென்றிருப்பது இதுவே முதல் முறையாகும். இப்போட்டியில் இந்திய ஆடவர் அணி கடந்த 2012–இல் வெண்கலம் வென்றது நினைவுகூரத்தக்கது.

## உலக டேபிள் டென்னிஸ்: இந்தியாவுக்கு 2 வெள்ளி

- உலக டேபிள் டென்னிஸ் கன்டென்டர் போட்டியில் இந்தியா 2 வெள்ளிப் பதக்கங்களை கைப்பற்றியது.
- மஸ்கட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஒரு பகுதியாக கலப்பு இரட்டையர், மகளிர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டங்கள் நடந்தன.
- கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மானவ் தாக்கர் – அர்ச்சனா காமத் இணை 3–11, 3–11, 6–11 என்ற புள்ளிக் கணக்கில் சீனாவின் வாங்–சென்ஸின்டோங் இணையிடம் தோல்வியுற்றது.
- மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியில் இந்தியாவின் சுதிர்தா–அஹிகா முகர்ஜி 6–11, 11–8, 10–12, 7–11 என்ற புள்ளிக் கணக்கில் சீனாவின் ஸாங் ருய்–குவாய் மான் இணையிடம் தோற்று வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியது.

## 23வது இந்தியப் பெண் கிராண்ட் மாஸ்டர்

- MPLயின் 47வது தேசிய மகளிர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் 19 வயதான பிரியங்கா நுட்டாகி தனது பெண் கிராண்ட் மாஸ்டருக்கான இறுதிக் கட்ட விதிமுறையையும் நிறைவு செய்துள்ளார்.
- இந்தியாவின் 23வது பெண் கிராண்ட் மாஸ்டரான இவர் ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடா நகரைச் சேர்ந்தவராவார்.

## புதிய சாதனை

### மிதாலி ராஜ்

- ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை போட்டிகளில் அதிக ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்தவர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார் இந்தியாவின் மிதாலிராஜ். ஆஸ்திரேலியா

கேப்டன் மெலின்டா கிளார்க் 23 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்தது சாதனையாக இருந்தது. ஆனால் மிதாலி 24 ஆட்டங்களுக்கு கேப்டனாக இருந்து சாதனையை முறியடித்துள்ளார்.

### ஜூலன் கோஸ்வாமி

- ஒருநாள் உலகக் கோப்பை போட்டியில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர் என்ற புதிய சாதனையையும் நிகழ்த்தி உள்ளார் ஜூலன் கோஸ்வாமி. ஆஸ்திரேலியா வீராங்கனை லின்புல்ஸ்டன் 39 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் விக்கெட்டை வீழ்த்தியதின் மூலம் 40 விக்கெட்டுகளுடன் புதிய சாதனையை படைத்துள்ளார்.

## ஆசிய குத்துச்சண்டை: இந்தியாவுக்கு 6 தங்கம்

- ஆசிய யூத் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில், ஜூனியர் பிரிவில் இந்தியாவுக்கு 6 தங்கப் பதக்கங்கள் கிடைத்தன.
- மகளிருக்கான இறுதிச்சுற்றுகளில், 50 கிலோ பிரிவில் வினி– கஜகஸ்தானின் கரினா டோகுபேவையும், 52 கிலோ பிரிவில் யாஷிகா–உஸ்பெகிஸ்தானின் ரகிமா பெக்னியாஸோவாவையும், 57 கிலோ பிரிவில் விதி – ஜோர்டானின் அயா சுவிண்டேவையும் தோற்கடித்து தங்கம் வென்றனர்.
- 60கிலோ பிரிவில் நிகிதா சந்த்–கஜகஸ்தானின் உல்தானா தௌபேவையும், 63 கிலோ பிரிவில் ஷ்ருஷ்டி சாதே – கஜகஸ்தானின் நூர்சுலு சுயினலியையும், 75 கிலோ பிரிவில் ருத்ரிகா – கஜகஸ்தானின்ஷுக்லியா நலிபேவையும் வீழ்த்தினர்.
- மாஹி (46 கிலோ), பாலக் (48 கிலோ), சுப்ரியா (54 கிலோ), குஷி (81 கிலோ), நிர்ஜனா (81+ கிலோ) ஆகியோர் இறுதிச்சுற்றில் தோற்று வெள்ளி பெற்றனர்.

## சந்தோஷ் டிராபி கால்பந்து சாம்பியன்ஷிப்பின் சின்னம் வெளியீடு

- கேரள விளையாட்டுத் துறை அமைச்சர் வி.அப்துரஹிமான், சந்தோஷ் டிராபி கால்பந்து சாம்பியன்ஷிப்பின் சின்னத்தை வெளியிட்டார். திருச்சூர் கே செரியைச் சேர்ந்த பிரதீப் குமார் வடிவமைத்த சின்னம், மாவட்டத்தில் ஏப்ரல் 16 முதல் நடைபெற உள்ள 75வது சந்தோஷ் டிராபிக்கு தேர்வு செய்யப்பட்டது.

## ஆசிய ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்

- ஜோர்டானில் நடைப்பெற்ற 2022 ஏஎஸ்பிசி ஆசிய இளைஞர் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப்பில், வினி, யக்ஷிகா மற்றும் விதி உட்பட ஆறு வீரர்கள் தங்கப் பதக்கங்களை வென்றனர்.

## டெஸ்ட் தொடரும் இந்தியா வசம்

- இலங்கைக்கு எதிரான பிங்க் பந்து டெஸ்டில் இந்தியா 238 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
- இதையடுத்து 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என கைப்பற்றியது.

## ரொனால்டோ சாதனை

- கால்பந்து வரலாற்றில் இது வரையிலான காலகட்டத்தில் உலகிலேயே அதிக கோல்கள் அடித்த நபராக மான்செஸ்டர் யுனைடெட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ சாதனை படைத்திருக்கிறார்.
- இங்கிலீஷ் பிரீமியர் லீக் போட்டியில் டோட்டன் ஹாமுக்கு எதிரான ஆட்டத்தில் ஹாட்ரிக் கோலடித்த ரொனால்டோ, அத்துடன் தனது கால்பந்து வரலாற்றில் மொத்தமாக 807 கோல்களை எட்டினார்.
- முன்னதாக 1931–55 காலகட்டத்தில் ஆஸ்திரேலிய–செக் குடியரசு வீரர் ஜோசஃப் பிகான் 805 கோல்கள் அடித்ததே அதிகபட்சமாக ஃபிஃபா–வால் கணிக்கப்பட்டது.

## ஆசிய குத்துச்சண்டை: 5 இந்தியர்களுக்கு தங்கம்

- ஆசிய யூத் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில், யூத் மகளிர் பிரிவில் இந்தியர்கள் 5 பேர் தங்கப் பதக்கம் வென்றனர்.
- 50 கிலோ பிரிவில் தமன்னா, 48 கிலோ பிரிவில் நிவேதிதா வென்றனர். அதேபோல், 60 கிலோ பிரிவில் ஷாஹீன் உஸ்பெகிஸ்தானின் முக்லிசா டோகிரோவாவையும், 63 கிலோ பிரிவில் ரவீனா, 75 கிலோ பிரிவில் முஸ்கான் தோற்கடித்தனர்.
- எனினும், 66கிலோ பிரிவில் பிரியங்கா, 81+ கிலோ பிரிவில் கீர்த்தி தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றனர். இத்துடன் யூத் மகளிர் பிரிவில் இந்தியா 12 பதக்கங்கள் வென்றது.

## டெஸ்ட் தொடரும் இந்தியா வசம்

- இலங்கைக்கு எதிரான பிங்க் பந்து டெஸ்டில் இந்தியா 238 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
- இதையடுத்து 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என முழுமையாகக் கைப்பற்றியது.

## ரொனால்டோ சாதனை

- கால்பந்து வரலாற்றில் இது வரையிலான காலகட்டத்தில் உலகிலேயே அதிக கோல்கள் அடித்த நபராக மான்செஸ்டர் யுனைடெட் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ சாதனை படைத்திருக்கிறார்.
- இங்கிலீஷ் பிரீமியர் லீக் போட்டியில் டோட்டன் ஹாமுக்கு எதிரான ஆட்டத்தில் ஹாட்ரிக் கோலடித்த ரொனால்டோ, அத்துடன் தனது கால்பந்து வரலாற்றில் மொத்தமாக 807 கோல்களை எட்டினார்.
- முன்னதாக 1931–55 காலகட்டத்தில் ஆஸ்திரேலிய–செக் குடியரசு வீரர் ஜோசஃப் பிகான் 805 கோல்கள் அடித்ததே அதிகபட்சமாக ஃபிஃபா–வால் கணிக்கப்பட்டது.

## ஆசிய குத்துச்சண்டை: 5 இந்தியர்களுக்கு தங்கம்

- ஆசிய யூத் மற்றும் ஜூனியர் குத்துச்சண்டை போட்டியில், யூத் மகளிர் பிரிவில் இந்தியர்கள் 5 பேர் தங்கப் பதக்கம் வென்றனர்.
- 50 கிலோ பிரிவில் தமன்னா, 48 கிலோ பிரிவில் நிவேதிதா வென்றனர். அதேபோல், 60 கிலோ பிரிவில் ஷாஹீன் உஸ்பெகிஸ்தானின் முக்லிசா டோகிரோவாவையும், 63 கிலோ பிரிவில் ரவீனா, 75 கிலோ பிரிவில் முஸ்கான் தோற்கடித்தனர்.
- எனினும், 66கிலோ பிரிவில் பிரியங்கா, 81+ கிலோ பிரிவில் கீர்த்தி தோல்வி கண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றனர். இத்துடன் யூத் மகளிர் பிரிவில் இந்தியா 12 பதக்கங்கள் வென்றது.

## ஒலிம்பியாட் 2022 போட்டி தமிழக அரசு அறிவிப்பு

- சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டி முதன்முறையாக இந்தியாவில், சென்னையில் நடைபெற உள்ளது.
- சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு (FIDE) செஸ் ஒலிம்பியாட் 2022 சர்வதேச சதுரங்க போட்டியை சென்னையில் நடத்துவதற்கான ஏலத்தில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.
- நடந்துகொண்டிருக்கும் போர் சூழ்நிலை காரணமாக, செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டியை ரஷியாவிலிருந்து வெளியேற்றுவதாக FIDE அறிவித்த பிறகு, பல நாடுகள் இந்த வாய்ப்பை பயன்படுத்த முயற்சித்தது.

## ஆசிய குத்துச்சண்டை போட்டிகள்

- ஆசிய ஜூனியர் மற்றும் இளைஞர் குத்துச்சண்டை விஸ்வநாத் சுரேஷ் – (48) தங்கம், வன்வுஜ் – (63) தங்கம்.
- இளைஞர் பிரிவில் – 7 தங்கம், 3 வெள்ளி, 8 வெண்கலம், ஜூனியர் பிரிவில் – 8 தங்கம், 7 வெள்ளி, 6 தங்கம். மொத்தம்– 39 பதக்கங்கள்.

## வரலாறு படைத்தார் லக்ஷயா சென்

- ஆல் இங்கிலாந்து பாட்மின்டன் சாம்பியன்ஷிப் போட்டி ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச் சுற்றில் நுழைந்து வரலாறு படைத்தார் இந்தியாவின் இளம் வீரர் லக்ஷயா சென்.
- இதன் மூலம் இந்த போட்டியில் இறுதிச் சுற்றுக்கு நுழைந்த 5–ஆவது வீரர் என்ற சிறப்பைப் பெற்றார். கடைசியாக 21 ஆண்டுகளுக்கு முன்பு 2001–இல் கோபிசந்த் இறுதிச்சுற்றில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார். 1947 பிரகாஷ் நாத், 1980, 1981 பிரகாஷ் படுகோன், 2001 கோபிசந்த் ஆகியோர் இறுதிக்கு தகுதி பெற்றிருந்தனர்.
- ஒலிம்பிக் சாம்பியன் விக்டர் ஆக்ஸ்லெஸன் அல்லது செள டியன் சென்னை எதிர்கொள்வார் சென்.

## பாரா தடகளம்: தேசாய்க்கு தங்கம்

- துபையில் நடைபெறும் பாரா தடகள கிராண்ட் ப்ரீ போட்டியில் ஓட்டப்பந்தய வீரர் பிரணவ் பிரசாந்த் தேசாய் தங்கப்பதக்கம் வென்றார். இப்போட்டியில் இந்தியாவுக்குக் கிடைத்த முதல் தங்கம் இதுவாகும்.
- ஆடவருக்கான 200 மீட்டர் தேசாய் ஓட்டத்தில் '964' பிரிவு இறுதிச்சுற்றில் தேசாய் 24.42 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். தாய்லாந்தின் டென்பூம் கோட்சாரங் (25.78 விநாடிகள்), நார்வேயின் கென்னெத் ஜென்சென் ஹெக்டால் (27.08 விநாடிகள்) ஆகியோர் முறையே வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கம் பெற்றனர். இதனிடையே இப்போட்டியில், ஆடவர் வட்டு எறிதலில் 'எஃப்44' பிரிவில் இந்தியாவின் தேவேந்திரா வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

### தோஹா டேபிள் டென்னிஸ்: சத்தியன்/மனிகாவுக்கு வெள்ளி

- தோஹாவில் நடைபெற்ற டபிள்யூடிடி கன்டென்டர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜி.சத்தியன்/மனிகா பத்ரா இணைக்கு வெள்ளிப்பதக்கமும், சரத் கமலுக்கு வெண்கலப்பதக்கமும் கிடைத்தன.
- கலப்பு இரட்டையர் பிரிவில் சத்தியன்/மனிகா இணை இறுதிச்சுற்றில் 4–11, 5–11, 3–11 என்ற கணக்கில் சீன தைபேவின் லின் யுன் ஜு/செங் ஐசிங் ஜோடியிடம் வெற்றியை இழந்தது.

### ஸ்விஸ் ஓபன்: சிந்து சாம்பியன்

- ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் பிரணாய் 12–21, 18–21 என்ற நேர் கேம்களில், போட்டித்தரவரிசையில் 4–ஆம் இடத்திலிருந்த இந்தோனேசியாவின் ஜோனதன் கிறிஸ்டியிடம் வீழ்ந்தார்.
- ஸ்விஸ் ஓபன் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து சாம்பியன் பட்டம் வென்றார். ஆடவர் பிரிவில் ஹெச்.எஸ்.பிரணாய் 2–ஆம் இடம் பிடித்தார்.
- கடந்த ஜனவரியில் சையது மோடி சர்வதேசப் பாட்மின்டன் போட்டியில் வாகை சூடிய சிந்துவுக்கு, நடப்பு சீசனில் இது 2–ஆவது சாம்பியன் பட்டமாகும்.

### தில்லி சர்வதேச செஸ்: அர்ஜுன் சாம்பியன்

- தில்லியில் நடைபெற்ற 19–ஆவது சர்வதேச செஸ் போட்டியில் கிராண்ட்மாஸ்டரும், தேசிய சாம்பியனுமான அர்ஜுன் எரிகாய்சி பட்டம் வென்றார்.
- தற்போது லைவ் இலோ தரவரிசையில் 2,675 புள்ளிகளுடன் அவர் இருப்பதால், சென்னையில் நடைபெறவிருக்கும் செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியாவின் பிரதான அணிக்கு அவர் தேர்வாகிறார் எனத் தெரிகிறது.

### ஸ்டார் கண்டெண்டர்: மணிகா/அர்ச்சனாவுக்கு வெண்கலம்

- WTT ஸ்டார் கண்டெண்டர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிகா பத்ரா/அர்ச்சனா காமத் இணை வெண்கலப் பதக்கம் வென்றது.

## 1.6 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### தமிழகத்தின் 7 பேர் உள்பட 49 ஆசிரியர்களுக்கு தேசிய விருது

- தமிழகத்தைச் சேர்ந்த 7 ஆசிரியர்கள் உள்பட நாடு முழுவதும் 49 ஆசிரியர்களுக்கு தேசிய தகவல், தொலைத்தொடர்பு தொழில்நுட்ப (ஐசிடி) விருதுகளை மத்திய கல்வித் துறை இணையமைச்சர் அன்னபூர்ணா தேவி வழங்கினார்.
- 2020–ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை அடிப்படையில், கற்பித்தல், கற்றல் செயல்முறைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விரிவான பயன்பாடு, திட்டமிடலை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு இந்த விருதுகளை மத்திய கல்வித் துறை வழங்குகிறது. கல்வி கற்பிப்பதில் திஷா, இ–பாடசாலை திட்டங்களின் கீழ் மின்னணு முறையில் பாடங்களைத் தயாரித்தல்.
- தேசிய கல்விக் கொள்கை–2020, கற்பித்தல், கற்றல் நடைமுறைகளில் தொழில்நுட்பத்தை அதிகம் பயன்படுத்துவதை வலியுறுத்துகிறது. மொழித் தடைகளை அகற்றுகிறது. கல்வித் திட்டங்கள், மேலாண்மையுடன் கல்வி கற்பதை அதிகரித்துள்ளது. நாட்டின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு பாராட்டத்தக்கது. இந்திய சமூகத்தில் ஆசிரியர்களுக்கு அதிக மரியாதை அளிக்கப்படுகிறது.

#### என்எல்சி நிறுவனத்துக்கு விருது

- விபத்தின்றி இயங்கியது மற்றும் அதிக உற்பத்தி திறனை வெளிப்படுத்தியதற்காக என்எல்சி இந்தியாவுக்கு 4 தேசிய விருதுகள் வழங்கப்பட்டன. கடந்த 2020–ஆம் ஆண்டுக்கான தேசிய பாதுகாப்பு விருதை மத்திய தொழிலாளர், வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் புபேந்தர் யாதவ் வழங்க என்எல்சி இந்தியா சார்பில் சுரங்கத் துறை செயல் இயக்குநர் சுரேஷ் சந்திர சுமன் மற்றும் பாதுகாப்பு அதிகாரி பாரதிதாசன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

### 54 பேருக்கு பத்ம விருதுகள்: குடியரசுத் தலைவர் வழங்கினார்

- இந்தியாவின் முதல் முப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத்துக்கு மறைவுக்குப் பிந்தைய

பத்ம விபூஷண் விருது, காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், டாடா குழுமத் தலைவர் என். சந்திரசேகரன் உள்பட மொத்தம் 54 பேருக்கு பத்ம விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கி கௌரவித்தார்.

- குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில், விபின் ராவத்துக்கு வழங்கப்பட்ட நாட்டின் உயர்ந்த இரண்டாவது விருதான பத்ம விபூஷண் விருதை அவரின் மகள்கள் பெற்றுக்கொண்டனர்.
- ஹிந்து மத புத்தகங்களைப் பதிப்பிக்கும் கீதா பிரஸ்சின் முன்னாள் தலைவர் மறைந்த ராதேஷியாம்கேம்காவுக்கு வழங்கப்பட்ட பத்ம விபூஷண் விருதை அவரது நெருங்கிய உறவினர் பெற்றுக்கொண்டார்.
- 125 வயது யோகா பயிற்சியாளர் சுவாமி சிவானந்தாவுக்கு பத்மஸ்ரீ விழி விருதை வழங்கி குடியரசுத் தலைவர் கௌரவித்தார். வெறும் கால்களோடு எளிமையான உடையணிந்து வந்த அவருக்கு நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரும் கைத்தட்டி பாராட்டு தெரிவித்தனர்.
- டாடா குழும தலைவர் என்.சந்திரசேகரன், காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம் நபி ஆசாத், சீரம் நிறுவனத்தின் நிறுவனர் சைரஸ் பூனாவாலா உள்ளிட்ட 8 பேருக்கு பத்ம பூஷண் விருதுகள் வழங்கப்பட்டன.
- தமிழகத்தைச் சேர்ந்த கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம், திருச்சி விராலி மலையைச் சேர்ந்தசதிர் நடனக்கலைஞர் முத்துகண்ணம்மாள், திருச்சியைச் சேர்ந்த கிளாரினெட் கலைஞர் ஏ.கே. சி. நடராஜன் ஆகியோருக்கு பத்மஸ்ரீ விருதை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த வழங்கி கௌரவித்தார்.
- நாட்டின் குடியரசு தினத்தையொட்டி ஆண்டுதோறும் பத்ம விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. நிகழாண்டு மொத்தம் 128 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன. அதில் நான்கு பத்ம விபூஷண் விருதுகளும், 17 பத்ம பூஷண் விருதுகளும், 107 பத்மஸ்ரீவிருதுகளும் அடங்கும். இதில் முதல்கட்டமாக 54 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருது இந்த ஆண்டு யாருக்கும் அறிவிக்கப்படவில்லை.

## 65 பேருக்கு பத்ம விருதுகள்: குடியரசுத் தலைவர் வழங்கினார்

- சென்னையைச் சேர்ந்த மருத்துவர் வி.சேஷய்யா, நடிகை சௌகார் ஜானகி ஆகியோர் பத்மஸ்ரீ விருதைப் பெற்றுக்கொண்டனர்.
- இந்த ஆண்டு 4 பேருக்கு பத்ம விபூஷண், 17 பேருக்கு பத்ம பூஷண், 107 பேருக்கு பத்ம ஸ்ரீ என மொத்தம் 128 பேருக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டன. இதில் 65 பேருக்கு பத்ம விருதுகள் வழங்கப்பட்டன.
- மறைந்த பாஜக தலைவரும் உத்தர பிரதேச முன்னாள் முதல்வருமான கல்யாண் சிங்குக்கு பத்ம விபூஷண் விருது அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த விருதை கல்யாண் சிங்கின் மகனும் மக்களவை எம்.பி.யுமான ராஜ்வீர் சிங்கிடம் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- மருத்துவ சேவைக்காக சென்னையைச் சேர்ந்த சக்கரை நோய் மருத்துவ நிபுணர் வி.சேஷய்யா, கலைச் சேவைக்காக முதுபெரும் தமிழ் நடிகை சௌகார் ஜானகி, புதுச்சேரியைச் சேர்ந்த தவில் இசைக்கலைஞர் கொங்கம்பட்டு ஏ.வி. முருகையன், சுகாதார சேவைக்காக திருச்சியைச் சேர்ந்த தாமோதரன் உள்ளிட்டோர் பத்ம ஸ்ரீ விருது பெற்றனர்.
- கோவோக்ஸின் கரோனா தடுப்பூசியை உருவாக்கிய பாரத் பயோடெக் நிறுவனத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி எல்லா, மைக்ரோசாஃப்ட் தலைமை நிர்வாக அதிகாரி சத்யா நாதெள்ளா, கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை உள்ளிட்டோருக்கும் பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. ஆனால் அவர்கள் வரவில்லை.

## ஆஸ்கர் விருதுகள் 2022

- 'டியூன்' திரைப்படம் 6 விருதுகளை வென்றது. நடிகர் வில் ஸ்மித் முதல் முறையாக சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதைப் பெற்றார்.
- சிறந்த நடிகருக்கான விருதை 'கிங் ரிச்சர்டு' திரைப்படத்தில் நடித்த வில் ஸ்மித் பெற்றார்.
- சிறந்த திரைப்படம்: கோடா
- சிறந்த அந்நியமொழித் திரைப்படம் – டிரைவ்மை கார் (ஜப்பான்)
- சிறந்த இயக்குநர் – ஜேன் கேம்பியன் (தி பவர் ஆஃப் தி டாக்)
- சிறந்த நடிகர் – வில் ஸ்மித் (கிங் ரிச்சர்டு)
- சிறந்த நடிகை – ஜெசிகா சேஸ்டெயின் (தி ஐஸ் ஆஃப் டேம்மி ஃபேயி)
- சிறந்த குணச்சித்திர நடிகர் – ட்ரோய் கோட்சர் (கோடா)
- சிறந்த குணச்சித்திர நடிகை – அரியானா டிபோஸ் (வெஸ்ட் சைடு ஸ்டோரி )

- சிறந்த அனிமேஷன் திரைப்படம் – என்கேன்டோ (ஜரீத் புஷ், பைரன் ஹோவர்டு, கிளார்க் ஸ்பென்சர்)
- சிறந்த அனிமேஷன் குறும்படம் – தி விண்ட்ஷீல்டு வைப்பர் (ஆல்பர்டோ மியால்கோ, லியோ சான்செஸ்)
- சிறந்த ஆவணப்படம் – சம்மர் ஆஃப் சோல் (அஹ்மீர் தாம்ப்சன், ஜோசஃப் படேல்).
- சிறந்த ஆவணக் குறும்படம் – தி குயின் ஆஃப் பேஸ்கட்பால் (பென் பிரவுட்ஃபுட்)
- சிறந்த அசல் திரைக்கதை – கோடா (சியான் ஹெடர்)
- சிறந்த பாடல் – "நோ டைம் டை" (பில்லி ஐலிஷ், பினியஸ் ஓ கானல்)
- சிறந்த ஒளிப்பதிவு – டியூன் (கிரேக்க பிரேசர்)
- சிறந்த படத்தொகுப்பு – டியூன் (ஜோ வாக்கர்)
- சிறந்த கலை வடிவமைப்பு – டியூன் (பாட்ரிஸ் வெர்மெட்)
- சிறந்த விஷுவல் எஃபெக்ட் – டியூன் (பால் லேம்பர்ட், டிரிஸ்டன் மைல்ஸ்)
- சிறந்த ஒலித்தொகுப்பு – டியூன் (முக் ரூத், மார்க் மங்கினி)
- சிறந்த பின்னணி இசை – டியூன் (ஹான்ஸ் ஜிம்மர்)
- சிறந்த ஆடை வடிவமைப்பு – குரூவெல்லா (ஜென்னி பீவன்)
- சிறந்த ஒப்பனை, கூந்தல் அலங்காரம் தி ஐஸ் ஆஃப் டேம்மி ஃபேயி (லிண்டா டோட்ஸ், ஸ்டீபனி இங்ரம், ஜஸ்டின் ராலே).

## மூத்த எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு சாகித்திய அகாதெமியின் உயரிய அங்கீகாரம்

- மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, சாகித்திய அகாதெமியின் உயரிய ஃபெல்லோஷிப் அங்கீகாரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- இலக்கியத்துக்கு நீண்ட காலமாகத் தொண்டாற்றிய எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் சாகித்திய அகாதெமி ஃபெல்லோஷிப் அங்கீகாரம் தமிழகத்தைச் சேர்ந்த ராஜாஜி, தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், கே.ஆர். சீனிவாச ஐயங்கார், ஜெயகாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது மூத்த தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதிக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## நீர் மேலாண்மை: தமிழகத்துக்கு 6 தேசிய விருதுகள்

- மத்திய அரசின் நீர் மேலாண்மைத் திட்டத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழகத்துக்கு 6 தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் தில்லியில் நடைபெற்ற விழாவில் இந்த விருதுகளை மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் வழங்கினார்.
- நீர் மேலாண்மையில் மக்களையும் பல்வேறு தரப்பினரையும் முழுமையாக ஈடுபடுத்துவதை ஊக்குவிக்கும் வகையில், தேசிய நீர் விருதுகளை மத்திய அரசு கடந்த 2018–ஆம் ஆண்டு அறிவித்தது. தண்ணீரின் முக்கியத்துவம் குறித்துமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயனுள்ள நீர் மேலாண்மை நடைமுறைகளைப் பின்பற்றுபவர்களை ஊக்குவிக்கவும் இந்த விருது வழங்கப்படுகிறது.
- இதில் சிறந்த மாநிலம், மாவட்டம், ஊராட்சி, பள்ளிகள், தனியார் நிறுவனம், தொழிற்சாலைகள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட 11 பிரிவுகளில் மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சகம் சார்பில் ஆண்டுதோறும் 57 தேசிய நீர் விருதுகள் வழங்கப்படுகின்றன.
- நீர் மேலாண்மையில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களை ஜல் சக்தித்துறையின் சிறப்புக் குழு, மாநில வாரியாக நேரில் கள ஆய்வு செய்து விருதுகளை வழங்கி வருகிறது.
- தமிழகம் 3–ஆம் இடம்: நிகழாண்டு மூன்றாவது தேசிய நீர் விருதுகள் வழங்கும் விழா தில்லி விஞ்ஞான் பவனில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கிய மாநிலங்களின் பட்டியலில் முதலிடத்தை உத்தர பிரதேச மாநிலம் பிடித்தது. இதற்கான விருதை அந்த மாநிலத்துக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.
- இரண்டாம் இடத்தை ராஜஸ்தான் மாநிலம் பெற்றது. மூன்றாம் இடம் பிடித்த தமிழகத்துக்கு மத்திய அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் விருது வழங்கினார். தமிழக நீர்வளத் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் சந்தீப் சக்சேனா இந்த விருதைப் பெற்றுக்கொண்டார். 2020–ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இரண்டாவது தேசிய நீர் விருதில், தமிழகம் முதலாவது இடத்தைப் பிடித்திருந்தது.

- காவேரிப்பட்டினம் பள்ளிக்கு முதல் பரிசு: நீர் மேலாண்மையில் சிறந்த பள்ளிகள் பிரிவில் கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அந்த விருதை பள்ளியின் தலைமையாசிரியை வளர்மதி பெற்றுக் கொண்டார். புதுச்சேரி மணப்பட்டு அரசுப் பள்ளி மூன்றாவது இடம் பெற்றது. விருதை பள்ளித் தலைமை ஆசிரியர் பழனிச்சாமி பெற்றுக்கொண்டார்.
- செங்கல்பட்டு, மதுரைக்கு பரிசு: சிறந்த ஊராட்சி பிரிவில் (தென் மண்டல அளவில்) செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளப்புதூர் ஊராட்சி இரண்டாம் பரிசு பெற்றது. இதற்கான விருதை ஊராட்சி துணைத் தலைவர் விஜயகுமார் பெற்றுக் கொண்டார். சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பிரிவில் மதுரை மாநகராட்சிக்கு 3-ஆவது பரிசு கிடைத்தது. இதற்கான விருதை மதுரை மேயர் இந்திராணி பெற்றுக்கொண்டார்.

**நீர் பாதுகாப்பில் அனைவரும் இணைய வேண்டும்**

- நீர் பாதுகாப்பில் அனைவரும் இணைய வேண்டுமென பொதுமக்களுக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அழைப்பு விடுத்தார். மேலும், நீர் பாதுகாப்பில் மாவட்ட நிர்வாகமும், கிராம ஊராட்சிகளும் சிறப்பான பங்கு வகிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.
- தில்லியில் நடைபெற்ற விழாவில், மழைநீர் சேகரிப்பு இயக்கத்தின் கீழ் 3-ஆவது தேசிய நீர் மேலாண்மை விருதுகளை வழங்கினார் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்.

# 1.7 நியமனங்கள்

## செபி தலைவராக மாதவி புரி நியமனம்

- இந்திய பங்கு பரிவர்த்தனை ஒழுங்காற்று வாரியத்தின் (செபி) தலைவராக மாதவி புரி புச் நியமிக்கப்பட்டுள்ளார். செபிதலைவ ராகபெண் ஒருவர் பதவியேற்பது இதுவே முதல்முறையாகும்.
- நிதி, வங்கித் துறையில் நீண்ட அனுபவமுள்ள மாதவி, தனியார் துறையில் பணியாற்றி செபி தலைமைப் பொறுப்பேற்கும் முதல் நபர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். அடுத்த 3 ஆண்டுகளுக்கு அவர் இப்பொறுப்பில் இருப்பார்.

## விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் நியமனம்

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்களாக என்.ராமச்சந்திரன், அசோக் சிகாமணி ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
- இதற்கான உத்தரவை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலர் அபூர்வா பிறப்பித்தார்.

## தெற்கு ரயில்வேயின் முதன்மை பணியாளர் நியமனம்

- கே.ஹரி கிருஷ்ணன் அவர்கள் தெற்கு இரயில்வேயின் முதன்மை தலைமை பணியாளர் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் புதியத் தலைவர்

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவின் (Financial Action Task Force) புதியத் தலைவராக சிங்கப்பூரைச் சேர்ந்த T.ராஜா குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவானது உலகின் பண மோசடி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பிற்கான நிதித்தடுப்பு நிறுவனமாகும்.
- இவரது 2 ஆண்டுக்கால பதவிக் காலம் ஜூலை 01 அன்று தொடங்குகிறது.
- ராஜாவின் நியமனமானது, சிங்கப்பூர் இந்த அமைப்பின் ஒரு தலைமைத்துவத்தினை முதன் முறையாக ஏற்கும் நிகழ்வைக் குறிக்கிறது.

## IRDAI தலைவர் நியமனம்

- காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையராக (IRDAI) இந்தியா முன்னாள் நிதி சேவை செயலாளர் தேபாசிஷ் பாண்டா தலைவராக நியமிக்கப்பட்டார்.

## ஏர் இந்தியா புதிய தலைவராக என். சந்திரசேகரன் நியமனம்

- ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைவராக டாடாசன்ஸ் குழுமத்தின் தலைவரான என். சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- கடனில் சிக்கிய பொதுத்துறை நிறுவனமான ஏர் இந்தியாவை தனியாருக்கு விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்து அதற்கான ஏலம் நடைபெற்றது. டாடா சன்ஸ் நிறுவனத்தின் பிரிவான டலேஸ் நிறுவனம் அதிகபட்ச தொகைக்கு வாங்க முன்வந்தது.
- ஏர் இந்தியா நிறுவனமானது கடந்த ஜனவரி மாதம் முறைப்படி டாடா குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஏர் இந்தியா புதிய தலைவராக என். சந்திரசேகரன் நியமனம்

- ஏர் இந்தியா நிறுவனத்தின் புதிய தலைவராக டாடாசன்ஸ் குழுமத்தின் தலைவரான என். சந்திரசேகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- கடனில் சிக்கிய பொதுத்துறை நிறுவனமான ஏர் இந்தியாவை தனியாருக்கு விற்பனை செய்ய மத்திய அரசு முடிவு செய்து அதற்கான ஏலம் நடைபெற்றது. டாடா சன்ஸ் நிறுவனத்தின் பிரிவான டலேஸ் நிறுவனம் அதிகபட்ச தொகைக்கு வாங்க முன்வந்தது.
- ஏர் இந்தியா நிறுவனமானது கடந்த ஜனவரி மாதம் முறைப்படி டாடா குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

## சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 2 கூடுதல் நீதிபதிகள் நியமனம்

- சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 2 கூடுதல் நீதிபதிகள் உள்பட 5 உயர்நீதிமன்றங்களுக்கு 9 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- சென்னை,ஜம்மு–காஷ்மீர், தில்லி, பாட்னா உயர்நீதிமன்றங்களுக்கு தலா 2 நீதிபதிகளும், அலாகாபாத் உயர்நீதிமன்றத்துக்கு ஒரு நீதிபதியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- புதிய நீதிபதிகளை இந்திய அரசியல் சட்டம் அளித்துள்ள அதிகாரத்தின்படி உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலை., துணைவேந்தராக வி.கீதாலட்சுமி நியமனம்

- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வி.கீதாலட்சுமி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமன உத்தரவை ஆளுநர் ஆர்.என்.ரவி நேரில் வழங்கினார். பதவியேற்ற தினத்தில் இருந்து மூன்று ஆண்டுகளுக்கு துணைவேந்தராக அவர் செயல்படுவார்.

## மத்திய திரைப்பட சான்றளிப்பு வாரிய மண்டல அதிகாரி நியமனம்

- மத்திய திரைப்பட சான்றளிப்பு வாரியத்தின் சென்னை மண்டல அதிகாரியாக சஞ்சய் கோஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

வாய்மையே வெல்லும்



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### வீட்டுவசதித் திட்டத்தால் பெண்களுக்கு அதிகாரம்

- வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் குடும்பத் தலைவிகளின் பெயரில் வீடுகள் பதிவு செய்யப்படுவதால், குடும்பத்தில் அவர்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்து, அதிகாரம் பெற்றவர்களாக விளங்குவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 80 லட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு நிதிநிலை அறிக்கையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் மத்திய பிரதேசத்தில் 30.5 லட்சம் வீடுகளைக் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 24 லட்சம் வீடுகள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் வாழும் பழங்குடியின மக்கள் இத்திட்டதால் பெரிதும் பலனடைந்துள்ளனர்.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### அசிட்டா புலாரியா ஜலகான்யகே

- இது இந்தியாவில் புதிதாக கண்டறியப்பட்ட ஒரு கடல்பாசியாகும்.
- இது பஞ்சாப் மத்தியப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இந்திய அறிவியலாளர் குழுவால் அந்தமான் நிகோபர் தீவுத் திரளில் கண்டறியப்பட்டது.
- அறிவியலாளர்கள் 2019 ஆம் ஆண்டில் மேற்கொண்ட அந்தமான் பயணத்தின் போது இந்த இனத்தைக் கண்டறிந்தனர்.

### அரிய வகை பட்டாம்பூச்சி இனம் தென்பட்டது

- ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீலகிரியில் காணப்படாத அரிய வகை பட்டாம்பூச்சி இனம் ஸ்பாட்டட் ராயல் (தாஜூரியா மக்குலாட்டா), வைன்டர்பிளைத் சங்கத்தின் (WBA) உறுப்பினர்களால் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.
- WynterBlyth சங்கம் 2015 முதல் பட்டாம்பூச்சிகளை பற்றி பதிவுசெய்து வருகிறது.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சி பெறும் நாடு என்ற நிலையை தக்கவைத்துள்ள இந்தியா

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 2021–22 ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் 5.4 சதவீதமாக குறைந்துள்ளது. இருந்தபோதும், இதே கால கட்டத்தில் சீனாவின் 4 சதவீத ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வளர்ச்சியைக் காட்டிலும் இந்தியா கூடுதல் வளர்ச்சி பெற்றுள்ளதோடு, உலகின் வேகமான பொருளாதார வளர்ச்சி பெறும் மிகப் பெரிய நாடு என்ற நிலையை தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது தெரியவந்துள்ளது.
- நிகழ் நிதியாண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 20.3 சதவீதமாகவும், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் 8.5 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. தேசிய புள்ளியியல் அலுவலகம் (என்எஸ்ஓ) இரண்டாவது தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான முன்கூட்டிய மதிப்பீட்டை வெளியிட்டது.
- அதன்படி, 2021–22 ஆம் ஆண்டுக்கான நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த ஜனவரியில் வெளியிடப்பட்ட முதல் முன்கூட்டிய மதிப்பீட்டைக் காட்டிலும் வளர்ச்சி விகிதம் சற்று குறைவாகும். அப்போது, பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக கணிக்கப்பட்டிருந்தது.
- அதுபோல, முந்தைய 2020–21 ஆம் நிதியாண்டில், முதல் முன்கூட்டிய மதிப்பீட்டில் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீதமாக கணிக்கப்பட்டது. பின்னர், கரோனா பாதிப்பின் தாக்கத்தை கருத்தில் கொண்டு என்எஸ்ஓ (NSO) வெளியிட்ட திருத்திய மதிப்பீட்டில் வளர்ச்சி விகிதம் 6.6 சதவீதமாக சரிந்தது.
- அந்த வகையில், 2020–ஆம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி விகிதம் ஏப்ரல்–ஜூன் காலாண்டில் 23.8 சதவீதமாகவும், ஜூலை–செப்டம்பர் காலாண்டில் 6.6 சதவீதமாகவும் பதிவானது என்று என்எஸ்ஓ தெரிவித்துள்ளது.
- மேலும், நிலையான விலைகளில் ஜிடிபி 2020–21 மூன்றாவது காலாண்டில் ரூ. 36.26 லட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பட்ட நிலையில், 2021–22 ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் ரூ.38.22 லட்சம் கோடியாக மதிப்பீடு செய்யப்பப்பட்டது.

### பிப்ரவரி ஜிஎஸ்டி வசூல் ரூ.1.33 லட்சம் கோடியாக சரிவு

- கடந்த ஜனவரிமாதம் ரூ.1.40 லட்சம் கோடி சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி வசூலான நிலையில், பிப்ரவரி மாதம் ரூ.1.33 லட்சம் கோடியாக சரிந்தது.
- இதுதொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:
- கடந்த பிப்ரவரி மாதம் ரூ.1,33,026 கோடி ஜிஎஸ்டி வசூலாகியுள்ளது. இதில் மத்திய ஜிஎஸ்டி ரூ.24,435 கோடி. மாநில ஜிஎஸ்டி ரூ.30,779 கோடி. ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி ரூ.67,471 கோடி (சரக்குகள் இறக்குமதி மூலம் வசூலான ரூ.33,837 கோடியும் அடங்கும்), செஸ் வரி (ரூ.10,340 கோடி (சரக்குகள் இறக்குமதி மூலம் வசூலான ரூ.638 கோடியும் அடங்கும்). கடந்த ஆண்டு பிப்ரவரியில் வசூலான ஜிஎஸ்டியைவிட, இந்த ஆண்டு பிப்ரவரியில் ஜிஎஸ்டி வசூல் 18 சதவீதம் அதிகரித்துள்ளது.

## இந்தியாவின் ஏற்றுமதி ரூ.2.53 லட்சம் கோடி

- இந்தியாவின் ஏற்றுமதி கடந்த பிப்ரவரி மாதத்தில் 3,381 கோடி டாலராக (ரூ.2.53 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.
- இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் பொறியியல், ரசாயனங்கள், பெட்ரோலியம் உள்ளிட்ட துறை களின் ஏற்றுமதி சிறப்பாக இருந்ததையடுத்து பிப்ரவரியில் ஏற்றுமதி 22.36 சதவீதம் அதிகரித்து 3,381 கோடி டாலரை எட்டியுள்ளது. அதே போன்று, இறக்குமதியும் 35 சதவீதம் உயர்ந்து 5,500 கோடி டாலரானது. இதையடுத்து வர்த்தக பற்றாக்குறை 2,119 கோடி டாலராக உயர்ந்தது.
- 2021 பிப்ரவரியில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கு இடையிலான வித்தியாசமான வர்த்தக பற்றாக்குறை 1,312 கோடி டாலராக காணப்பட்டது.

## இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் தலைவராக மாதவி புரி பொறுப்பேற்பு

- இந்திய பங்கு பரிவர்த்தனை ஒழுங்காற்று வாரியத்தின் தலைவராக மாதவி புரி புச் (57) பொறுப்பேற்றுக் கொண்டார்.
- செபியின் தலைவராக இருந்த அஜய் தியாகியின் ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவுக்கு வரவிருந்ததையடுத்து அந்தப் பதவிக்கு மாதவி புரி நியமனம் செய்யப்பட்டார். முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பொறுப்புக்கு பெண் ஒருவர் நியமிக்கப்படுவதும்; அவர் அரசு பணி சாராதவர் என்பதும் இதுவே முதல் முறை.
- பதவியேற்பு நிகழ்ச்சியில் மாதவி கூறியது: அஜய் தியாகியின் கடினமான உழைப்பு செபிக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது.

## அடிப்படை அம்சங்களைக் கொண்ட கைப்பேசிக்கும் யுபிஐ வசதி ஆர்பிஐ ஆளுநர் தொடக்கிவைத்தார்

- அடிப்படை அம்சங்களைக் கொண்ட கைப்பேசி மூலமாகவும் யுபிஐ பணப் பரிவர்த்தனை மேற்கொள்வதற்கான வசதியை இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஆளுநர் சக்திகாந்த தாஸ் தொடக்கி வைத்தார்.
- அறிதிறன் பேசியைப் பயன்படுத்தி யுபிஐ வாயிலாக இணைய வழியில் பணப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கான வசதியை இந்திய தேசிய பணப் பரிவர்த்தனை கழகம் (என்பிசிஐ) கடந்த 2016–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அடிப்படை அம்சங்களைக் கொண்ட கைப்பேசிக்கும் அந்த வசதி அப்போதே அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், தொலைத்தொடர்பு நிறுவனங்களின் ஆர்வமின்மை, அதிக கட்டணம், சிக்கலான வழிமுறைகள் உள்ளிட்டவற்றின் காரணமாக அந்த வசதி மக்களிடையே போதிய வரவேற்பைப் பெறவில்லை.
- இந்நிலையில், அடிப்படை அம்சங்களைக் கொண்ட கைப்பேசி மூலமாகவும் யுபிஐ பணப் பரிவர்த்தனை மேற்கொள்வதற்கான வசதியை ஆர்பிஐ ஆளுநர் சக்திகாந்த தாஸ் மும்பையில் தொடக்கிவைத்தார்.

## LIC பங்கு வெளியீட்டுக்கு செபி அனுமதி

- LIC நிறுவனத்தின் பொதுப் பங்கு வெளியீட்டுத் திட்டத்துக்கு பங்குச் சந்தை ஒழுங்காற்று அமைப்பான செபி அனுமதி அளித்துள்ளது.
- பொதுப்பங்கு வெளியீட்டில் களமிறங்க அனுமதி கோரி செபியிடம் LIC நிறுவனம் விண்ணப்பித்திருந்தது. இந்தப் பங்கு வெளியீட்டில் மத்திய அரசின் 5 சதவீத பங்குகளை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, 31.6 கோடி பங்குகள் விற்பனைக்கு வரவுள்ள நிலையில், LIC நிறுவன பணியாளர் மற்றும் பாலிசிதாரர்களுக்கு சலுகை விலையில் பங்குகளை விற்க முடிவ செய்யப்பட்டுள்ளது.
- தற்போது, இந்தப் பொதுப் பங்கு வெளியீட்டுக்கான அனுமதியை செபி வழங்கியுள்ளது. இது, நடப்பு நிதியாண்டில் பங்கு விற்பனை மூலம் ரூ.63,000 கோடி திரட்டும் மத்திய அரசின் திட்டத்துக்கு உதவியாக இருக்கும்.

### LIC

- துவக்கம் – 1956
- தலைமையிடம் – மும்பை
- தலைவர் – M.R.குமார்

### செபி

- துவக்கம் – 1988
- சட்ட அங்கீகாரம் – 1992
- தலைமையிடம் – மும்பை
- தலைவர் – Madhabi Puri Buch

## ஜனவரி மாதத்தில் இந்தியாவில் தொழில்துறை 1.3% வளர்ச்சி

- டிசம்பரில் வளர்ச்சி – 0.7%
- உற்பத்தி சதவிதம் – 1.1%
- சுரங்கத்தின் மூலம் கணிம உற்பத்தி – 2.8%
- மின்சார உற்பத்தி – 0.9 உயர்ந்துள்ளது.
- நுகர்வோர் பயன்படுத்தும் பொருட்களின் உற்பத்தி ஐந்தாவது மாதமாக 3.3% குறைந்துள்ளது.

## வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி 8.1%–ஆக குறைப்பு

- நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் தொழிலாளர்களின் வருங்கால வைப்புநிதிக்கான வட்டி விகிதத்தை 8.1 சதவீதமாக குறைக்க தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (இபிஎஃப்ஓ) முடிவெடுத்துள்ளது. இது 44 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்தபட்ச வட்டி விகிதமாகும்.

## இந்தியாவின் பொருள்கள் ஏற்றுமதி 11,130 கோடி டாலராக உயரும்

- இந்தியாவின் பொருள்கள் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் நான்காவது காலாண்டில் 11,130 கோடி டாலராக அதிகரிக்கும் என எக்ஸிம் வங்கி தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த வங்கியின் மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நடப்பு நிதியாண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான நான்காம் காலாண்டில் இந்தியப் பொருள்களின் ஏற்றுமதி 11,130 கோடி டாலர் அளவுக்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, இந்திய மதிப்பில் ரூ.8.35 லட்சம் கோடியாகும். இந்தியாப் பொருள்கிளன் ஏற்றமதி காலாண்டுகளில் தொடர்ந்து 10,000 கோடி டாலரை தாண்டுவது இது மூன்றாவது முறையாகும்.
- எண்ணெய் சாராத பொருள்களின் ஏற்றுமதி மட்டும் நான்காவது காலாண்டில் 9,520 கோடி டாலர் அளவுக்கு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, ஒட்டுமொத்த ஏற்றுமதியளவு 41,400 கோடி டாலரைத் தாண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜிஎஸ்டி இழப்பீடு காலத்தை நீட்டிக்க மாநிலங்கள் வலியுறுத்தல்

- ஜிஎஸ்டி இழப்பீடு கால வரையறை நிகழாண்டு ஜூன் மாதத்துடன் நிறைவடையும் நிலையில், அதனை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்குமாறு பெரும்பாலான மாநில அரசுகள் கோரிக்கை விடுத்திருப்பதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.
- நாட்டில் சரக்கு, சேவை வரிச் சட்டம் (ஜிஎஸ்டி) கடந்த 2017–ஆம் ஆண்டு ஜூலை 1–இல் அமலுக்கு வந்தது.
- இந்தச் சட்டத்தின்படி, மாநிலங்களுக்கு வரி வருவாயில் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் வகையில், முதல் ஐந்து ஆண்டுகளில் 2 மாதங்களுக்கு ஒருமுறை இழப்பீடு வழங்கப்படும் என மத்திய அரசு உறுதியளித்தது. இந்த வரையறை வரும் ஜூன் மாதத்துடன் நிறைவடைகிறது.

## சில்லறை பணவீக்கம் 6.07%–ஆக அதிகரிப்பு

- நாட்டில் கடந்த பிப்ரவரி மாதத்தில் சில்லறை பணவீக்கம் 6.07 சதவீதமாகவும், மொத்த விலை குறியீட்டென் (பிள்யுபிஐ) அடிப்படையிலான பணவீக்கம் 13.11 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.
- நாட்டில் சில்லறை பணவீக்கமானது கடந்த ஜனவரி மாதத்தில் 6.01 சதவீதமாக இருந்தது. கடந்த மாதத்தில் பணவீக்கம் மேலும் அதிகரித்து 6.07 சதவீதமாகியுள்ளது. இது இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) நிர்ணயித்துள்ள 6 சதவீத இலக்கை விட அதிகமாகும். கடந்த 6 மாதங்களில் இல்லாத அளவுக்கும் பணவீக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு பிப்ரவரியில் பணவீக்கமானது 5.03 சதவீதமாக இருந்தது. உணவுப் பொருள்களின் விலை உயர்ந்ததே பணவீக்க அதிகரிப்புக்கான காரணமாகக் கூறப்படுகிறது. சில்லறை பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்டே நிதிக்கொள்கை சார்ந்த முடிவுகளை ஆர்பிஐ மேற்கொண்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வட்டி விகிதங்களை ஆர்பிஐ தொடர்ந்து மாற்றாமலேயே உள்ளது. உக்ரைன் மீதான ரஷியாவின் தாக்குதல், ஆர்பிஐ–யின் நிதிக்கொள்கையிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஜிஎஸ்டி இழப்பீடு காலத்தை நீட்டிக்க மாநிலங்கள் வலியுறுத்தல்

- ஜிஎஸ்டி இழப்பீடு கால வரையறை நிகழாண்டு ஜூன் மாதத்துடன் நிறைவடையும் நிலையில், அதனை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்குமாறு பெரும்பாலான மாநில அரசுகள் கோரிக்கை விடுத்திருப்பதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- நாட்டில் சரக்கு, சேவை வரிச் சட்டம் (ஜிஎஸ்டி) கடந்த 2017–ஆம் ஆண்டு ஜூலை 1–இல் அமலுக்கு வந்தது.
- இந்தச் சட்டத்தின்படி, மாநிலங்களுக்கு வரி வருவாயில் ஏற்படும் இழப்பை ஈடுசெய்யும் வகையில், முதல் ஐந்து ஆண்டுகளில் 2 மாதங்களுக்கு ஒருமுறை இழப்பீடு வழங்கப்படும் என மத்திய அரசு உறுதியளித்தது. இந்த வரையறை வரும் ஜூன் மாதத்துடன் நிறைவடைகிறது.

## 4.2 இந்தியப் பொருளாதாரத்தின் தற்போதைய போக்குகள்

### சில்லறை பணவீக்கம் 6.07%–ஆக அதிகரிப்பு

- நாட்டில் கடந்த பிப்ரவரி மாதத்தில் சில்லறை பணவீக்கம் 6.07 சதவீதமாகவும், மொத்த விலை குறியீட்டென் (WPI) அடிப்படையிலான பணவீக்கம் 13.11 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.
- நாட்டில் சில்லறை பணவீக்கமானது கடந்த ஜனவரி மாதத்தில் 6.01 சதவீதமாக இருந்தது. கடந்த மாதத்தில் பணவீக்கம் மேலும் அதிகரித்து 6.07 சதவீதமாகியுள்ளது. இது இந்திய ரிசர்வ் வங்கி (RBI) நிர்ணயித்துள்ள 6 சதவீத இலக்கை விட அதிகமாகும். கடந்த 6 மாதங்களில் இல்லாத அளவுக்கும் பணவீக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு பிப்ரவரியில் பணவீக்கமானது 5.03 சதவீதமாக இருந்தது. உணவுப் பொருள்களின் விலை உயர்ந்ததே பணவீக்க அதிகரிப்புக்கான காரணமாகக் கூறப்படுகிறது. சில்லறை பணவீக்கத்தை அடிப்படையாகக் கொண்டே நிதிக்கொள்கை சார்ந்த முடிவுகளை ஆர்பிஐ மேற்கொண்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வட்டி விகிதங்களை ஆர்பிஐ தொடர்ந்து மாற்றாமலேயே உள்ளது. உக்ரைன் மீதான ரஷியாவின் தாக்குதல், ஆர்பிஐ–யின் நிதிக்கொள்கையிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

### 'பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கு வழங்கப்படும் இடஒதுக்கீடு 50% உச்ச வரம்பை மீறாது'

- 1992–இல் இந்திரா சாஹ்னி வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படியும் அரசியல் சானத்தின்படியும் இடஒதுக்கீட்டில் அதிகபட்ச உச்சவரம்பு 50 சதவீதம் என்பது மீறப்படாது. பட்டியல் இனத்தவர்கள், பழங்குடியினர் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இந்த 50 சதவீதத்துக்குள்ளே இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- 2019–ஆம் ஆண்டின் 103–ஆவது அரசியல் சாசனத்திருத்தத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்றவர்களுக்கும் 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இது அதிகபட்ச இடஒதுக்கீடான 50 சதவீத உச்சவரம்பை மீறாது.
- அரசியல் சாசனத்தின் 15 (6) மற்றும் 16 (6) பிரிவின் விதிகளின் கீழ் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு வழங்கப்படும் 10 சதவீத ஒதுக்கீடு, மற்ற பிரிவினர்களுக்கு (எஸ், எஸ்டி, ஓபிசி) வழங்கப்படும் இடஒதுக்கீட்டிலிருந்து வேறுபட்டது.

### 6 ஆண்டுகளில் விவசாயிகள் கடன் 53% உயர்ந்துள்ளது

- 2015–16 – 12 லட்சம் கோடி, 6.9 கோடி
- 2020–21 – 18.4 லட்சம் கோடி, 10 கோடி
- கடந்த ஆறு வருடத்தில் மகாராஷ்டிரா மாநிலத்தில் விவசாயிகள் கடன் 119% உயர்ந்துள்ளது.
- மகாராஷ்டிரா மாநிலத்தில் விவசாயிகள் பெற்ற டன் மதிப்பு 5.5 லட்சம் கோடி.
- தேசிய ஆவண அறிக்கை தகவலின்படி அதிக அளவிலான விவசாயிகள் தற்கொலை மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்படுகிறது.
- விவசாயிகள் கடன் அதிகளவில் உயர்ந்துள்ள மாநிலங்கள்
- ஒடிசா – 76%
- தமிழ்நாடு – 68%
- ஆந்திர பிரதேசம் – 65%
- குஜராத் – 64%

### இந்திய பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை குறைத்தது மூடிஸ் நிறுவனம்

- நடப்பு ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 9.1 சதவீதமாக குறைத்து மூடிஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

- ரஷியா மற்றும் உக்ரைன் நாடுகளிடையே ஏற்பட்டுள்ள கடுமையான போர் பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் என்பது மதிப்பீடுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## இந்திய தங்க சுரங்கத்தின் உற்பத்தி 1.6 டன்: WGC

- இந்திய சுரங்கங்களிலிருந்து கடந்த 2020–ஆம் ஆண்டில் 1.6 டன் தங்கம் மட்டுமே வெட்டியெடுக்கப்பட்டுள்ளதாக உலக தங்க கவுன்சில் (WGC) தெரிவித்துள்ளது.
- இது குறித்து அந்த கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறியது: உலக அளவில் தங்கத்துக்கான நுகர்வோர்களை அதிகம் கொண்ட நாடாக இந்தியா இருந்த போதிலும், அதற்கான சுரங்க சந்தை என்பது சிறிய அளிவிலேயே காணப்படுகிறது. அதில், யாரும் எளிதில் நுழைந்துவிட முடியாத சூழலே நிலவுகிறது.
- இந்த நிலையில், கடந்த 2020–ஆம் ஆண்டில் இந்திய சுரங்கங்களிலிருந்து வெறும் 1.6 டன் தங்கமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், நீண்ட கால அடிப்படையில் இந்தியாவின் தங்க சுரங்கத்தின் உற்பத்தி ஆண்டுக்கு 20 டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்திய தங்க சுரங்கத் துறையைப் பொருத்தவரையில், ஒழுங்காற்று அமைப்பு சால்கள், வரிவிதிப்பு கொள்கைகள் மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்டவை மிகப்பெரும் சவாலாக உள்ளதாக டபிள்யூஜிசி தெரிவித்துள்ளது.

## கோவிஷீல்ட்: 8–16 வாரங்களில் இரண்டாம் தவணை மத்திய அரசுக்கு பரிந்துரை

- 'கோவிஷீல்ட் கரோனா தடுப்பூசி முதல் தவணை செலுத்திய 8 முதல் 16 வாரங்களிலேயே இரண்டாம் தவணையை செலுத்தலாம்' என்று தடுப்பூசிக்கான தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (என்டிஏஜிஐ) மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.
- இந்தியாவில் புணேயைச் சேர்ந்த சீரம் நிறுவனத்தின் கோவிஷீல்ட், ஹைதராபாத் பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவேக்ஸின் உள்ளிட்ட கரோனா தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன.

## 'ஜிஎஸ்டி வரம்பில் கிரிப்டோகரன்சி'

- கிரிப்டோகரன்சி பரிமாற்றத்துக்கு சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) விதிப்பது தொடர்பாக அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.
- தற்போதைய சூழலில் கிரிப்டோ பரிவர்த்தனைகள் வாயிலான சேவைகளை 'நிதிசார்' சேவைகளாகக் கணக்கில் கொண்டு 18 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்பட்டு வருகிறது. ஆனால், லாட்டரி, சூதாடுதல், குதிரை பந்தயம் உள்ளிட்டவற்றுக்கு விதிக்கப்படுவது போல கிரிப்டோகரன்சி பரிவர்த்தனைக்கும் 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்பட வேண்டுமென அதிகாரிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## மொத்த வாடிக்கையாளர்களுக்கு டீசல் விலை லிட்டருக்கு ரூ.25 அதிகரிப்பு

- மொத்தமாக டீசலை கொள்முதல் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அதன் விலை லிட்டருக்கு ரூ.25 அதிகரிக்கப்பட்டுள்ளது.
- சில்லறை விற்பனைக்கான விலையில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

## வீடுகளின் விலை அதிகரிப்பு உலகப் பட்டியலில் இந்தியாவுக்கு 51–ஆவது இடம்

- உலக அளவில் வீடுகளின் விலை அதிகரிப்பு பட்டியலில் இந்தியா 2.1 சதவீதத்துடன் 51–ஆவது இடத்தில் இருப்பதாக சொத்து ஆலோசனை நிறுவனமான நைட்ஃப்ராங்க் தெரிவித்துள்ளது.
- துருக்கி இந்த பட்டியலில் முதலிடத்தில் உள்ளது அதற்கு அடுத்தபடியாக, நியூஸிலாந்து (22.6%), செக்குடியரசு (22.1%), ஸ்லோவேக்கியா (22.1%), ஆஸ்திரேலியா (21.8%) ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியா 2.1 சதவீத உயர்வுடன் இப்பட்டியலில் 51–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

## இந்தியாவின் வளர்ச்சி மதிப்பீட்டை 8.5%–ஆக குறைத்தது ஃபிட்ச்

- அடுத்த நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 8.5 சதவீதமாக குறைத்துள்ளதாக தரமதிப்பீட்டு நிறுவனமான ஃபிட்ச் தெரிவித்தது.
- ரஷியா மற்றும் உக்ரைன் இடையேயான போர் சர்வதேச அளவில் பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது. ரஷியா மீது அமெரிக்கா

உள்ளிட்ட பல உலக நாடுகள் தொடர்ச்சியாக வர்த்தக தடை அறிவிப்புகளை வெளியிட்டு வருவது சர்வதேச ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது.

- அதேசமயம், நடப்பு நிதியாண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீடு 0.6 சதவீதம் உயர்த்தப்பட்டு 8.7 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பாஜக ஆட்சியில் அந்நிய நேரடி முதலீடு 65% அதிகரிப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமன்

- நரேந்திர மோடி தலைமையிலான அரசு, 50,000 கோடி டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.37.80 லட்சம் கோடி) அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது. இது, முந்தைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 10 ஆண்டுகால ஆட்சியில் பெறப்பட்ட முதலீட்டைவிட 65 சதவீதம் அதிகமான தொகை என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

## கரோனா பலி 40% உயர்வு: உலக சுகாதார அமைப்பு

- சர்வதேச அளவில் கரோனா பாதிப்பால் கடந்த வாரம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை முந்தைய வாரத்தைவிட 40 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
- கடந்த வாரத்தில் சர்வதேச அளவில் சுமார் 45,000 கரோனா மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அதற்கு முந்தைய வாரத்தில் சுமார் 33,000 பேர் மட்டுமே கரோனாவுக்கு பலியாகினர். அந்த எண்ணிக்கை, அதற்கும் முந்தைய வாரத்தை விட 23 சதவீதம் குறைவாகும்.

**உலக சுகாதார அமைப்பு** (WHO)

- தலைவர் – டெட்ராஸ் அதானம் கெப்ரியேசஸ்
- தலைமையகம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- தொடக்கம் – 1948
- ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் செயல்படும் அமைப்பாகும்.

# 5.அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### பிரமோஸ் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட இலக்கு சோதனை வெற்றி

- கப்பலில் இருந்து நிலப்பரப்பில் உள்ள இலக்கை துல்லியமாகதாக்கும் பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையின் நீட்டிக்கப்பட்ட இலக்கைத் தாக்கும் சோதனை வெற்றிகரமாக நடைபெற்றது.
- 'ஐஎன்எஸ் சென்னை' போர்க் கப்பலில் இருந்து பிரமோஸ் சூப்பர்சானிக் ஏவுகணையைச் செலுத்தும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையின் போது நீட்டிக்கப்பட்ட இலக்கை ஏவுகணை மிகத் துல்லியமாகத் தாக்கியது.
- பிரமோஸ் ஏவுகணையும் அதனை ஏவிய 'ஐஎன்எஸ் சென்னை' போர்க்கப்பலும் உள்நாட்டிலேயே நவீன ஆற்றலுடன் தயாரிக்கப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பாகும்.
- தற்சார்பு இந்தியா, இந்தியாவில் தயாரிப்போம் ஆகிய இந்தியாவின் முன்முயற்சிகளில் இந்திய கடற்படையின் பங்களிப்பாக இது அமைந்துள்ளது.
- இந்த சோதனை மூலம், இந்திய கடற்படை, கடலில் இருந்து வெகு தொலைவில் நிலப்பகுதியில் உள்ள இலக்கை குறிப்பிட்ட எந்தக் குறிப்பிட்ட நேரத்திலும் குறிவைத்து துல்லியமாகத் தாக்கும் திறனைப் பெற்றிருப்பது சாதனையாக கருதப்படுகிறது என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### MRSAM ஏவுகணைகள் சோதனை வெற்றி

- தரையில் இருந்து வானை நோக்கி ஏவப்படும் இரு நடுத்தர ரக 'MRSAM' ஏவுகணைகள் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டன.
- MRSAM ஏவுகணையானது தரையில் இருந்து ஏவப்பட்டு வானில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன்கொண்டது. ராணுவத்தில் பயன்படுத்தப்படும் இரு MRSAM ஏவுகணைகள் ஒடிஸாவின் பாலேசுவரம் பகுதியில் இருந்து ஏவி பரிசோதிக்கப்பட்டன.
- இரு ஏவுகணைகளும் இலக்கை மிகத் துல்லியமாகத் தாக்கி அழித்ததாகவும், பரிசோதனை வெற்றிகரமாக இருந்ததாகவும் டிஆர்டிஓ தெரிவித்தது. வானில் மிக வேகமாகப் பறந்த இலக்கை MRSAM ஏவுகணைகள் துல்லியமாகத் தாக்கி அழித்ததாகவும் டிஆர்டிஓ அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- MRSAM ஏவுகணையானது டிஆர்டிஓ, இஸ்ரேல் வான்வெளி தொழிலகம் (ஐஏஐ) ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்டது. அந்த ஏவுகணையில் ரேடார் உள்ளிட்ட நவீன கருவிகள் இடம்பெற்றுள்ளன. அந்த வகை ஏவுகணைகளானது இந்திய ராணுவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### தரையிலிருந்து வான் இலக்கைத் தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றி: டிஆர்டிஓ

- ஒடிஸாவின் பாலேசுவரம் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஏவுகணை சோதனை தளத்தின் 3–ஆவது ஏவுதளத்திலிருந்து 2 ஏவுகணைகள் தரைப்பரப்பிலிருந்து வான் இலக்கை தாக்கி அழிக்கும் சோதனை நடத்தப்பட்டது.

டிஆர்டிஓ (DRDO)

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (Defence Research and Development Organisation, டி. ஆர். டி. ஓ) என்பது ஆசியாவின் மிகப் பெரிய விண்வெளித்தொழில் துறை மற்றும் ஆயுதம் உற்பத்தியாளர்களுள் முன்னனி நிறுவனங்களுள் ஒன்று. இதன் தலைமையிடம் இந்தியாவின் தலைநகரமான புது தில்லியில் அமைந்துள்ளது. இது 1958இல் நிறுவப்பட்டது. இதற்கு இந்தியா முழுவதும் 51 கிளைகள் உள்ளது.
- அமைப்பு – 1958;
- தலைமையகம் – DRDO பவன், புது தில்லி
- பொறுப்பான அமைச்சர்கள் – ராஜ்நாத் சிங்

# 6

# தினசரி தேசிய நிகழ்வு



## விரைவு சக்தி பெருந்திட்டம் செலவையும், நேரத்தையும் குறைக்கும்

- பிரதமரின் விரைவு சக்தி தேசிய திட்டத்தில் கட்டமைப்புக்குத் திட்டமிடுதல், அமலாக்கம், கண்காணிப்பு ஆகியவை புதிய திசையைப் பெறும். இது திட்டத்துக்கு ஆகும் செலவையும், கால நேரத்தையும் குறைக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- நிதி நிலை அறிக்கைக்கு பிந்தைய மெய்நிகர் முறையிலான 6–ஆவது கருத்தரங்கு 'விரைவு சக்தி தேசிய திட்ட கட்டமைப்புத் திட்டமிடலின் தொலைநோக்குப் பார்வை குறித்து நடைபெற்றது.

## பருவநிலை மாற்றத்தால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும்

- பருவநிலை மாற்றத்தால் இந்தியாவில் உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என எச்சரித்துள்ள ஐ.நா. அறிக்கை, கடலோரப் பகுதிகளில் உள்ள மக்கள் கடல்மட்ட உயர்வால் பாதிக்கப்படுவர் என்றும் தெரிவித்துள்ளது.
- இந்தியாவுக்கு அதிக பாதிப்பு: கடல் மட்ட உயர்வு, திடீர் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பைச் சந்திக்கும் நாடாக இந்தியா விளங்கும். கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கவுள்ளதாக இந்தியா உறுதியளித்துள்ளது. அவ்வாறு குறைக்கும்பட்சத்தில், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பொருளாதார இழப்பு சுமார் ரூ.1.68 லட்சம் கோடியாக இருக்கும். இல்லையெனில் இழப்பு சுமார் ரூ.2.52 லட்சம் கோடியாக அதிகரிக்கும்.

#### முக்கிய அம்சங்கள்

- கரியமில வாயு வெளியேற்றம் தொடர்ந்து அதிகரித்தால், ஈரக்குமிழ் வெப்பநிலை (வெப்பம், ஈரப்பதத்தின் அளவீடு) 35 டிகிரி செல்சியஸைத் தாண்டும்.
- லக்னௌ, பாட்னா நகரங்ளில் அந்த வெப்பநிலை 35 டிகிரியை விட அதிகமாக இருக்கும்.
- புவனேசுவரம், சென்னை, மும்பை, இந்தூர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் ஈரக்குமிழ் வெப்பநிலை 32 முதல் 34 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும்.
- கடல்மட்ட உயர்வு, திடீர் வெள்ளம் உள்ளிட்டவற்றால் பொருளாதார ரீதியில் அதிக பாதிப்பை சந்திக்கும் நாடாக இந்தியா இருக்கும்.
- ஒட்டுமொத்தமாக அஸ்ஸாம், மேகாலயம், திரிபுரா, மேற்கு வங்கம், பிகார், ஜார்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர், உத்தர பிரதேசம், ஹரியாணா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் அதிகமாக பாதிக்கப்படும்.
- 2050–ஆம் ஆண்டில் 40 சதவீத மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்வர். தற்போது 33 சதவீத மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வருகின்றனர்.
- புவனேசுவரம், சென்னை, மும்பை, இந்தூர், அகமதாபாத் ஆகிய நகரங்களில் ஈரக்குமிழ் வெப்பநிலை 32 முதல் 34 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கும்.
- உலகின் சராசரி வருமானம் 23 சதவீதம் வரை குறையும். இந்தியாவில் 2100–ஆம் ஆண்டுக்குள் 92 சதவீதம் வரை குறையும்.
- உலகின் பல நாடுகள் பொருளாதார ரீதியில் பாதிப்புகளை எதிர்கொள்ளும். நடப்பாண்டு இறுதியில் இந்தியாவின் பொருளாதாரம் 92 சதவீதம் வரை வீழ்ச்சியடையும்.

## 2030–க்குள் புதைபடிவ எரிமம் அற்ற 500 ஜிகாவாட் எரிசக்தி

- வரும் 2030–க்குள் நிலக்கரி போன்ற புதை படிவ எரிமம் அற்ற 50 சதவீத எரிசக்தி நிறுவும் திறனை இந்தியா அடையும்; இதன் மூலம், 500 ஜிகாவாட் புதைபடிவ எரிமம் அற்ற எரிசக்தித் திறன் இலக்கை அடைய முடியும் என பிரதமர் மோடி தெரிவித்தார்.

- பட்ஜெட்டுக்கு பிந்தைய 9–ஆவது தொடர் மெய்நிகர் வழிக் கருத்தரங்கில் "நீடித்த வளர்ச்சிக்கான எரிசக்தி" குறித்து பிரதமர் மோடி உரையாற்றினார். நீடித்த வளர்ச்சிக்கான எரிசக்தி என்பது இந்திய பாரம்பரியத்தை எதிரொலிப்பதுடன், வருங்காலத் தேவைகளை எட்டுவதற்கு ஒரு வழியாகவும் உள்ளது. 2070–ஆம் ஆண்டுக்குள் கரியமிலவாயு மாசற்ற உலகை அடைவதற்கான உறுதியை இந்தியா, கிளாஸ்கோ மாநாட்டில் அளித்துள்ளது. இதை முன்னிட்டு 500 ஜிகாவாட் எரிசக்தித் திறன் என்கிற இலக்கில் 2030–ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதம் வரை புதைபடிவ எரிமம் அற்ற எரிசக்தி நாட்டில் நிறுவப்படும்.
- சமீபத்தில் தேசிய ஹைட்ரஜன் இயக்கம் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் எரிசக்திக்குரிய பசுமை ஹைட்ரஜன் மையமாக இந்தியா மாறவும் வாய்ப்பு உள்ளது. நாட்டின் எரிசக்தித் தேவை வருங்காலத்தில் அதிகரிக்கும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நோக்கி மாற வேண்டும்.
- இந்தூரில் அண்மையில் "கோபர்–தான்" நிலையம் (நகராட்சி திடக்கழிவு அடிப்படையிலான உயிரி–அழுத்த மூட்டப்பட்ட இயற்கை எரிவாயு) தொடங்கப்பட்டது.

## மத்திய ஜல் ஜீவன் அமைச்சர் தலைமையில் தென் மாநில அமைச்சர்கள் கூட்டம்

- வீடுகளுக்கு நேரடியாக குடிநீர் வழங்கும் ஜல் ஜீவன் இயக்கம், கிராமங்களுக்கு இலவச கழிப்பறை உள்ளிட்ட தூய்மை இந்தியா திட்டங்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்காக தமிழகம் உள்ளிட்ட ஆறு தென் மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் அமைச்சர்களின் பிராந்திய கூட்டம் மத்திய ஜல் சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் தலைமையில் (மார்ச் 5) பெங்களூரில் நடைபெற்றது.

## ரியல் எஸ்டேட் துறையில் அந்நிய முதலீடு 3 மடங்கு உயர்வு

- இந்திய ரியல் எஸ்டேட் துறையில் அந்நிய முதலீட்டு வரத்து 2017–21–க்கு இடைப்பட்ட காலத்தில் 3 மடங்கு அதிகரித்துள்ளதாக கோலியர்ஸ்–ஃபிக்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அதன்படி, இந்திய ரியல் எஸ்டேட் துறையில் அந்நிய முதலீடு 2012–2016 காலகட்டத்தில் 750 கோடி டாலராக இருந்த நிலையில், 2017–21–க்கு இடைப்பட்ட காலத்தில் 2,390 கோடி டாலராக உயர்ந்துள்ளது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முழுமையாக ஆராயப்படாத இமயமலை வளம்

- இமயமலை பகுதிகளில் காணப்படும் புவிசார் வளங்கள் இன்னமும் முழுமையாக ஆராயப்படவில்லை என்றும், ஆராயப்பட்டால் இமயமலை பிராந்தியத்தின் சமூக–பொருளாதார வளர்ச்சி மட்டுமின்றி ஒட்டுமொத்த தேசத்துக்கும் உதவிகரமாக இருக்கும் என்றும் மத்திய அறிவியல், தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- உத்தரகண்ட் மாநிலம் டேராடூனில் உள்ள வாடியா ஹிமாலயன் புவியியல் நிறுவன வளாகத்தில் ஆராய்ச்சியாளர்களுக்கான விடுதியை காணொலி வாயிலாக திறந்து வைத்து அவர் பேசினார்.
- அறிவியல்பூர்வமாக சமூக மேம்பாட்டிற்கு உதவிடும் வகையில் நிலநடுக்கம், நிலச்சரிவு, பனிச்சரிவு, திடீர் வெள்ளம் போன்றவற்றால் ஏற்படும் புவிசார் அபாயங்கள் குறித்த அறிவியல் விளக்கம், மதிப்பீடு, மேலாண்மை மற்றும் தணிப்பு ஆகியவற்றை வழங்கும் நோக்கத்துடன் புவிவெப்பம், தாதுக்கள், தாது பொருள்கள், ஹைட்ரோகார்பன், நீரூற்று, ஆற்றங்கரை அமைப்பு போன்ற புவிசார் வளங்கள் குறித்தும் இந்நிறுவனம் ஆய்வு செய்கிறது.
- இவைதவிர, நீர் மின் திட்டங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த மதிப்பீட்டை வழங்குவதுடன், இமயமலைப் பகுதிகளில் சாலை கட்டுமானம், ரோப்வே, ரயில்வே, சுரங்கப்பாதை போன்ற மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த மதிப்பீட்டையும் இந்நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது.
- எரிசக்தி பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு, தொழில்துறை விரிவாக்கம், மேலாண்மை மற்றும் புவிசார் அபாயங்களை தணித்தல், சூழலியல் மற்றும் பல்லுயிர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் புவி அறிவியல் முக்கிய பங்கு வகிக்கிறது என்றார் ஜிதேந்திர சிங்.

## சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் நிகழ்ச்சி

- வெளிநாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகளுடன் இந்திய தேர்தல் ஆணையம் அதன் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும் நோக்கில், சர்வதேச தேர்தல் பார்வையாளர்கள் நிகழ்ச்சியை காணொலி வாயிலாக (மார்ச் 7) நடத்துகிறது. உத்தர பிரதேசத்தில் இறுதிகட்ட வாக்குப் பதிவு நடைபெறும் நிலையில், இந்நிகழ்வுக்கு தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

- சர்வதேச அளவில் சென்றடையவும், வெளிநாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகளை உலகின் மிகப்பெரிய ஜனநாயக தேர்தல் அமைப்புடன் ஒருங்கிணைக்கவும் இந்தத் நிகழ்ச்சி வழி வகுக்கும்.
- மேலும் கரோனா வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உள்பட்டு தேர்தல் நடைமுறை அனுபவங்களை வெளிநாடுகளின் தேர்தல் நிர்வாக அமைப்புகளுடன் பகிரவும் இந்த நிகழ்ச்சி வாய்ப்பாக அமைந்துள்ளது.

## புதிய தலைமுறை ரக பயிற்சி விமானம் "ஹன்சா–என்ஜி" சோதனை ஓட்டம் நிறைவு

- சிவில் விமானப் பயிற்சிக்கு முதன்முறையாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட புதிய தலைமுறையைச் சேர்ந்த ஹன்சா–என்ஜி விமானத்தை அறிவியல், தொழிலக ஆய்வுக் கவுன்சில் (சிஎஸ்ஐஆர்) உருவாக்கியுள்ளது. இந்தப் பயிற்சி விமானம் புதுச்சேரியில் கடல் அளவிலான சோதனைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை தெரிவித்துள்ளது.
- நாட்டில் தற்போது சிவில் விமானப் பயிற்சிக்கு பிரான்ஸ் உள்ளிட்ட வெளிநாடுகளில் வாங்கப்பட்ட சிறியரக ஜெட் விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், தற்போது முதன்முறையாக உள்நாட்டிலேயே பயிற்சி விமானமான 'ஹன்சா–என்ஜியை மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை உருவாக்கியுள்ளது.
- இதுகுறித்து மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை தெரிவித்ததாவது: மத்திய அரசின் நிறுவனமான அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் கவுன்சிலின் கீழ், பெங்களூருவில் சிஎஸ்ஐஆர்–தேசிய ஏரோஸ்பேஸ் ஆய்வகம் உள்ளது.
- இந்த ஆய்வகத்தில் "ஹன்சா–என்ஜி" என்கிற புதிய தலைமுறை பயிற்சி விமானம் வடிவமைத்து, உருவாக்கப்பட்டது.
- ஜஸ்ட்–இன்–டைம் ப்ரீப்ரெக், காம்போசிட் லைட் வெயிட் ஏர்ஃப்ரேம், கிளாஸ் காக்பிட் போன்ற தனித்துவமான அம்சங்களுடன் ரோட்டாக்ஸ் டிஜிட்டல் கண்ட்ரோல் என்ஜின் மூலம் இந்த விமானம் இயக்கப்படுகிறது. இந்திய ஃப்ளைங் கிளப் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், குறைந்த விலையில், குறைந்த எரிபொருள் நுகர்வுடன் மிகவும் மேம்பட்ட பறக்கும் விமானமாக ஹன்சா–என்ஜி உருவாக்கப்பட்டுள்ளது.

## மக்கள் மருந்தகம்

- பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தகம் மூலம் குறைந்த விலையில் மருந்துகள் விற்கப்பட்டு, இதுவரை ஏழை, நடுத்தர மக்களின் பணம் ரூ.13,000 கோடி வரை சேமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
- இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது (2015) முதல், இதுவரை ரூ.13,000 கோடி அளவுக்கு நடுத்தர–ஏழை மக்களின் பணம் சேமிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது 8,500–க்கும் மேற்பட்ட "மக்கள் மருந்தகங்கள்" திறக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கான சானிட்டரி நாப்கின் ஒரு ரூபாய்க்கு இந்த மருந்தகங்களில் விற்கப்படுகிறது. இதுவரை 21 கோடி சானிட்டரி நாப்கின்கள் விற்பனையாகி நாடு முழுவதும் பெண்களின் வாழ்க்கையை இந்த "மக்கள் மருந்தகங்கள்" எளிதாக்கியுள்ளன.
- பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின் மூலம் மக்கள் ரூ.550 கோடி வரை சேமித்துள்ளனர். முழங்கால் மாற்று சிகிச்சைக்கான செலவையும் கட்டுக்குள் வைத்திருப்பதை அரசு உறுதி செய்துள்ளது. புற்றுநோய், காசநோய், நீரிழிவு, இதய நோய் போன்ற நோய்களுக்கான சிகிச்சைக்குத் தேவையான 800–க்கும் மேற்பட்ட மருந்துகள் மலிவு விலையில் இந்த மருந்தகங்களில் விற்கப்பட்டு வருகின்றன.

## ஆசியாவின் பெரிய இந்திய யானை உயிரிழப்பு

- ஆசியாவின் மிகப்பெரிய யானையாக கருதப்படும் 69–வயதான "நதுங்கமுவே ராஜா" உயிரிழந்தது.
- கண்டியில் உள்ள பிரசித்தி பெற்ற பௌத்த ஆலயத்தில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் விழாவில் புனித புத்தரின் பல் இந்த யானை மீது வைத்து கொண்டு செல்லப்படும். இதற்காக ராஜா தனது நதுங்கமுவே கிராமத்தில் இருந்து 90 கி.மீ. தொலைவில் உள்ள கண்டிக்கு நடந்தே செல்லும். அதற்கு ஆயுதம் ஏந்திய இலங்கை படையினரின் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. இந்த யானையின்தந்தம் 10.5 அடி நீளமாகும்.

## உருது இரண்டாம் மொழி

- முதல்வர் ஒய்.எஸ்.ஜகன் மோகன் ரெட்டி தலைமையிலான ஆந்திர அரசு தெலுங்குடன் உருது மொழியை இரண்டாம் மொழியாக தேர்ந்தெடுப்பதற்கான சட்ட திருத்தத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

## 4 லட்சம் மாணவர்களை பள்ளிகளுக்கு மீண்டும் அழைத்து வரும் திட்டம்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் புதிய சக்ஷம் அங்கன்வாடி திட்டத்தின் கீழ் 14 முதல் 18 வயது வரை கவனம் செலுத்தப்படவுள்ளது. 11–14 வயது பெண் குழந்தைகள் அங்கன்வாடி ஆதரவைப் பெற மாட்டார்கள்.
- அவர்களை பள்ளிகளில் சேர்ப்பதற்கான பணி மாவட்ட கல்வி அதிகாரிகளுடன் இணைந்து அங்கன்வாடி பணியாளர்களால் நடத்தப்படும். WCD மற்றும கல்வி அமைச்சகங்கள் பயன்படுத்தும் கண்காணிப்பு அமைப்பின் உதவியுடன் இத்திட்டம் அமல்படுத்தப்படுகிறது.
- கோவிட்–19 பெருந்தொற்றில் யுனிசெப் அமைப்பால் 50,000 இந்திய மாணவர்களிடம் (14–18) மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 90% மாணவர்கள் பள்ளியில் சேர்த்துள்ளனர். மூன்றில் ஒருபங்கு மாணவர்களுக்கு தெரிந்த பெண் மாணவர்கள் பள்ளி படிப்பை நிறுத்தியுள்ளனர்.
- அவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் அல்லது திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளனர் என்ற யுனிசெஃபின் இந்திய பிரதிநிதி யுரசுமாசா கிமுரா தெரிவித்துள்ளார்.
- 2018–19 ஆம் ஆண்டில், 1114 வயதுடைய 11.88 லட்சம் பெண்கள் அங்கன்வாடிகளில் இளம் பருவப் பெண்களுக்கான திட்டத்தின் (SAG) ஒரு பகுதியாக இருந்தனர், ஆனால் இது 2021 இல் 5.03 லட்சமாகக் குறைந்துள்ளது. புதிய சக்ஷம் அங்கன்வாடியின் மூலம் அவர்களின் கவனத்தை 14 ஆக உயர்த்த உள்ளது.

## டிடி இந்தியா ஒடிசா தளத்தில் ஒளிபரப்பட உள்ளது

- உலகம் முழுவதும் டிடி இந்தியா சேனலை உலக மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் YUPPTV யுடன், இந்தியாவின் பொது ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## ஓய்வூதியத்திற்கு நன்கொடை அளிக்கும் திட்டத்தை தொழிலாளர் அமைச்சகம் தொடங்கியுள்ளது

- பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்–தான் திட்டத்தின் கீழ் எந்த ஒரு குடிமகனும் ஒரு அமைப்பு சாரா தொழிலாளியின் சார்பாக பிரீமியம் தொகையை செலுத்தலாம்.
- 2019 இல் தொடங்கப்பட்ட இந்த ஓய்வூதியத் திட்டம் 15,000 வரை சம்பளம் பெறும். 18–40 வயதுக்குட்பட்ட அமைப்பு சாராத் துறை தொழிலாளர்கள் 55 முதல் 200 வரையிலான பிரிமீயம் தொகையைச் செலுத்தி பதிவு செய்யலாம்.
- 60 வயது எட்டிய பிறகு, பயனாளிகள் மாதந்தோறும் 3,000 ஓய்வூதியம் பெறுவார்கள். மார்ச் 3ஆம் தேதி வரை 46.34 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர்.
- நன்கொடை செலுத்துபவர் பயனாளியின் வயதை பொறுத்து ஒரு வருடத்திற்கு 660 முதல் 2,400 வரை வருடத்திற்கான பங்களிப்பாகச் செலுத்தலாம்.
- பிரீமியத் தொகையை maandha.in மூலமாகவோ அல்லது நாட்டில் எங்கும் உள்ள பொது சேவை மையத்தில் செலுத்தலாம்.

## பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான் தன் திட்டம்

- பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்–தன் என்பது ஒரு ஓய்வூதியத் திட்டமாகும், இது இந்தியாவில் உள்ள அமைப்புசாரா வேலைத் துறை மற்றும் வயதானவர்களுக்கு நிதி பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு அறிக்கையின்படி, இந்தியாவில் 42 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் பயனாளிக்கு 60 வயதுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் 3000. மேலும், ஓய்வூதியத்தில் 50% பயனாளியின் மனைவிக்கு குடும்ப ஓய்வூதியமாக பயனாளி இறந்த பிறகு வழங்கப்படும். இந்தத் திட்டம் உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது: தெரு வியாபாரிகள் ரிக்ஷா ஓட்டுனர்கள் விவசாயத் தொழிலாளர்கள் மதிய உணவு தொழிலாளர்கள் கட்டுமான தொழிலாளர்கள்.
- பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்–தன் (PM–SYM) பிப்ரவரி 2019 இல் பிரதமர் நரேந்திர மோடியால் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் கீழ் தொடங்கப்பட்டது. இது குஜராத்தின் வத்ஸ்ராலில் இருந்து துவங்கப்பட்டது. இது உலகின் மிகப்பெரிய ஓய்வூதியத் திட்டமாகும்.
- கல்வி; சுகாதார பராமரிப்பு மற்றும் உதவி தொழில்நுட்பங்கள்; தண்ணீர்; உள்கட்டமைப்பு மற்றும் தகவல் தொடர்பு; போக்குவரத்து மற்றும் இயக்கம்; நகரமயமாக்கல் மற்றும் வீட்டுவசதி; கிராமப்புற வளர்ச்சி மற்றும் விவசாயம்; தொழில்நுட்பம் மற்றும் சேர்த்தல்; மற்றும் தகவல் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு.

## உபரி நிலங்களைப் பணமாக்க புதிய நிறுவனம்

- உபரி நிலங்களைப் பணமாக்குவதற்காக சிறப்பு ஏற்பாடாக தேசிய நில பணமாக்கல் நிறுவனத்தை ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த நிறுவனத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட தொடக்க பங்கு மூலதனமாக ரூ.5,000 கோடியும், பெறப்படும் பங்கு மூலதனமாக ரூ.150 கோடியும் இருக்கும். மத்திய பொதுத்துறை நிறுவனங்கள், பிற அரசு அமைப்புகளுக்குச் சொந்தமான உபரி நிலங்கள், கட்டட சொத்துகளைப் பணமாக்கும் பணியை இந்த நிறுவனம் மேற்கொள்ளும். 2021–22 பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பயன்படுத்தப்படாத மற்றும் குறைவான பயன்பாடு கொண்ட முக்கியமற்ற சொத்துகளைப் பணமாக்குவதன் மூலம் அரசுக்கு கணிசமான வருவாய் கிடைக்கும்.
- தாதுக்களுக்கு ராயல்டி நிர்ணயிக்க சட்டத் திருத்தம்: சில வகை தாதுப் பொருள்களுக்கு ராயல்டி தொகையை நிர்ணயிக்க சுரங்கங்கள் மற்றும் தாதுப் பொருள்கள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் குளூக்கோனைட், பொட்டாஷ், எமரால்டு, பிளாட்டினம் வகை உலோகங்கள், அன்டாலுசைட், சிலிமனைட் மற்றும் மாலிப்டினம் போன்ற தாதுப் பொருள்களுக்கு ராயல்டி தொகை நிர்ணயிக்க ஏதுவாக, 1957–ஆம் ஆண்டைய சுரங்கங்கள் மற்றும் தாதுப் பொருள்கள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் 2–ஆவது அட்டவணையில் திருத்தங்களை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- குஜராத்தில் உலக சுகாதார அமைப்பின் மையம்: குஜராத் மாநிலம், ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் சார்பில் பாரம்பரிய மருத்துவத்துக்கான சர்வதேச மையம் தொடங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## சாகித்திய அகாதெமியின் இலக்கிய விழா தொடக்கம்

- இந்தியாவின் மிகச்சிறந்த இலக்கிய திருவிழாவான சாகித்திய அகாதெமியின் எழுத்துகள் விழா–2022 "சாகித்யோத்சவ்" தில்லியில் மார்ச் 10 முதல் 15–ஆம் தேதி வரை 5 நாள்கள் நடைபெற உள்ளது. இந்த விழாவில் 26 இளம் எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன.
- இந்தியாவின் 75–ஆவது சுதந்திர ஆண்டின் ஒரு பகுதியாக சாகித்திய அகாதெமி சார்பில் "எழுத்துகள் விழா–2022" நடத்தப்படுகிறது. இந்த விழா சுதந்திரம், சுதந்திர இயக்கத்தின் கருப்பொருளைக் கொண்டிருக்கும். மேலும், "அம்ருத் மஹோத்ஸவம்" தொடர்பான புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

### சாகித்திய அகாதெமி

- தொடக்கம் – 1954
- தலைமையிடம் – தில்லி
- மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒரு நிறுவனம்

## பாரம்பரிய மருத்துவத்திற்கான மையத்திற்கு அமைச்சரவை ஒப்புதல்

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை குஜராத்தில் உள்ள ஜாம்நகரில் WHO (உலக சுகாதாரம் அல்லது அமைப்பு) பாரம்பரிய மருத்துவத்திற்கான உலகளாவிய மையத்தை (WHO GCTM) நிறுவ ஒப்புதல் அளித்தது. இது தொடர்பாக உலக அமைப்புடன் இந்திய அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.
- ஆயுஷ் (ஆயுர்வேதம், யோகா, இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா, சோவரிக்பா மற்றும் ஹோமியோபதி) சிறு முயற்சியின் கீழ் உருவாக்கப்படும் WHO GCTM, பாரம்பரிய மருத்துவத்திற்கான முதல் உலகளாவிய மையமாக இருக்கும்.

## காந்தியின் சீடர் வாழ்ந்த வீடு

- 1932 ஆம் ஆண்டு பூனா ஒப்பந்தத்திற்கு பிறகு சாதி இந்துக்கள் தலித் மக்களுடன் இணைந்து பணியாற்ற காந்தி கூறியதன் அடையாள சின்னமான கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பத்நாபபுரம் அரண்மனை அருகே ஒரு பழைய வீடு அமைந்துள்ளது.
- இந்த வீட்டில் காந்தியின் சீடரான பாபு ராமானுஜ தாஸ் இரவு பள்ளியை நடத்தினார். காந்தியின் அழைப்பை ஏற்ற தலித் மக்களுடன் வாழ்ந்த 100 பிராமணர்களில் இவரும் ஒருவர்.

## பூனா ஒப்பந்தம்

- பூனா ஒப்பந்தம் என்பது 1932 ஆம் ஆண்டு செப்டம்பர், 24 அன்று பூனாவில் உள்ள எரவாடா சிறையில் அம்பேத்கருக்கும் காந்தி இடையே ஏற்பட்ட ஓர் உடன்படிக்கை ஆகும்.

- பூனா ஒப்பந்தம் என்றறியப்படும் இந்த உடன்படிக்கையானது (ஒடுக்கப்பட்ட இந்துக்களின் சார்பாக) அம்பேத்கர் மற்றும் மதன்மோகன் மாளவியா (மற்ற இந்துக்களின் சார்பாக) இடையே 1932 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தமானது கூட்டுத் தொகுதி முறை என்றும் அறியப்படுகின்ற, மாகாண சட்டசபைகளில் பொதுத் தொகுதிகளிலேயே தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு என்று தனித்தொகுதிகளை ஏற்படுத்தும் முறையை வழங்கியது.
- இந்த உடன்படிக்கையின் காரணமாக இங்கிலாந்து பிரதமர் ராம்சே மெக்டொனால்டால் முன்மொழியப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் 71 இடங்களுக்குப் பதிலாக 148 இடங்களை தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சட்டசபையில் பெற்றனர்.
- 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் படியும் பின்னர் 1950 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியும் பின்னாளில் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் என்றழைக்கப்பட்ட இந்த "தாழ்த்தப்பட்டோர் வகுப்பு" எனும் சொல் இந்துக்களிடையே இருந்த தீண்டத்தகாதவர்களைக் குறித்தது.

## டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண் விஞ்ஞானி

- 1950–களின் பிற்பகுதி மற்றும் 1960 களின் முற்பகுதியில் விவசாய விஞ்ஞானிகள், கொள்கை வகுப்பாளர்களைப் போலவே, அதிக மகசூல் தரும் பயிர் வகைகளை உருவாக்குவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். காரணம் தேடுவதற்கு வெகு தொலைவில் இல்லை. 1954 முதல் பொதுச் சட்டம் (PL) 480 ஒப்பந்தங்களின் கீழ் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி மூலம் இந்தியா தனது தானியத் தேவைகளில் பெரும்பகுதியை பூர்த்தி செய்து வருகிறது.
- தமிழ்நாட்டைச் சேர்ந்த சுவாமிநாதன், சைட்டோஜெனெட்டிக்ஸில் முதுகலைப் பட்டம் மற்றும் முனைவர் பட்டம் பெற்றவர். கேம்பிரிட்ஜில் இருந்து, அக்டோபர் 1954 இல், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தில் (IARI), புது தில்லியில் உதவி சைட்டோஜெனட்டிஸ்டாக சேர்ந்தார்.
- 1959 ஆம் ஆண்டில், அவர் அமெரிக்க விவசாய விஞ்ஞானியான தாவர நோயியல் நிபுணர் நார்மன் போர்லாக்கை அணுகி தனது மரபணு மாற்றப்பட்ட கோதுமை இனப்பெருக்கப் பொருட்களைப் பெற்றார்.
- 1963ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலக உணவு பற்றாக்குறையை எதிர்த்து போராடியதற்காக அமைதிக்கான நோபல் பரிசை வென்றார். அதன் பிறகு டாக்டர் சுவாமிநாதனுடன் இணைந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு பயணம் செய்து அதற்கு தகுந்த பொருட்களை வழங்கினர்.
- வெளிநாடுகளிலிருந்து கோதுமை, இறக்குமதி செய்ய பல்வேறு தடைகள் இருந்தது. சாஸ்திரி மற்றும் இந்திரா காந்தியின் உதவியுடன் இத்தடைகளை அவர் கடந்தார்.
- IARI–யின் தலைவராக டாக்டர் சுவாமிநாதன் 1966 ஆம் ஆண்டு பதவியேற்ற பிறகு அந்த நிறுவனம் அசுர வளர்ச்சியடைந்தது. 6 கிளை, 23 கிளைகளாக வளர்ந்தது.
- அகில இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.
- 1998–ஆம் ஆண்டு அவருக்கு பாரத ரத்னா வழங்கப்பட்டது.
- கடந்த மாதம் மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி 2021–22 ஆம் ஆண்டில் 127.93 மில்லியன் டன் அரிசி மற்றும் 111.32 மில்லியன் டன் கோதுமையை உற்பத்தி செய்தது.

## சிறை சீர்திருத்தங்கள் தொடர்பாக 6 மாதங்களில் அறிக்கை

- சிறை நிர்வாகத்தில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளை அளிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதிபதி அமிதவா ராய் தலைமையிலான குழுவை அந்த நீதிமன்றம் நியமித்தது. சிறை நிர்வாக சீர்திருத்தம் தொடர்பான பரிந்துரைகளை ஓராண்டுக்குள் சமர்ப்பிக்குமாறு அந்தக் குழுவை உச்சநீதிமன்றம் கடந்த 2018–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கேட்டுக் கொண்டது.

## சார்தாம் திட்ட உயரதிகாரக் குழுத் தலைவராக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி நியமனம்

- உத்தரகாண்டில் யமுனோத்திரி, கங்கோத்ரி, கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய 4 புனிதத் தலங்களை (சார்தாம்) இணைக்க ரூ.12,000 கோடி செலவில் 900 கி.மீ. நீள நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது. சீன எல்லை வரை செல்லும் விதமாக இந்த நெடுஞ்சாலை அமைக்கப்படவுள்ளது.
- இந்தத் திட்டம் தொடர்பான வழக்கைக் கடந்த 2020–ஆம் ஆண்டு விசாரித்த உச்சநீதிமன்றம், 2018–ஆம் ஆண்டு மத்திய சாலைப் போக்குவரத்து

மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் வெளியிட்ட சுற்றறிக்கையைப் பின்பற்றி நெடுஞ்சாலையில் இரு வழித்தடங்களின் அகலமும் 5.5 மீட்டருக்கு மிகாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- இமயமலைப் பள்ளத்தாக்கில் சார்தாம் திட்டம் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து ஆராயும் உயரதிகாரக் குழுவின் தலைவர் பதவியை ராஜிநாமா செய்து பேராசிரியர் ரவி சோப்ரா அனுப்பியிருந்த கடிதத்தை நீதிபதிகள் ஏற்றுக்கொண்டனர்.
- இதனைத் தொடர்ந்து அந்தக் குழுவின் புதிய தலைவராக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ஏ.கே.சிக்ரியை நீதிபதிகள் நியமித்துள்ளனர்.

## தென் மண்டல துணைவேந்தர்கள் கூட்டம்

- இந்தியப் பல்கலைக் கழகங்களின் (AIU) சங்கத் தலைவர் ஜி. திருவாசகம், 'உயர்கல்வி நிறுவனங்கள் மூலம் நிலையான வளர்ச்சி இலக்குகளை நனவாக்கி, உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதி செய்ய வேண்டும்' என்ற தலைப்பில் பேசினார். AIU பொதுச்செயலாளர் பங்கஜ் மிட்டல் கூறுகையில், இந்தியா நிலையான வளர்ச்சி இலக்குகளில் 120 வது இடத்தில் உள்ளது மற்றும் இலக்கை அடைய எட்டு ஆண்டுகள் மட்டுமே உள்ளது.

## முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி உரை

- The Rozor's Edge – a Reflection on our times எனும் தலைப்பில் அடையார் புற்றுநோய் நிறுவனம் உரையாடினார்.
- சமூகம் சந்திக்கும் முக்கிய பிரச்சனைகளை பட்டியலிட்டார். புவி வெப்பமயமாதல், இமயலை பணிப்பாறை உருகுவது, சீனா மற்றும் பாகிஸ்தான் அச்சுறுத்தல்.

## மகாராஷ்டிராவின் MMR 55ல் இருந்து 38 ஆகக் குறைந்துள்ளது.

- பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் குறைவான மாநிலங்களில் கேரளா மீண்டும் முதலிடத்தில் உள்ளது. நாட்டிலேயே மிகக் குறைந்த தாய் இறப்பு விகிதம் (MMR) 30 (ஒரு லட்சம் பிறப்புகளுக்கு) பதிவாகியுள்ளது.
- இந்தியப் பதிவாளர் ஜெனரலின் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட (2017–19) சமீபத்திய மாதிரிப் பதிவு அமைப்பு (SRS) இந்தியாவில் தாய் இறப்பு குறித்த சிறப்புப் அறிக்கையின் படி, கேரளாவின் MMR 12 புள்ளிகள் குறைந்துள்ளது. கடந்த வருடம் வெளியிடப்பட்ட SRS அறிக்கையின்படி (2015–17) கேரளாவின் MMR 42 ஆக இருந்தது.
- இது 103 என்ற தேசிய MMR ஐ விட மிக குறைவாகும்.

## யோகா, பாரம்பரிய மருத்துவத்தில் உலகை இந்தியா வழிநடத்தும்

- யோகா, பாரம்பரிய சுகாதார நடைமுறைகளின் ஆழ்ந்த ஞானம் கொண்ட இந்தியா, உலகை அமைதி, நல்வாழ்வு மற்றும் சிறப்பான ஆரோக்கிய பாதைக்கு வழிநடத்தும் என்று மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தெரிவித்தார்.
- 8–ஆவது சர்வதேச யோகா தினமான ஜூன் 21–ஆம் தேதிக்கு 100 நாள்கள் உள்ள நிலையில், "யோகா பெருவிழா 2022" என்னும் 100 நாள் கவுன்ட்டவுன் தொடக்க நிகழ்வு தில்லி விஞ்ஞான் பவனின் பல்வேறு மாநில முதல்வர்கள், சர்வதேச யோகா வல்லுநர்கள் முன்னிலையில் நடைபெற்றது.
- இந்த நிகழ்ச்சியை மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தொடக்கி வைத்து பேசியதாவது:
- சர்வதேச யோகா தினத்தை நடத்தும் ஆயுஷ் அமைச்சகம், உலகம் முழுவதும் ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் அமைதியை மேம்படுத்தும் ஒரு வெகுஜன இயக்கத்தை மேற்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுள்ளது.

## ரூ.350 லட்சம் கோடி இலக்கை அடைய கூட்டுறவுத் துறை பெரும் பாங்காற்றும்

- நாட்டின் பொருளாதாரத்தை ரூ.350 லட்சம் கோடியாக உயர்த்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்து பிரதமர் மோடி செயல்பட்டு வருகிறார். அந்த இலக்கை அடைவதற்கு கூட்டுறவுத் தறை மிகப்பெரிய அளவில் பங்காற்றும்.
- தனியார் பால் உற்பத்தி நிறுவனங்கள் வலுவடைந்தால் 5 பேர் மட்டுமே பலனடைவார்கள். கூட்டுறவுத் துறை வலிமை அடைந்தால் நாட்டில் உள்ள விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள் உள்ளிட்டோர் பலரும் பலனடைவார்கள்.
- அமுல் சங்கம் வலிமை பெற்றால், இந்த சங்கத்தைச் சேர்ந்த 2.5 லட்சம் உறுப்பினர்களும் (பால் உற்பத்தியாளரகள்) பலனடைவார்கள். அது, நாட்டின் தற்சார்புக் கொள்கைக்கு வலுசேர்க்கும்.

- அமுல் சங்கம் கடந்த 1971–இல் நாளொன்றுக்கு 200 லிட்டர் அளவுக்கு பால் உற்பத்தி செய்தது. தற்போது நாளொன்றுக்கு 20 லட்சம் லிட்டர் உற்பத்தி செய்யப்படுகிறது. இதை 25 லட்சம் லிட்டராக உயர்த்த வேண்டும் என்பது இந்த சங்கத்தின் நோக்கமாக உள்ளது.

## தொலைதூரப் பகுதிகளுக்கு விமான சேவையை விரிவுப்படுத்த அரசு திட்டம்

- உடான்–பிராந்திய விமான சேவைத் திட்டத்தின் கீழ் இந்தூர் (மத்திய பிரதேசம்) – கோந்தியா (மகாராஷ்டிரம்) – ஹைதராபாத் (தெலங்கானா) இடையே விமான சேவை தொடக்க நிகழ்ச்சி இந்தூரில் நடைபெற்றது. அதில், முதல் விமானம் இந்தூரில் இருந்து கோந்தியாவுக்கு இயக்கப்பட்டது.
- நிகழ்ச்சியில் அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா பேசியதாவது:
- பிராந்திய விமான சேவையை கடைக்கோடி பகுதிகளுக்கும் தொலைதூரப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்த மத்திய அரசு விரும்புகிறது. அந்தப் பகுதிகளுக்கு சிறு விமானங்கள், ஹெலிகாப்டர்களை இயக்கும் வகையில் கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது.

## இந்திய–சீன எல்லையில் 32 புதிய சாலைகள்

- காங்கிரஸை சேர்ந்த ஆனந்த் சர்மா தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு, மத்திய உள்துறை அமைச்சகத்தின் மானியக் கோரிக்கை (2022–23) மீதான அறிக்கையை மாநிலங்களவையில் தாக்கல் செய்தது. அதில் கூறியிருப்பது: பட்ஜெட் ஒதுக்கீட்டில் 2021 டிசம்பர் வரை 50 சதவீத நிதியைச் செலவிட முடிந்தாலும், வரும் நிதியாண்டில் எல்லைப்புற உள்கட்டமைப்பு வசதிக்காக உள்துறை அமைச்சகம் ரூ.3,637.92 கோடி கோரியுள்ளது. எல்லைப்புற உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், பாதுகாப்புப்படையினரின் திறனை அதிகரிக்கவும் சீன எல்லைப் பகுதியில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை கடந்த சில ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

## இந்திய–சீன எல்லையில் 32 புதிய சாலைகள்

- காங்கிரஸை சேர்ந்த ஆனந்த் சர்மா தலைமையிலான நாடாளுமன்ற நிலைக்குழு, மத்திய உள்துறை அமைச்சகத்தின் மானியக் கோரிக்கை (2022–23) மீதான அறிக்கையை மாநிலங்களவையில் தாக்கல் செய்தது. அதில் கூறியிருப்பது: பட்ஜெட் ஒதுக்கீட்டில் 2021 டிசம்பர் வரை 50 சதவீத நிதியைச் செலவிட முடிந்தாலும், வரும் நிதியாண்டில் எல்லைப்புற உள்கட்டமைப்பு வசதிக்காக உள்துறை அமைச்சகம் ரூ.3,637.92 கோடி கோரியுள்ளது. எல்லைப்புற உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், பாதுகாப்புப்படையினரின் திறனை அதிகரிக்கவும் சீன எல்லைப் பகுதியில் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை கடந்த சில ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

## NRC: நாடு முழுவதும் அமல்படுத்தும் முடிவு இல்லை மக்களவையில் மத்திய அரசு தகவல்

- தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) நாடு முழுவதும் அமல்படுத்துவது தொடர்பாக மத்திய அரசு இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்று மத்திய அமைச்சர் நித்யானந்த் ராய் மக்களவையில் தெரிவித்தார்.
- உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தேசிய குடிமக்கள் பதிவேட்டுக்கான பெயர் சேர்ப்பு–நீக்கல் துணைநிலைப் பட்டியல் அஸ்ஸாமில் கடந்த 2019–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31–இல் வெளியிடப்பட்டது. இதுவரை நாடு தழுவிய அளவில், தேசிய குடிமக்கள் பதிவேட்டை தயாரிக்கும் முடிவை மத்திய அரசு எடுக்கவில்லை என்று அதில் தெரிவித்துள்ளார்.

## தேசியக் குடிமக்கள் பதிவேடு

- தேசியக் குடிமக்கள் பதிவேடு (NRC – National Register of Citizens) என்பது உண்மையான இந்தியக் குடிமக்கள் யார் என்பதை முடிவு செய்வதற்கான இந்தியக் குடிமக்களின் பட்டியல் ஆகும். இந்தப் பட்டியலில் இடம் பெறாதவர்கள் சட்டவிரோத குடியேறிகளாக கருதப்படுவார்கள்.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி நாடெங்கிலும் 1951–ல் முதலாவது பட்டியல் தயாரிக்கப்பட்டது.
- தேசிய மக்கள் பதிவேடானது முதன்முறையாக அஸ்ஸாமில் மட்டுமே திருத்தப்பட்டிருக்கிறது.
- தற்பொழுது, தேசியக் குடிமக்கள் பதிவேடானது மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் தொடர்புடையது அல்ல. ஆனால் இந்த தேசியக் குடிமக்கள் பதிவேடானது ஒருவரது பெயர் 1951 ஆம் ஆண்டின் தேசியக் குடிமக்கள்

பதிவேட்டிலோ அல்லது 1971 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் தேதி நள்ளிரவு வரை தயாரிக்கப்பட்ட மாநிலத்தின் ஏதாவது ஒரு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தாலோ அவரை அவருடைய குடும்பத்துடன் தொடர்புபடுத்துகிறது.

- தேசியக் குடிமக்கள் பதிவேடானது இந்தியாவில் உள்ள அஸ்ஸாம் மாநிலத்திற்கு மட்டுமே உள்ளது.

## முன்னாள் முப்படை தளபதி பிபின் ராவத் பெயரில் இருக்கை

- மறைந்த முன்னாள் முப்படை இராணுவ தளபதியின் நினைவாக யுனைடெட் சர்வீஸ் இன்ஸ்டியூஷன் ஆப் இந்தியாவில் அவர் பெயரில் அமர்வு உருவாக்கப்பட்டுள்ளது.
- இதற்கான அறிவிப்பு முப்படை தளபதிகளின் குழுவின் தலைவரான ஜெனரல் மனோஜ் நரவணே அவர்களால் அறிவிக்கப்பட்டது.

## பஞ்சாப் முதல்வராக பகவந்த் மான் பதவியேற்றார்

- பஞ்சாப் முதல்வராக ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த பகவந்த் மான் பதவியேற்றுக் கொண்டார்.
- சுதந்திர போராட்ட வீரர் பகத்சிங் பிறந்த ஊரான ஷகீத் பகத்சிங் நகர் மாவட்டம் காத்கர் காலனில் பதவியேற்பு விழா நடைபெற்றது. பகவந்த் மானுக்கு பஞ்சாப் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், பகவந்த் மான் மட்டுமே பதவியேற்றுக் கொண்டார். அமைச்சர்கள் யாரும் பதவியேற்கவில்லை.

## 'குற்றவாளிகளின் விவரங்கள் சேகரிப்பில் நவீன தொழில்நுட்பம்'

- கடந்த 1920–ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட சிறைக் கைதிகள் அடையாளச் சட்டத்தின்படி, குற்றவாளிகள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு ஓராண்டுக்கு அதிகமாக சிறைத் தண்டனை பெற்றவர்கள் ஆகியோரைப் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட அடையாளங்கள் மட்டுமே சேகரிக்கப்படுவதால் அவை போதுமானதாக இல்லை. கூடுதல் விவரங்களை சேகரிக்க அனுமதிக்கும் வகையில் புதிய மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

## இலங்கைக்கு இந்தியா ரூ.7,500 கோடி கடனுதவி

- நிதி நெருக்கடியில் தவிக்கும் இலங்கைக்கு உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் கொள்முதல் செய்வதற்காக, பாரத ஸ்டேட் வங்கி மூலமாக இந்தியா அரசு ரூ.7,500 கோடி (100 கோடி டாலர்) கடனுதவி வழங்குகிறது.
- இதற்கான ஒப்பந்தம் தில்லியில் இந்தியாவின் பாரத ஸ்டேட் வங்கிக்கும், இலங்கை அரசுக்கும் இடையே கையொப்பமானது.

## 'ஒரே நாடு: ஒரே குடும்ப அட்டை' திட்டத்தில் 77 கோடி பயனாளிகள்

- ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை' திட்டத்தில் 77 கோடி பேர் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நாட்டின் எந்தப் பகுதியிலும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று மத்திய உணவு, பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.
- நடந்து முடிந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் ஆளும் பாஜகவின் வெற்றியைக் குறிப்பிட்டு பியூஷ் கோயல் புதன்கிழமை பேசியதாவது: புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெறுவதில் சந்திக்கும் சிக்கல்களைக் கருத்தில்கொண்டு, இந்த தொழில்நுட்பம் சார்ந்த ஒரே நாடு; ஒரே குடும்ப அட்டை திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அறிமுகம் செய்தார். இந்தத் திட்டம் தற்போது 35 மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு 77 கோடி மக்கள் பயனடைந்து வருகின்றனர்.
- இந்தத் திட்டத்தின் மூலம், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் குடும்ப அட்டையில் மாற்றம் செய்யாமல், உயிரி அடையாள பதிவு நடைமுறை மூலமாக, வேலை நிமித்தமாக செல்லும் இடங்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் மீண்டும் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பும்போது எந்தவித சிக்கலுமின்றி அங்குள்ள நியாயவிலைக் கடைகளில் உணவு தானியங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதுவரை 7 கோடி பேர், இந்த மாற்று இடங்களில் உணவு தானியங்கள் வாங்கிக்கொள்ளும் நடைமுறையைப் பயன்படுத்தி உள்ளனர்.

## பிரதமரின் ஊரக வீடு கட்டும் திட்டத்தில் 1.75 கோடி வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைப்பு

- பிரதமரின் ஊரக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1.75 கோடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பிரதமரின் ஊரக வீடு கட்டும் திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 2.28 கோடி வீடுகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில், மார்ச் 9–ம் தேதி நிலவரப்படி 1.75 கோடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
- இந்த திட்டத்தின் கீழ் மார்ச் 2021–க்குள் 2.95 கோடி வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. எனினும், பல்வேறு காரணங்களால் இந்த திட்டம் 2024 மார்ச் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

## ஜல்ஜீவன் திட்டத்துக்கு ரூ.3 ஆயிரம் கோடி

- ஜல்ஜீவன் திட்டத்துக்கு ரூ.3 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மாநிலத்தின் அனைத்து மக்களுக்கும் போதுமான குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தற்போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 542 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## புவிசார் குறியீடு பொருள்களுக்கு அதிக ஏற்றுமதி வாய்ப்பு: வர்த்தக அமைச்சகம்

- புவிசார் குறியீடு அந்தஸ்து பெற்ற பல்வேறு பொருள்களுக்கான ஏற்றுமதி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. எனவே, அதனை ஊக்குவிக்கும் வழிமுறைகளை கண்டறிய வேண்டும் என வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- புவிசார் குறியீடு பெற்ற பொருள்களை புதிய சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கைகளை வேளாண் மற்றும் பதப்படுத்துதல் உணவு ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் மூலமாக மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது.
- குறிப்பாக, காலா நமக் அரிசி, நாகா மிர்ச்சா, பெங்களூரு ரோஸ் ஆனியன், சகி லிட்சி, பாலியா கோதுமை, தாணு கோல்வாட் சப்போட்டா ஜலேகான் வாழைப்பழம், வாழகுலம் பைனாப்பிள், மரையூர் வெல்லம் உள்ளிடவற்றின் ஏற்றுமதியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், டார்ஜிலிங் தேயிலை, மகாபாலீஸ்வரர் ஸ்ட்ராபெரி, புளூபாட்ரி ஆஃப் ஜெய்ப்பூர், பனாரஸ் புடவை, திருப்பதி லட்டு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளை சர்வதேச சந்தையின் வாடிக்கையாளர்களை சென்றடைய முறையான சந்தைப்படுத்துதல் முறையே தற்போதைய தேவையாக உள்ளது என வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### புவிசார் குறியீடு

- புவிசார் குறியீடு (பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்டம்) 1999 கீழ் உருவாக்கப்பட்டது.
- தொழில் ஊக்குவிப்பு உள் வர்த்தகம், வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் புவிசார் குறியீட்டை (GI Tag) வழங்குகிறது.
- 2005 ஆம் ஆண்டு டார்ஜலிங் டீ–க்கு முதன் முதலில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- கர்நாடகாவின் 47 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்று இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் 41 பொருட்களுக்கு புவிசார் குறியீடு உள்ளது.

## இந்தியாவில் 5 ஆண்டுகளில் ரூ.3.2 லட்சம் கோடி முதலீடு ஜப்பான் பிரதமர் கிஷிடா அறிவிப்பு

- இந்தியாவில் 5 ஆண்டுகளில் சுமார் ரூ.32 லட்சம் கோடி முதலீடு செய்யப்படவுள்ளதாக ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா அறிவித்துள்ளார்.
- இந்தியா–ஜப்பான் இடையே 14–ஆவது வருடாந்திர மாநாடு, தில்லியில் நடைபெற்றது. அதில் பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஆகியோர் பங்கேற்றனர். மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் கிஷிடா, ஜப்பான் உயரதிகாரிகளைக் கொண்ட குழுவுடன் இந்தியா வந்தடைந்தார்.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தில் மத்திய அரசு மேற்கொண்ட திருத்தங்களுக்கு எதிராக அஸ்ஸாமில் நடைபெற்ற போராட்டத்தின் காரணமாகக் கடந்த 2019–ஆம் ஆண்டில் இந்தியா–ஜப்பான் இடையேயான மாநாடு ரத்து செய்யப்பட்டது. கரோனா தொற்று பரவல் காரணமாக கடந்த 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் மாநாடு நடைபெறவில்லை.

இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே தூதரக ரீதியிலான உறவு தொடங்கி 70 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் 14–ஆவது மாநாடு நடைபெற்றது.

## கடுகு உற்பத்தி 109.5 லட்சம் டன்னாக அதிகரிக்கும்

- கடுகு உற்பத்தி ரபி பருவத்தில் 109.5 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என எண்ணெய் நிறுவனங்கள் & வர்த்தகத்துக்கான மத்திய கூட்டமைப்பு (சிஓஓஐடி) தெரிவித்துள்ளது.
- கடுகு விளைச்சல் ஏக்கருக்கு 1,270 கிலோ: 2021–22 பயிர் ஆண்டின் ரபி பருவத்தில் கடுகு உற்பத்தியானது 29 சதவீதம் அதிகரித்து 109.50 லட்சம் டன்னை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டின் இதே பருவத்தில் கடுகு உற்பத்தி 85 லட்சம் டன்னாக இருந்தது. நாட்டில் கடுகு பயிரிடும் பரப்பு 87.44 லட்சம் ஹெக்டோரக அதிகரித்துள்ளது. ஏக்கருக்கு கடுகு விளைச்சலானது சராசரியாக 1,270 கிலோவாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் எரிசக்தி தேவையை ஈடு செய்யத்தயார்: ஈரான்

- இந்தியாவின் எரிசக்தி தேவையை ஈடு செய்யத்தயாராக இருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து இந்தியாவுக்கான ஈரான் தூதர் அலி செகெனி கூறியது: இந்தியாவில் எண்ணெய் மற்றும் எரிவாயுவுக்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனை ஈடு செய்யும் வகையில் அவற்றின் ஏற்றுமதியை அதிகரிக்க ஈரான் தயாராக உள்ளது. மேலும், எண்ணெய்–எரிவாயு ஏற்றும் திக்கான வர்த்தகத்தில் ரூபாய்–ரியால் பரிமாற்ற முறையை மீண்டும் அறிமுகப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கொல்லிமலையில் 20 வகையான அரிய மருத்துவத் தாவரங்கள்

- நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் 20 வகையான அரிய மருத்துவ தாவரங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் மாநிலங்களவையில் தெரிவித்தார்.
- தமிழகத்தின் கொல்லிமலைமலையில் நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மருத்துவ தாவரங்கள் காணப்படுகின்றன. சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின்கீழ் இயங்கும் இந்திய தாவரவியல் ஆய்வு (பிஎஸ்ஐ) தகவலின்படி, கொல்லிமலை மலையில் 100–க்கும் மேற்பட்ட மருத்துவ தாவர இனங்கள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன.
- சித்த ஆராய்ச்சி நிறுவனங்கள்: தமிழகத்தில் ஏற்கெனவே சித்த ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சிலின் மூன்று புற நிறுவனங்கள் செயல்படுகின்றன.
- சென்னையிலுள்ள மத்திய சித்த ஆராய்ச்சி நிறுவனம், பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில் உள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் மேட்டூர் அணைப்பகுதியில் உள்ள சித்த மருத்துவ தாவரங்கள் தோட்டம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

## மணிப்பூர் முதல்வராக பிரேன் சிங் பதவியேற்பு

- மணிப்பூர் முதல்வராக பிரேன் சிங் இரண்டாவது முறையாகப் பதவியேற்றுள்ளார். அவருடன் அமைச்சர்களாக 5 பேர் பதவியேற்றுக்கொண்டனர்.
- இந்நிலையில், மணிப்பூர் தலைநகர் இம்பாலில் உள்ள ஆளுநர் மாளிகையில் மாநில முதல்வராகப் பிரேன் சிங்கும், அமைச்சர்களாக பாஜகவை சேர்ந்த நால்வர், நாகா மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஒருவர் என மொத்தம் 5 பேரும் பதவியேற்றனர். அவர்களுக்கு மாநில ஆளுநர் இல.கணேசன் சத்தியப்பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

## 29 பழங்கால கலைப் பொருள்களை இந்தியாவிடம் ஒப்படைத்தது ஆஸ்திரேலியா

- இப்பொருட்கள் கி.பி. 9–10 நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை ஆகும். இவற்றில் சிவகணங்களுடன் கூடிய சிவன் சிலை, விஷ்ணு சிலைகள், சமண மதப் பாரம்பரிய சிலைகள், ஓவியங்கள் ஆகியவை அடங்கும்.
- சிலைகள் அனைத்தும் வெண்கலம், பித்தளை, பளிங்குக் கல் உள்ளிட்டவற்றால் செய்யப்பட்டவை. ஓவியங்கள் காகிதத்தில் வரையப்பட்டுள்ளன. இவை தமிழ்நாடு, தெலங்கானா, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவை.
- இது தொடர்பாக பத்திரிகை தகவல் அலுவலகம் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில் 'இந்தியாவிடம் ஆஸ்திரேலியா ஒப்படைத்த 29 சிற்பங்கள்

மற்றும் ஓவியங்களை பிரதமர் நரேந்திர மோடி பார்வையிட்டார். சிவகணங்கள், சக்தி வழிபாடு, விஷ்ணு – அவரது வடிவங்கள், சமண மதப்பாரம்பரியம் உள்ளிட்ட ஆறு பிரிவுகளில் சிலைகளும் ஓவியங்களும் அமைந்துள்ளன ' என்று தெரிவித்துள்ளது.

- கடந்த 2014–ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 228 பழங்கால கலைப் பொருள்கள் இந்தியா வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இந்திய தொல்லியல் ஆய்வு அமைப்பு (ஏஎஸ்ஐ) தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து அந்த அமைப்பு ட்விட்டரில் வெளியிட்ட பதிவில் 'இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே கலாசாரத் தொடர்பு நீடிக்கிறது. ஆஸ்திரேலியாவிடம் இருந்து 29 கலைப்பொருள்கள் தற்போது இந்தியா வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அந்நாட்டிடம் இருந்து 1976 முதல் 2013 வரையிலான காலத்தில் 13 கலைப் பொருள்கள் நம்மிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டன.

## 60 கி.மீ. இடையே மட்டுமே சுங்கச் சாவடி

- இருசுங்கச் சாவடிகளுக்கு இடையிலான குறைந்தபட்ச இடைவெளி 60 கி.மீ. இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

## சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.4,750–ஆக நிர்ணயம்

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில், 2022–23–ஆம் ஆண்டில் சணலுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. வேளாண் உற்பத்திச் செலவு மற்றும் விலை நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- அதன்படி 2022–23–ஆம் ஆண்டில் சணலுக்கான குறைந்தபட்ச ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.250 உயர்த்தப்பட்டு, ரூ.4,750–ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சராசரி உற்பத்திச் செலவில் 60.53 சதவீதமாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இந்த விலை குறைந்தபட்சமாக 50 சதவீத லாபத்தை உறுதி செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சணல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிய விலையை உறுதி செய்யும் வகையில் இந்த விலை நிர்ணய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- **3 நிறுவனங்களுக்கு புதிய முதலீட்டுக் கொள்கை நீட்டிப்பு:** ஹிந்துஸ்தான் உரம், ரசாயன நிறுவனத்தின் (ஹெச்யுஆர்எல்) 3 தொழிற்சாலைகளுக்கு புதிய முதலீட்டுக் கொள்கையை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கோல் இந்தியா நிறுவனம், என்டிபிசி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் உள்ளிட்ட நிறுவனங்கள் கடந்த 2016–இல் இணைந்து ஹிந்துஸ்தான் உரம், ரசாயன நிறுவனம் என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கின.
- சிந்திரி, கோரக்பூர், பரௌனி ஆகிய இடங்களில் செயல்படாமல் இருக்கும் நிறுவனங்களை மீண்டும் இயக்குவதற்காக ரூ.25,120 கோடியில் இந்த நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனங்களின் மூலம் ஆண்டுக்கு கூடுதலாக 38.1 லட்சம் டன் உரம் உற்பத்தி செய்யப்படும்.
- உத்தர பிரதேசம், பிகார் உள்ளிட்ட 7 மாநிலங்களின் உரத் தேவையை எதிர்கொள்ள உலகின் சிறந்த தொழில் நுட்பங்களுடன் மூன்று அலகுகளும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன.
- தில்லி மாநகராட்சிகளை இணைக்கும் மசோதாவுக்கு ஒப்புதல்: தில்லியில் 3 மாநகராட்சிகளை இணைக்கும் சட்டத்திருத்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தில்லி மாநகராட்சி கடந்த 2011–இல், தெற்கு தில்லி மாநகராட்சி, வடக்கு தில்லி மாநகராட்சி, கிழக்கு தில்லி மாநகராட்சி என 3–ஆகப் பிரிக்கப்பட்டது.
- கைதிகள் விடுதலைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்: நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு அமுதப் பெருவிழாவின் ஒரு பகுதியாக, குறிப்பிட்ட சில கைதிகளை விடுதலை செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- கைதிகள் விடுதலைதொடர்பான வழிகாட்டு விதிமுறைகளை மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுப்பி வைக்கும். அவர்கள், வரும்சுதந்திர தினம் (ஆகஸ்ட் 15) அடுத்த ஆண்டு குடியரசு தினம் (ஜனவரி 26), சுதந்திர தினம் ஆகிய தினங்களில் படிப்படியாக விடுவிக்கப்படுவர். கடுமையான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் விடுதலை செய்யப்பட மாட்டார்கள் என்று அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பகத் சிங் நினைவு தினம்: பிரதமர் புகழாரம்

- சுதந்திரப் போராட்ட வீரர்கள் பகத் சிங், சிவராம் ஹரி ராஜகுரு, சுகதேவ் தாப்பர் ஆகியோரின் நினைவு தினத்தையொட்டி, அவர்களுக்கு பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.
- கடந்த 1931–ஆம் ஆண்டு மார்ச் 23–ஆம் தேதி லாகூரில் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரை ஆங்கிலேயர்கள் தூக்கிலிட்டனர். அவர்கள் மறைந்த தினம் ஆண்டுதோறும் தியாகிகள் நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது.

## ரூ.30 லட்சம் கோடிக்கு பொருள்களை ஏற்றுமதி செய்து சாதனை

- நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் 400 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.30 லட்சம் கோடி) மதிப்புக்கு பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான இலக்கை முன்கூட்டியே அடைந்து சாதனை படைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார்.
- கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் பொருள்கள் ஏற்றுமதியானது 292 பில்லியன் டாலர் மதிப்பில் இருந்தது. கடந்த 2018–19–ஆம் நிதியாண்டில் 330.07 டாலர் மதிப்புக்குப் பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்திருந்தது.

## ஹைட்ரோப்ளூரோகார்பன் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிப்பு

- ஹைட்ரோப்ளூரோகார்பன்களை ஏற்றுமதி செய்வதற்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக மத்திய அரசு அறிவித்தது.
- இதுகுறித்து வெளிநாட்டு வர்த்தக பொது இயக்குநரகம் (டிஜிஎஃப்டி) வெளியிட்ட அறிவிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
- ஃபிரிட்ஜ் மற்றும் ஏசி–களில் பயன்படுத்தப்படும் ஹைட்ரோப்ளூரோகார்பனை (ஹெச்எஃப்சி) ஏற்றுமதி செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில் அந்த ரசாயனத்தின் இருப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- புதிய விதிமுறைகளின்படி, ஹெச்எஃப்சி ரசாயனத்தை கட்டுப்பாடற்ற வகை பிரிவிலிருந்து உடனடியாக நீக்கப்பட்டு, அதன் ஏற்றுமதிக்கு அரசின் ஒப்புதலைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

## தென்னகத்தில் தேசிய தரவு மையம் அமைக்க ஆய்வு

- பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடனான ஆலோசனைகளின் அடிப்படையில் தேசிய தரவு மைய அமைப்பதற்கான கொள்கை குறித்து மத்திய அரசு ஆய்வு செய்து வருவதாக மத்திய இணையமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- தரவு மையங்கள் (டேட்டா சென்டர்கள்) என்பவை ஒட்டுமொத்த 'டிஜிட்டல் இந்தியா' உள்கட்டமைப்பின் ஒரு முக்கிய அங்கமாகும். தற்போது பொது கிளவுட், கிளவுட் எனப்படும் உலகளாவிய நெட்வொர்க் சர்வர்கள் அடிப்படையிலான சேவைகள் அதிகரித்துள்ளன. இதனால் தரவு மையங்களுக்கான தேவையும் அதிகரித்திருக்கிறது. இதன் அடிப்படையில், தேசிய தரவு மையக் கொள்கை ஆய்வில் உள்ளது. உலகளாவிய நெட்வொர்க் மற்றும் டேட்டா சென்டர்களுக்கான முதன்மையான இடமாக இந்தியாவை உருவாக்க வேண்டும். பசுமை தரவு மையம் மற்றும் கிளவுட் சேவைகளுக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தில் பாதுகாப்பான மற்றும் நம்பகமான உள்கட்டமைப்புக்கான தீர்வுகளை ஊக்கப்படுத்தும் வகையில் தேசிய தரவு மையக் கொள்கை இருக்கும்.
- தேசிய தரவு மைய கொள்கைக்காக கடந்த பிப்ரவரி 25–ஆம்தேதி சென்னையில் பொது ஆலோசனை மற்றும் கலந்தாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 65–க்கும் மேற்பட்ட பெரு நிறுவனங்கள் மற்றும் மத்திய – மாநில அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேலும் 295–க்கும் மேற்பட்டோர் காணொலி வழியாகவும் கலந்து கொண்டு ஆலோசனைகளை முன்வைத்துள்ளனர். இதில் பெறப்பட்ட ஆலோசனைகள் அடிப்படையில் தேசிய தரவு மையகொள்கை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்றார் அமைச்சர்.

## 107 ராணுவ தளவாட பொருள்கள் இறக்குமதிக்கு கட்டுப்பாடு

- மத்திய அரசின் தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், 107 ராணுவ தளவாடப்பொருள்களின் இறக்குமதிக்கு படிப்படியாகத் தடை விதிக்கும் வகையில் வரும் டிசம்பர் மாதம் முதல் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சகம் அறிவித்தது.

- இந்தப் பட்டியலில், பெரும்பாலும் ரஷியாவில் தயாரிக்கப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு வரும் ராணுவ ஹெலிகாப்டர், நீர்மூழ்கிக் கப்பல்கள், போர்க் கப்பல்கள், பீரங்கிகள், ஏவுகணைகள், கண்காணிப்பு மற்றும் தகவல்தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான உபபொருள்கள் மற்றும் கருவிகள் இடம்பெற்றுள்ளன.
- நாட்டின் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான ராணுவ தளவாடங்கள், ஆயுதங்கள் இறக்குமதியை படிப்படியாகக் குறைத்து, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான முயற்சியை பாதுகாப்புத் துறை அமைச்சகம் எடுத்து வருகிறது. அவ்வாறு, குறிப்பிட்ட சில ஆண்டுகளில் படிப்படியாக இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட உள்ள 2,851 ராணுவ தளவாடங்கள், கருவிகளின் பட்டியலையும் பாதுகாப்பு அமைச்சகம் கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியிட்டது.
- 22 துணை உபகரணங்களை ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் (ஹெச்ஏஎல்) நிறுவனம் உள்நாட்டில் உற்பத்தி செய்ய உள்ளது. அதுபோல, பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் 21 துணை உபகரணங்களையும், தி மஸாகன் கப்பல் கட்டும் நிறுவனம் 6 உபகரணங்கள் மற்றும் கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள்.

## மாருதி சுஸுகி இந்தியா: புதிய நிர்வாக இயக்குநர் ஹிஷாசி டாக்யூச்சி

- நாட்டின் மிகப்பெரிய கார் தயாரிப்பு நிறுவனமான மாருதி சுஸுகி இந்தியாவின் (எம்எஸ்ஐ) புதிய நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக ஹிஷாசி டாக்யூச்சி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## நீதி ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலைக் குறியீடு குஜராத் 8–ஆவது ஆண்டாக முதலிடம்; தமிழகம் 4–ஆம் இடம்

- நீதி ஆயோக்கின் ஏற்றுமதி தயார்நிலை குறியீடு 2021–இல் குஜராத் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- மாநிலங்களின் ஏற்றுமதிக்கான திறன் மற்றும் செயல்பாடுகள் எந்த அளவுக்கு தயார்நிலையில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதை அடிப்படையாகக் கொண்டு நீதி ஆயோக் ஏற்றுமதி தயார்நிலைப் பட்டியல் வெளியிடப்படுகிறது.
- 2021–க்கான இந்தப்பட்டியலில் குஜராத் தொடர்ந்து 2–வது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம், ஹரியாணா, உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பஞ்சாப், ஆந்திர பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- லட்சத் தீவு, அருணாசல பிரதேசம், மிஸோரம், லடாக் மற்றும் மேகாலயா ஆகியவை ஏற்றுமதி தயார்நிலை பட்டியல்–2021–இல் கடைசி நிலைகளில் இடம் பெற்றுள்ளன.
- மொத்த ஏற்றுமதியில் 70 சதவீத பங்களிப்பில் மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம், தமிழகம் மற்றும் தெலங்கானா ஆகிய 5 மாநிலங்கள் ஆதிக்கம் செலுத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உ.பி. முதல்வராக யோகி ஆதித்யநாத் மீண்டும் பதவியேற்பு

- உத்தர பிரதேச முதல்வராக இரண்டாவது முறையாக யோகி ஆதித்யநாத் பதவியேற்றார். அவருடன் இரு துணை முதல்வர்கள் உள்பட 52 அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர். அவருக்கு ஆளுநர் ஆனந்தி பென் படேல் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## உலக பாரம்பரிய மருத்துவ மையம் உலக சுகாதார அமைப்புடன் ஆயுஷ் அமைச்சகம் ஒப்பந்தம்

- குஜராத்தின் ஜாம்நகரில் உலக பாரம்பரிய மருத்துவ மையம் அமைப்பதற்கு மத்திய ஆயுஷ் அமைச்சகமும் உலக சுகாதார அமைப்பும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.
- மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் செயலர் வைத்யா ராஜேஷ் கொட்டேச்சா, சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியே சஸ் ஆகியோர் ஜெனீவாவில் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இந்த மையத்தை நிறுவுவதற்கு கடந்த மாதம் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தது.
- இதைத்தொடர்ந்து, உலக சுகாதார அமைப்புடன் பாரம்பரிய மருத்துவ மையத்தின் தாயகமான இந்தியாவின் ஆயுஷ் அமைச்சகம் கையொப்பமிட்டது. இதன் இடைக்கால அலுவலகம் குஜராத்தின் ஆயுர்வேத ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இயங்கும். மத்திய அரசின் 250 மில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டுடன் இந்த மையம் செயல்படும்.

- உலக மக்களின் ஒட்டுமொத்த சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கான, உலகம் முழுவதும் உள்ள பாரம்பரிய மருத்துவ வளத்தை நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மூலமாக மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- பிரதமர் வரவேற்பு: இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு குறித்து பிரதமர் நரேந்திர மோடி 'உலகப் பாரம்பரிய மருத்துவ மையத்தை உருவாக்குவதற்கான ஒப்பந்தம் கையொப்பமாகி இருப்பதை அறிந்து உள்ளம் பெருமகிழ்ச்சியால் நிறைந்துள்ளது.
- பல்வேறு முன்முயற்சிகள் மூலம் மத்திய அரசு மேற்கொண்ட இடையறாத முயற்சிக்கு பலன் கிட்டியுள்ளது. ஜாம் நகரில் அமையவுள்ள இந்த உலக மையம், உலகின் சிறந்த சுகாதாரத் தீர்வுகளைவழங்கும் எனக் கூறியுள்ளார்.
- இந்த நிகழ்ச்சியில் பேசிய உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேசஸ், இந்திய அரசின் முன்முயற்சியைப் பாராட்டினார்.

## இந்திய போட்டி ஆணையம் விசாரணை

- இந்தியப் போட்டி ஆணையமானது போட்டிச் சட்டம், 2002–ன் கீழ் அமைக்கப்பட்ட நீதித் துறையைப் போன்ற (Quasi–judicial) சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது 2003 ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்படுத்தப்பட்டது. இது 2009 ஆம் ஆண்டு மே மாதம் முழுமையான செயல்பாட்டுக்கு வந்தது.
- இந்த சட்டத்தின் பிரிவு 8(1)–ன் படி இந்தியப் போட்டி ஆணையம் ஒரு தலைவரையும், இரண்டு உறுப்பினர்களுக்கு குறையாமல் ஆறு உறுப்பினர்களுக்கு மிகாமல் உறுப்பினர்களையும் கொண்டிருக்க வழிவகை செய்கிறது.
- தற்பொழுது தலைவர் மற்றும் 4 உறுப்பினர்கள் இந்த ஆணையத்தில் உள்ளனர்.
- ஆணையம் தொடங்கப்பட்டதிலிருந்து தேர்வுக் குழு அல்லது கொலிஜியம் போன்று செயல்பட்டு வருகிறது.
- இது மத்திய பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.

## சர்வதேச சந்தையில் இந்தியப் பொருள்கள்

- நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் 400 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.30 லட்சம் கோடி) மதிப்பிலான பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்து சாதனை படைத்துள்ளது. இது இந்தியப் பொருள்களுக்கான தேவை சர்வதேச அளவில் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது.
- வளரும் ஆயுஷ துறை: ஆயுர்வேதம், சித்த மருத்துவம் உள்ளிட்ட ஆயுஷ் பொருள்களுக்கான சந்தை வேகமாக அதிகரித்து வருகிறது. ஆயுஷ் துறைக்கான சந்தை வாய்ப்பு, 6 ஆண்டுகளுக்கு முன் சுமார் ரூ.22,000 கோடியாக இருந்தது. அது தற்போது சுமார் ரூ.1.40 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.
- சர்வதேச சந்தையில் இலக்குகளை நிர்ணயிப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றை அடைவதற்கான நடவடிக்கைகள் இரவு பகல் பாராது மேற்கொள்ளப்படுகின்றன. அஸ்ஸாமின் ஹைலகண்டியில் தயாரிக்கப்படும் தோல் பொருள்களும், ஒஸ்மனாபாதின் கைவினைப் பொருள்களும், பீஜப்பூரின் பழங்கள்–காய்கறிகளும், சந்தோலியின் கருப்பு அரிசியும் தற்போது உலகச் சந்தைகளைச் சென்றடைந்து வருகின்றன.
- லடாக்கின் ஆப்ரிகாட் பழங்களும், தமிழகத்தின் வாழைப்பழங்களும் துபை, சவூதி அரேபியாவில் கூட கிடைக்கின்றன. பல பொருள்கள் இதுவரை ஏற்றுமதி செய்யப்படாத நாடுகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

## 10 அணுமின் உற்பத்தி நிலையங்கள்: அடுத்த ஆண்டில் தொடக்கம்

- அடுத்த 3 ஆண்டுகளில் ஒரே நேரத்தில் 10 அணுமின் நிலையங்களை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. முதலாவது அணுமின் உலைக்கான கட்டுமானப் பணி அடுத்த ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.
- அடுத்த 3 ஆண்டுகளில் ஒரே நேரத்தில் தலா 700 மெகாவாட்திறனில் 10 அணுமின் உற்பத்தி நிலையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. 2023–இன் தொடக்கத்தில் கர்நாடகத்தின் கைகாவில் 2 அணு உலைகளுக்கான கட்டுமானப் பணி தொடங்கவுள்ளது.
- 2024–இல் ராஜஸ்தானில் 4 அணு உலைகளும், ஹரியாணாவில் 2 அணு உலைகளும், 2025–இல் மத்திய பிரதேசத்தில் 2 அணு உலைகளும் அமைக்கப்படவுள்ளன என்றார் அவர்.
- திட்டச் செலவு, காலத்தைக் குறைக்கும் வகையில், 10 அணு உலைகளையும் ரூ. 1.05 லட்சம் கோடியில் உருவாக்குவதற்கு மத்திய அரசு கடந்த 2017–ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒப்புதல் அளித்தது. அணு உலைகளின் கட்டுமானப் பணிகள் முடிவடைவதற்கு 5 ஆண்டுகளாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- இந்தியாவில் மொத்தம் 6,780 மெகாவாட் உற்பத்தித் திறனுடன் 22 அணு உலைகள் இயங்கி வருகின்றன.
- குஜராத் மாநிலம் காக்ராபாரில் 700 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அணுமின் நிலையம், தேசிய மின்தொகுப்பில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இணைக்கப்பட்டது. இருப்பினும் வர்த்தக ரீதியிலான மின் உற்பத்தி அங்கு இன்னும் தொடங்கப்படவில்லை.

## மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்னைகள்: இந்தியா – இலங்கை புதிய முடிவு

- மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்னைகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் விரைவில் தீர்வு காண இந்தியா – இலங்கை கூட்டாக முடிவு செய்துள்ளன.
- இந்தியா – இலங்கை அதிகாரிகள் அடங்கிய கூட்டுப் பணிக் குழுவின் 5–ஆவது கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
- மாற்று வாழ்வாதார வழிமுறைகள்: இலங்கை தரப்பில், பாக் நீரிணை மீன்பிடிப்புக்கு நிலையான விரைவான மாற்றம் குறித்து இலங்கை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், வட இலங்கையில் மீன்வளர்ப்புத்துறை, அதனுடன் தொடர்புடைய உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு இந்தியாவால் உதவ முடியும் எனவும் இலங்கை கேட்டுக்கொண்டது.

## இலங்கை அதிபருடன் எஸ். ஜெய்சங்கர் சந்திப்பு

- இலங்கை அதிபர் கோத்தபய ராஜபட்ச, பிரதமர் மகிந்த ராஜபட்ச ஆகியோரை இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சந்தித்தார்.
- இந்தியா, இலங்கை, வங்கதேசம், மியான்மர், தாய்லாந்து, நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள பிம்ஸ்டெக் அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்க ஜெய்சங்கர் இலங்கை சென்றுள்ளார்.
- யாழ்ப்பாணம் கலாசார மையம் திறப்பு: இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இந்தியாவின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் கலாசார மையம் கட்டப்பட்டது.

### BIMSTEC

- பீம்ஸ்டெக் (BIMSTEC – Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation) என்ற அமைப்பின் விரிவாக்கமானது பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா என்பதாகும்.
- இது தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஏழு நாடுகளின் சர்வதேச அமைப்பாகும்.
- இந்த அமைப்பில் வங்க தேசம், பூடான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்த அமைப்பின் நிரந்தரத் தலைமையகம் டாக்காவில் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் செலவினத்திற்கு இந்தியா 33 சதவிகிதம் அளிக்கிறது (பிராந்திய மக்கள் தொகையில் 65 சதவிகிதம்).
- இந்த துணைப் பிராந்திய அமைப்பானது பேங்காக் பிரகடனத்தின் மூலம் 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6–ம் தேதி அன்று தொடங்கப்பட்டது.
- முதன்முதலில் இந்த பொருளாதார அமைப்பானது 'BIST–EC' என்ற பெயருடன் நான்கு உறுப்பு நாடுகளால் (Bangladesh, India, Sri lanka and Thailand Economic Cooperation) ஆரம்பிக்கப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி மியான்மர் இந்த அமைப்பில் இணைக்கப்பட்ட பின்பு இது 'BIMST–EC' (Bangladesh, India, Myanmar, Sri lanka and Thailand Economic Cooperation) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## 741 லட்சம் டன் நெல் கொள்முதல்: மத்திய அரசு

- நடப்பு சந்தைப்பருவத்தில் இதுவரை குறைந்தபட்ச ஆதரவு விலையில் (எம்எஸ்பி) 741.62 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- 2021–22–ஆம் சந்தைப் பருவத்தில் இதுவரையில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் 741.62 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.1,45,358.13 கோடி மதிப்புக்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டதன் மூலம் 105.14 லட்சம் விவசாயிகள் பலனடைந்துள்ளனர்.
- ஒட்டுமொத்த கொள்முதலில், அதிகபட்சமாக பஞ்சாபிலிருந்து 187.28 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, சண்டிகரிலிருந்து 92.01 லட்சம் டன்னும், தெலங்கானனாவிலிருந்து 70.22 லட்சம் டன்னும், ஹரியாணாவிலிருந்து 55.30 லட்சம் டன்னும்,

உத்தரபிரதேசத்திலிருந்து 66.53 லட்சம் டன்னும் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக உணவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்: 1.15 கோடி பேருக்கு அனுமதி

- பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தின் (நகர்ப்புறம்) கீழ் 1.15 கோடி பயனாளிகளுக்கு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி மாநிலங்களவையில் தெரிவித்தார்.
- பிரதமரின் கனவு திட்டமான நகர்ப்புற வீட்டுவசதித்திட்டத்தின்கீழ் இதுவரையில் 1.15 கோடி வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## நிகழாண்டில் 7 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்படும்

- நிகழாண்டில் இஸ்ரோ 7 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டிருப்பதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
- "பிஎஸ்எல்வி சி–52 செலுத்து வாகனம் மூலம் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் இஓஎஸ்–4 கடந்த பிப்ரவரி 14–இல் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
- விண்வெளியின் சுற்றுவட்டப் பாதையில் செயல்படுவதற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இரண்டாம் தலைமுறை நானோ செயற்கைக்கோள்களில் முதலாவதாக ஐஎன்எஸ்–2டிடி–யும் இதனுடன் அனுப்பப்பட்டது. இதேபோல, நிகழாண்டில் இஸ்ரோ 7 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளது என்றார் அவர்.

### இஸ்ரோ (ISRO)

- இந்திய விண்வெளி ஆய்வு மையம் (Indian Space Research Organization, ISRO, இஸ்ரோ) இந்திய அரசின் முதன்மையான தேசிய விண்வெளி முகம ஆகும். பெங்களூரில் தலைமைப் பணியகம் கொண்ட இஸ்ரோ 1969 இல் உருவாக்கப்பட்டது.
- தொடக்கம் – ஆகஸ்ட் 15, 1969
- தலைமையகம் – அன்தரிக்ஷ் பவன், பெங்களூரு, இந்தியா
- தலைவர் – எசு. சோமநாத்

## மத்திய அரசு ஊழியர்களுக்கு 3% அகவிலைப்படி உயர்வு

- பாதுகாப்பு படைகளுக்காக ரூ.3,887 கோடியில் 15 இலகு ரக ஹெலிகாப்டர்களைக் கொள்முதல் செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அத்துடன் ரூ.377 கோடியில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- 10 ஹெலிகாப்டர்கள் விமானப் படையிலும், 5 ஹெலிகாப்டர்கள் ராணுவத்திலும் சேர்க்கப்படும். இந்த ஹெலிகாப்டர்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும். அரசின் நிறுவனமான ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் இந்த ஹெலிகாப்டர்களைத் தயாரிக்கவுள்ளது.

### இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிட்டெட்

- இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் லிமிட்டெட் (Hindustan Aeronautics Limited) நிறுவனம் இந்தியாவின் பெங்களூரைத் தலைமையகமாக கொண்டு செயல்படும் ஆசியாவின் மிகப்பெரிய வான்வெளித்தொழில் துறை நிறுவனங்களில் ஒன்றாகும்.
- இது இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் தலைமையில் செயல்படும் ஒரு அரசுத் துறை நிறுவனமாகும். இந்நிறுவனமே தெற்காசியாவின் முதல் போர் விமானத்தினை உருவாக்கியது. இதற்கு நாடு முழுவதும் நாசிக், கோர்வா, கான்பூர், கோராபுட், லக்னௌ, பெங்களூர், ஹைதராபாத் ஆகிய இடங்களில் தொழிற்சாலைகள் உள்ளன.
- தொடக்கம் – 1940
- தலைமையகம் – பெங்களூர், கருநாடகம், இந்தியா
- தலைவர் – ஆர் மாதவன்

## பிராந்திய நாடுகளின் சவால்களை எதிர்கொள்ள ஒருங்கிணைந்த செயல்பாடு

- 'ஐரோப்பாவில் அண்மைக்கால நிகழ்வுகள், சர்வதேச ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளன. அதனால் எழும் பிராந்திய சவால்களை எதிர்கொள்ள "பிம்ஸ்டெக்" நாடுகளின் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம்" என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுத்தினார்.
- நாடுகளிடையேயான தொடர்பு, வளம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கான இணைப்புப் பாலமாக வங்காள விரிகுடாவை உருவாக்க வேண்டிய காலமிது.

அதனை முன்னிட்டு, பிம்ஸ்டெக் செயலகத்துக்கு இந்தியா சார்பில் ரூ.7.59 கோடி நிதியுதவி வழங்கப்படும்.

- பிம்ஸ்டெக் உச்சிமாநாடு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சக கூடுதல் செயலர் ருதேந்திர டண்டன் கூறுகையில், "பிஎம்ஸ்டெக் ஒத்துழைப்பு செயல்பாடுகள் 7 தூண்களாகப் பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்படவுள்ளன. ஒவ்வொரு தூணுக்கும் பிம்ஸ்டெக்கில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு உறுப்பு நாடு தலைமைத் தாங்கும். அதன்படி, பாதுகாப்புத் தூணுக்கு இந்தியா தலைமையேற்க முடிவு செய்யப்பட்டுள்ளது".

BIMSTEC

- பீம்ஸ்டெக் (BIMSTEC – Bay of Bengal Initiative for Multi–Sectoral Technical and Economic Cooperation) என்ற அமைப்பின் விரிவாக்கமானது பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா என்பதாகும்.
- இது தெற்கு ஆசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஏழு நாடுகளின் சர்வதேச அமைப்பாகும்.
- இந்த அமைப்பில் வங்க தேசம், பூடான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்த அமைப்பின் நிரந்தரத் தலைமையகம் டாக்காவில் 2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் செலவினத்திற்கு இந்தியா 33 சதவிகிதம் அளிக்கிறது (பிராந்திய மக்கள் தொகையில் 65 சதவிகிதம்).
- இந்த துணைப் பிராந்திய அமைப்பானது பேங்காக் பிரகடனத்தின் மூலம் 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6–ம் தேதி அன்று தொடங்கப்பட்டது.
- முதன்முதலில் இந்த பொருளாதார அமைப்பானது 'BIST–EC' என்ற பெயருடன் நான்கு உறுப்பு நாடுகளால் (Bangladesh, India, Sri lanka and Thailand Economic Cooperation) ஆரம்பிக்கப்பட்டது.
- 1997 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி மியான்மர் இந்த அமைப்பில் இணைக்கப்பட்ட பின்பு இது 'BIMST–EC' (Bangladesh, India, Myanmar, Sri lanka and Thailand Economic Cooperation) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## போபால்–சென்னை இடையே நேரடி விமான சேவை தொடக்கம்

- மத்திய பிரதேச தலைநகர் போபால்–சென்னை இடையே நேரடி விமான சேவையை விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, இணையமைச்சர் வி.கே.சிங் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.
- 150 இருக்கைகள் கொண்ட ஏ320 பயணிகள் விமானம் இந்தச் சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்த விமானத்துடன் போபாலிலிருந்து தினந்தோறும் சராசரியாக 10 விமானங்கள் இயக்கப்படுகின்றன.

## கணக்குத் தணிக்கையாளர் மசோதா: மக்களவை ஒப்புதல்

- கணக்குத் தணிக்கையாளர், செலவுக் கணக்காளர் மற்றும் நிறுவனச் செயலாளர்கள் நிறுவனங்களை மறுசீரமைக்கும் வகையில் மத்திய அரசு கொண்டு வந்த சட்டத் திருத்த மசோதாவுக்கு மக்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- கணக்கு தணிக்கையாளர் சட்டம் 1949, செலவு மற்றும் பணிகள் கணக்காளர் சட்டம் 1959 மற்றும் நிறவனச் செயலாளர்கள் சட்டம் 1980 ஆகிய சட்டங்களில் சில திருத்தங்களை மேற்கொள்ளும் வகையில் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்திய கணக்கு தணிக்கையாளர் நிறுவனம் (ICAI), இந்திய செலவு மற்றும் பணிகள் கணக்களார் நிறுவனம் (ICWAI) மற்றும் இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் (ICSI) ஆகியவை நிறுவன ஒழுங்கு நடவடிக்கை குழுக்களின் தலைமை அதிகாரியாக முறையே கணக்குத் தணிக்கையாளர் அல்லாத, செலவுக் கணக்காளர் அல்லாத மற்றும் நிறவனச் செயலர் அல்லாத நபர்களை நியமனம் செய்ய வேண்டும்.
- மூன்று நிறுவனங்களும், நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சக செயலர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். அதில், மூன்று நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இடம்பெற வேண்டும் உள்ளிட்ட புதிய நடைமுறைகள் இந்த சட்டத்திருத்த மசோதாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
- மேலும், இந்திய கணக்குப் பதிவு நிறுவனங்கள் பெரும் வளர்ச்சி பெற வழி ஏற்படுத்தும் வகையில், தொழில் நிறுவனங்கள் இந்த 3 கணக்காளர் நிறுவனங்களுடன் பதிவு செய்வதற்கு மசோதா வழி செய்வதோடு, முறைகேட்டில் ஈடுபடும் நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு அபராதம் விதிக்கவும் இந்த மசோதா வழி செய்கிறது.

## வாகனத்தில் பயணிப்போரின் பாதுகாப்புக்கு புதிய விதிகள்: அமைச்சர் நிதின் கட்கரி

- புதிய வரைவு விதிகளை போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அக்டோபர் 1–ஆம் தேதி முதல் அனைத்து வாகனங்களிலும் 6 காற்றடைத்த பைகள் (ஏர் பேக்) கட்டாயமாக்குவது அதில் இடம்பெற்றுள்ளது.
- இந்த ஏர் பேக் இருந்திருந்தால் 2020–இல் நடைபெற்ற சாலை விபத்துகளில் காரில் தலைக் காயத்தால் 8,598 உயிரிழப்புகள் தடுக்கப்பட்டிருக்கும்.
- ஆண்டுதோறும் 5 லட்சம் விபத்துகள் நடைபெறுகின்றன. அதில், 1.5 லட்சம் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

# 7 சர்வதேச நிகழ்வு



## உக்ரைனில் சிக்கியுள்ளோரை மீட்க தமிழகக் குழுவினர் பயணம்

- உக்ரைனில் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தமிழக அரசுக் குழுவினர் தில்லி சென்றுள்ளனர்.
- உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்டு தாயகம் கொண்டு வருவதற்காக நால்வர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் உக்ரைனின் எல்லைப் புறங்களில் உள்ள நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள உள்ளனர். அவர்களுடன் தமிழக அரசுத் துறை உயரதிகாரிகள் நான்கு பேரும் செல்லவுள்ளனர்.
- திமுக எம்.பி. திருச்சி சிவா, தமிழ்நாடு கண்ணாடி இழை கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஏ.கே. கமல் கிஷோர் ஆகியோர் ஸ்லோவாகியா சென்கின்றனர். திமுக எம்.பி. கலாநிதி வீராசாமி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் இணை நிர்வாக இயக்குநர் எம்.பிரதீப் குமார் ஆகியோர் ஹங்கேரியும், திமுக எம்.பி.எம்.எம். அப்துல்லா, எல்காட் நிர்வாக இயக்குநர் அஜய் யாதவ் ஆகியோல் ருமேனியாவுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் நிர்வாக இயக்குநர் எம்.கோவிந்த ராவ் ஆகியோர் போலந்தும் செல்கின்றனர்.

## 'மன்கட்டிங்" முறை ஏற்புடையது: விதிகளில் ஐசிசி (ICC) திருத்தம்

- "மன்கட்டிங்" என்பது, ஒரு பௌலர் பந்துவீச வரும்போதே "நான்–ஸ்டிரைக்கர்" பகுதியில் இருக்கும் போட்டர் கிரீஸ் கோட்டைத் தாண்டினால், பௌலர் பந்துவீசாமல் அவரை அப்படியே ரன்–அவுட் செய்யும் முறையை குறிப்பதாகும்.
- 1948ல் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான தொடரில் இந்திய வீரர் "மன்கட்டிங்" என்பரால் இந்த முறை துவங்கப்பட்டது.

## பன்றியின் இதயம் பொருத்தப்பட்டவர் மரணம்

- சில மாதங்களுக்கு முன்பு இவருக்கு பன்றியின் இதயம் பொருத்தப்பட்டது. அமெரிக்காவில் உள்ள மேரிலேண்ட் மாகாணத்தைச் சேர்ந்தவர் டேவிட் பென்னட் (57).

## "மெராபி" எரிமலை வெடிப்பு

- இந்தோனேஷியாவில், 'மெராபி' எரிமலை வெடித்து.
- தென்கிழக்கு ஆசிய நாடான இந்தோனேஷியாவில், 120க்கும் மேற்பட்ட எரிமலைகள் உள்ளன. இந்நிலையில், இங்கு, மத்திய ஜாவா – யோக்கியகர்தா இடையே இருக்கும், 2,968 மீட்டர் உயரமுள்ள மெராபி எரிமலை, வெடித்துச் சிதறியது.
- மெராபி எரிமலை 450 ஆண்டுகளுக்கும் மேலாக, பல்வேறு சூழல்களில், எரிமலைக் குழம்பை வெளியேற்றி வருகிறது.

## நிதி மேலாண்மையில் இந்தியா சிறந்து விளங்கி வருகிறது

- நிதி மேலாண்மையில் இந்தியா சிறந்து விளங்கி வருவதாகத் தெரிவித்த சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்), உக்ரைன் மீதான ரஷியாவின் போர் காரணமாக சர்வதேச அளவில் எரிபொருள் விலை உயர்வது இந்தியாவுக்கு சவாலைத் தரும் என்று தெரிவித்துள்ளது.

### ஐஎம்எஃப்

- துவக்கம் 1944
- தலைமையிடம் – வாஷிங்டன் அமெரிக்கா
- ஐஎம்எஃப் இயக்குநர் – கிறிஸ்டலினா ஜார்ஜிவா.
- ஐஎம்எஃப் துணை இயக்குநர் – கீதா கோபிநாத்.

## உக்ரைனுக்கான இந்தியா தூதரகத்தை போலந்துக்கு மாற்ற முடிவு

- உக்ரைனில் ரஷிய படையெடுப்பால் பாதுகாப்பு கேள்விக்குறியான நிலையில், அந்நாட்டிலெ' உள்ள இந்திய தூதரகத்தை தற்காலிகமாக அதன் அண்டை நாடான போலந்துக்கு இடம் மாற்றம் செய்ய முடிவு செய்திருப்பதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- உக்ரைனில் சிக்கிய இந்தியர்களை மீட்கும் முயற்சியின் ஒரு பகுதியாக லவீவ் நகரில் தற்காலிக முகாம் அலுவலகம் அமைக்கப்பட்டது. மேற்கு உக்ரைனில் அமைந்துள்ள லவீவ், போலந்து எல்லையிலிருந்து 70 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

## உலகின் மகிழ்ச்சியான நாடு ஃபின்லாந்து

- உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைத் தொடர்ந்து 5–ஆவது ஆண்டாக ஃபின்லாந்து பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியா 3 இடங்கள் முன்னேறி 136–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.
- சர்வதேச மகிழ்ச்சி நாள் ஆண்டுதோறும் மார்ச் 20–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அதையொட்டி உலகின் மகிழ்ச்சியான நாடுகள் பட்டியலை ஐ.நா. நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் அமைப்பு வெளியிட்டது. தொடர்ந்து 10–ஆவது ஆண்டாக இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- மக்களிடம் கணக்கெடுப்பு நடத்தி இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது. கணக்கெடுப்பின்போது மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி), ஆயுள்காலம், வாழ்வில் முடிவெடுப்பதற்கான சுதந்திரம், சமூக ஆதரவு, மக்களின் பெருந்தன்மை, ஊழல் உள்ளிட்டவை தொடர்பாக ஆராயப்பட்டது.
- கரோனா தொற்று பரவல் காலத்தில் நாடுகள் தங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த என்ன மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டன, மக்களின் நலன் குறித்து நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு அறிக்கையில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.
- மொத்தம் 146 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஃபின்லாந்து தொடர்ந்து 5–ஆவது முறையாக உலகின் மகிழ்ச்சியான நாடு என்ற பெருமையைப் பெற்றுள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, ஸ்விட்சர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியா 136–ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டுக்கான அறிக்கையில் 139–ஆவது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது 3 இடங்கள் முன்னேறியுள்ளது.
- சீனா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட அண்டை நாடுகள் அனைத்தும் இந்தியாவுக்கு முன்னிலையில் உள்ளன. இந்தப் பட்டியலில் தலிபான்கள் ஆட்சி நடைபெற்று வரும் ஆப்கானிஸ்தான் கடைசி இடத்தில் உள்ளது. லெபனான். ஜிம்பாப்வே, ருவாண்டா, போட்ஸ்வானா ஆகிய நாடுகள் ஆப்கானிஸ்தானுக்கு முந்தைய இடங்களில் உள்ளன.

**உலகின் மகிழ்ச்சியான நாடுகள்**

| | |
|---|---|
| ஃபின்லாந்து | ஆஸ்திரியா |
| டென்மார்க் | ஆஸ்திரேலியா |
| ஐஸ்லாந்து | அயர்லாந்து |
| ஸ்விட்சர்லாந்து | ஜெர்மனி |
| நெதர்லாந்து | கனடா |
| லக்ஸம்பர்க் | அமெரிக்கா |
| ஸ்வீடன் | பிரிட்டன் |
| நார்வே | செக் குடியரசு |
| இஸ்ரேல் | பெல்ஜியம் |
| நியூஸிலாந்து | பிரான்ஸ் |

**இறுதி இடத்தில் உள்ள நாடுகள்**

- 137 ஜாம்பியா
- 138 மலாவி
- 139 தான்சானியா
- 140 சியரா லியோன்
- 141 லெசோதோ
- 142 போட்ஸ்வானா
- 143 ருவாண்டா
- 144 ஜிம்பாப்வே
- 145 லெபனான்
- 146 ஆப்கானிஸ்தான்

**இந்தியாவும் அண்டை நாடுகளும்**

- 72 சீனா
- 84 நேபாளம்
- 94 வங்கதேசம்

- 121 பாகிஸ்தான்
- 126 மியான்மர்
- 127 இலங்கை
- 136 இந்தியா

## "ஆசனி" புயல்

- "ஆசனி" புயல் காரணமாக அந்தமான் நிகோபார் தீவு பகுதியில் உருவாகி உள்ளது.

## உலக அழகி பட்டத்தை வென்றார் போலந்து இளம்பெண் கரோலினா

- 2021–ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் பட்டத்தை போலந்தைச் சேர்ந்த கரோலினா பைலாவ்ஸ்கா தட்டிச்சென்றுள்ளார்.
- 70–ஆவது உலக அழகிப் போட்டி, கரீபியன் தீவுகளில் ஒன்றான போர்டோரிகாவில் உள்ள சான் ஜுவான் நகரில் நடத்தப்பட்டது.
- அதில், 2020–இல் மிஸ் இந்தியா பட்டம் வென்ற மானசா வாராணசி உள்பட 97 பேர் கலந்துகொண்டனர்.
- இறுதியில், போலந்தைச் சேர்ந்த கரோனாலி பைலாவ்ஸ்கா உலக அழகிப் பட்டத்தை வென்றார். அவருக்கு 2020–இல் உலக அழகிப் பட்டம் வென்ற ஜமைக்கா அழகி டோனி ஆன் சிங் கிரீடம் அணிவித்து கௌரவித்தார்.
- அமெரிக்காவை சேர்ந்த இந்திய அமெரிக்கரான ஸ்ரீ சாயினி இரண்டாவது இடத்தையும், ஐவரி கோஸ்ட்டைச் சேர்ந்த ஒலிவியா யேஸ் மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். முன்னதாக, இந்தப் போட்டி, கடந்த டிசம்பர் 16–ஆம் தேதி நடக்க திட்டமிடப்பட்டிருந்தது.

## சீனாவில் 132 பயணிகளுடன் விழுந்து நொறுங்கிய விமானம்

- சீனாவில் 132 பயணிகளுடன் சென்ற 'போயிங் 737' விமானம் குவாங்ஜி ஜுவாங் பகுதியில் கீழே விழுந்து நொறுங்கியது.
- குன்மிங்கில் இருந்து அந்நாட்டு உள்ளூர் நேரப்படி திங்கள்கிழமை பகல் 1.10 மணிக்கு இந்த விமானம் புறப்பட்டது. குவாங்ஜோ விமான நிலையத்துக்கு பகல் 2.52 மணிக்கு வந்து சேர வேண்டிய இந்த விமானம், உரிய நேரத்தில் வராததால் தேடுதல் பணி நடைபெற்றது.

## உத்தரகண்ட் முதல்வராக மீண்டும் புஷ்கர் சிங் தாமி 8 அமைச்சர்களும் பொறுப்பேற்றனர்

- உத்தரகண்ட் முதல்வராக புஷ்கர் சிங் தாமி தொடர்ந்து 2–ஆவது முறையாக பதவியேற்றார். அவருடன் 8 அமைச்சர்களும் பதவியேற்றுக் கொண்டனர்.
- டேராடூன் அணிவகுப்பு மைதானத்தில் பிரதமர் மோடி முன்னிலையில், புஷ்கர் சிங் தாமிக்கு ஆளுநர் குர்மித் சிங் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

## ஜிஎஸ்எல்வி எஃப்–10 திட்டம் தோல்வி அடைந்தது ஏன்?

- கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் விண்ணில் செலுத்தப்பட்ட ஜிஎஸ்எல்வி– எஃப்–10 ராக்கெட் திட்டம் தோல்வி அடைந்ததற்கான காரணத்தை இஸ்ரோ நிறுவனம் கண்டறிந்து விளக்கம் அளித்துள்ளது.
- ஸ்ரீஹரிகோட்டா தளத்தில் இருந்து புவி ஆய்வு செயற்கைக்கோளுடன் (இஓஎஸ்–03) ஜிஎஸ்எல்வி–எஃப்–10 ராக்கெட் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 12–ஆம் தேதி விண்ணில் ஏவப்பட்டது. 307 விநாடிகள் பறந்த பிறகு திட்டமிட்ட பாதையில் இருந்து ராக்கெட் விலகியதால், அது செயலிழக்கச் செய்யப்பட்டது.
- இந்த திட்டத்தின் தோல்வி குறித்து ஆராய நிபுணர் குழு (எஃப்ஏசி) இஸ்ரோ நிறுவனம் நியமித்தது.

## ரஷிய வெளியுறவு அமைச்சர் இந்தியா வருகை

- ரஷிய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் இரண்டு நாள் பயணமாக இந்தியா வருகிறார். உக்ரைன் மீது ரஷியா கடந்த மாதம் போர் தொடுக்கத் தொடங்கிய பிறகு அவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும்.

# 8 தமிழ்நாடு



## தேசிய அறிவியல் தின விழா

- சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அரும்பாக்கம் டி.ஜி.வைணவக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களில் தேசிய அறிவியல் தின விழா கொண்டாடப்பட்டது.
- ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்ற விழாவை துணைவேந்தர் பி.வி.விஜயராகவன் தொடக்கி வைத்தார்.
- இதில் ஸ்ரீராமச்சந்திரா ஆய்வுத் துறை தலைவர் மருத்துவர் கல்பனா பாலகிருஷ்ணன், மாணவர்கள் துறைத்தலைவர் மருத்துவர் பாலாஜி சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## "ஆதிச்சநல்லூர் அகழாய்வில் 3 காலகட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள்"

- ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2020–ஆம் ஆண்டு அறிவித்தார்.
- இதையடுத்து, இப்பகுதியில் அருங்காட்சியகம் அமைக்க இடம் தேர்வு செய்யும்பணியையும், ஆதிச்சநல்லூர் பரம்புப் பகுதியில் அகழாய்வுப் பணியையும் மத்திய தொல்லியல் துறை திருச்சி மண்டல இயக்குநர் அருண்ராஜ் தலைமையிலான அதிகாரிகள் கடந்த அக்டோபர் 1இல் தொடங்கினர். இதற்காக முதல்கட்டமாக ரூ.17 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.
- கடந்தாண்டு அக்டோபர் முதல் இங்கு அகழாய்வுப் பணி ஏ, பி என இரு பிரிவாக பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில். மொத்தம் 3 காலகட்டங்களை உள்ளடக்கிய 52 முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன. ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அகழாய்வுப் பணி நடைபெறும் இடத்தில் உள்ளது உள்ளபடி என்ற அடிப்படையில் அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது.

## ஸ்மார்ட் சிட்டி திட்ட முறைகேடு புகார்: ஒரு நபர் விசாரணைக் குழு அமைப்பு

- தமிழகத்தில் பொலிவுறு நகர (ஸ்மார்ட் சிட்டி) திட்டங்களில் நடைபெற்ற முறைகேட்டுப் புகார்கள் குறித்து விசாரிக்க ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி பி.டபிள்யூ.சி.டேவிதார் தலைமையில் ஒரு நபர் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## மாநகராட்சி மேயருக்கு 105 பவுன் பதக்கம்

- சென்னை மாநகராட்சியின் புதிய மேயராகப் பொறுப்பேற்ற ஆர்.பிரியாவுக்கு 105 பவுன் எடையிலான பாரம்பரியமிக்க பதக்கத்தை ஆணையாளர் ககன்தீப் சிங் பேடி அளித்தார். சென்னை மாநகராட்சியானது 333 ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது. 1687–1692 ஆம் ஆண்டு கால கட்டத்தில் கவர்னர் எலிஹியேல்ஸ் ஆட்சியின் கீழ், சென்னை மேயர் மற்றும் மாநகராட்சி அமைப்பு உருவானது.
- 1688–ஆம் ஆண்டு செப்டம்பர் 29–இல் முதல் மேயராக நாதனியேல் ஹிக்கின்சன் நியமிக்கப்பட்டார். அந்த காலகட்டத்தில்தான் மாநகராட்சி திறந்து வைக்கப்பட்டது. மேயர் மற்றும் பலர் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.
- ஹிக்கின்சன் ஆறு மாதங்கள் பணியாற்றினார். இதன்பிறகு, லிட்டில்டன் பதவியேற்றார். 1886–ஆம் ஆண்டு முதல், மாநகராட்சியின் தலைவராகவும், மேயரின் பணிகளைச் செய்யவும் ஒரு தலைவர் நியமிக்கப்பட்டார்.
- மாநகராட்சியின் முதல் தலைவர் லெப்டினன்ட் கர்னல் ஜிஎம்ஜே மூர் ஆவார்.

- முதன்முதலாக, 1916–இல், மாநகராட்சியின் முழுநேர தலைவராக டி.விஜயராகவாச்சாரியா ஆனார். 1919–இல் நீதிக்கட்சியின் பி.தியாகராஜ செட்டி, ஓர் அரசியல் கட்சியின் பிரதிநிதியாக முதலில் நியமிக்கப்பட்டார்.
- 1933–ல் கவுன்சில் தலைவர் குமாரராஜா முத்தையா செட்டியார், 1919–ன் நகர முனிசிபல் சட்டத்தில் திருத்தம் செய்து, மேயர் அலுவலகத்தை மீண்டும் உருவாக்கினார்.
- தேக்கு மர நாற்காலியும், தங்கச் சங்கிலியும், ராஜா முத்தையா செட்டியார் சொந்த செலவில் ஒரே தேக்கு மரத்தால் அழகிய வேலைப்பாடுடன் செய்யப்பட்ட நாற்காலி மற்றும் 105 சவரன் வரையிலான தங்க சங்கிலி மற்றும் வெள்ளியிலான செங்கோல் முதலியவற்றை சென்னை மாநகராட்சிக்கு அப்போதே வழங்கினார்.
- அன்று முதல் சென்னை மாநகராட்சியில் மேயராக பதவி ஏற்கும் அனைவருக்கும் பாரம்பரியமாக தங்க சங்கிலி, செங்கோல் கொடுத்து தேக்கு மரத்தால் செய்யப்பட்ட நாற்காலியில் அங்கி அணிந்து அமர வைக்கப்படுவர். அந்த பாரம்பரிய முறைப்படி, மேயருக்கான மறைமுகத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆர். பிரியாவும் அமர வைக்கப்பட்டார்.
- தங்க சங்கிலியானது முதல்வர், பிரதமர் உள்ளிட்ட அதிமுக்கிய பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்வில் மட்டுமே மேயர் அணிந்து கொள்வார். ஒவ்வொரு மாமன்ற கூட்டத் தொடரின் போது சின்ன டாலர் உடனான தங்க சங்கிலியை மட்டுமே அணிந்திருப்பார்.

## செயற்கை நுண்ணறிவு நுட்பத்தில் "கேத் ஆய்வகம்" தொடக்கம்

- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திலான கேத் ஆய்வகம் தமிழகத்திலேயே முதன்முறையாக சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் இந்த ஆய்வகம், இதயம், ரத்த நாளம், புற்றுநோய் மற்றும் நரம்பு தொடர்பான பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு அளிக்க உதவியாக இருக்கும். முற்றிலும் தானியங்கியாக செயல்படும் கேத் ஆய்வகக் கருவிகளை மருத்துவர்கள் தாமாக சரி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. இதன் காரணமாக இதன்மூலம் எடுக்கப்படும் படங்கள் மிகத் துல்லியமாக இருப்பதோடு பரிசோதனைகளையும் வேகமாகச் செய்ய முடியும்.

## தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 30, 31–இல் மகாகவி பாரதியார் நினைவு நூற்றாண்டு பன்னாட்டு ஆய்வரங்கம்

- மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு நூற்றாண்டையொட்டி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை, இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை, வானவில் பண்பாட்டு மையம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து "மகாகவி பாரிதியாரின் உரைநடை ஆக்கங்கள்" என்ற பன்னாட்டு ஆய்வரங்கத்தை மார்ச் 30, 31–ஆம் தேதிகளில் நடத்தவுள்ளன.

## அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிக்கு 11 மையங்கள் தொடங்க அனுமதி

- அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் 11 புதிய ஆராய்ச்சி மையங்கள் தொடங்குவதற்கும், தொழில் முனைவோரை உருவாக்குவதற்கான பயிற்சி அளிப்பதற்கும் ஆட்சிமன்றக் குழு கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில், ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளைப் போன்று அண்ணா பல்கலைக்கழகத்திலும் மேற்கொள்வதற்காகவும் 11 துறைகளில் புதியதாக ஆராய்ச்சி மையம் அமைக்க ஆட்சி மன்றக்குழு கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## பந்தல்குடியில் பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா

- அருப்புக்கோட்டை அருகேயுள்ள பந்தல்குடியில் சுண்ணாம்புக்கல் சுரங்கத்தில் சுமார் 72 ஏக்கரில் ரூ.5.20 கோடியில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்காவை தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை–தூத்துக்குடி செல்லும் சாலையில் உள்ள பந்தல்குடியில், ராம்கோ நிறுவனத்துக்குச் சொந்தமான 800 ஏக்கர் பரப்பளவில் சுண்ணாம்புக்கல் சுரங்கம் உள்ளது. சுற்றுப்புறச்சூழலைக் கருத்தில் கொண்டு அச்சுரங்க பகுதியில் உள்ள செயல்படாத 72 ஏக்கர்

பரப்பளவில் ரூ. 5.20 கோடி மதிப்பில் மறுசீரமைப்பு செய்து பல்லுயிர் பெருக்க சுற்றுச்சூழல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

- அதில்நீர்நிலைப்பாதை,வறண்டநிலைதாவரமான கற்றாலை, அடியம்தோட்டம், பந்தல் பூங்கா, புல்வெளி, கல்பூங்கா வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் அடர்வனக் (மியாவாக்கி) காடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோல் அனைத்து தட்டவெப்ப சூழ்நிலைகளிலும் வளரக்கூடிய வேம்பு, புங்கன், அரசமரம், அத்தி, ஆலமரம், வாகை, நாவல், வில்வம், விலா, இலந்தை, நீர்மருது ஆகிய மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

## அதிகாரிகள், கல்வியாளர்கள், தொழில் முனைவோர் இணைந்து ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளில் கவனம் செலுத்த உள்ளனர்

- மார்ச் 7 முதல் 9 வரை நடைபெறும் "Imagining India @ 2017 through innovation" கருத்தரங்கில் சென்னை இந்திய தொழில்நட்பக் கழகத்தை சேர்ந்த இளம் கல்வியாளர்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர் இளம் நிர்வாக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.
- ஐஐடிஎம் மற்றும் ஐஐடிஎம் ஆராய்ச்சி பூங்காவுடன் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறை தீர்க்கும் துறை இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. மத்திய பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஒய்வூதியத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், இந்நிகழ்ச்சியைத் தொடங்சி வைக்கிறார்.

## மாற்றுத் திறனாளிகள் நல வாரிய சீரமைப்பு உத்தரவு நிறுத்தி வைப்பு

- முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியமானது திருத்தப்பட்டு அண்மையில் உத்தரவு வெளியிடப்பட்டது. அதில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை செயலாளர் துணைத் தலைவராகவும், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் உறுப்பினராகவும், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர், உறுப்பினர் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.
- இந்த நியமனங்களில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. இதையடுத்து, சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு அரசின் புதிய மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் மறுசீரமைப்பு செய்யப்படுவதற்காக, வெளியிடப்பட்ட அரசாணை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

## நாட்டிலேயே முதல் முறையாக தூத்துக்குடியில் மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையம் தொடக்கம்

- நாட்டிலேயே முதல் முறையாக தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்ட மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையத்தின் செயல்பாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற் சாலையில் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இரண்டு பெரிய குளங்கள் உள்ளன. அவற்றின் மேற்புறத்தில் ரூ.150 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் ஆண்டுக்கு 42 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதை தங்களுடைய தொழிற்சாலைகளிலேயே உபயோகப்படுத்தும் விதமாக மிதக்கும் சூரிய மின்சக்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- 22 மெகாவாட் திறன் கொண்ட மிதக்கும் சூரிய மின் சக்தி நிலையத்திட்டம், நவீனகால பசுமை, நிலையான தொழில்நுட்பம் மற்றும் தன்னிறைவு பெற்ற ஆற்றல் உற்பத்தியை செயல்படுத்த ஸ்பிக் நிறுவனத்தின் நவீன யுக்தியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

## மார்ச் 18–இல் தமிழக நிதிநிலை

- தமிழக சட்டப் பேரவை வரும் 18–ஆம் தேதி கூடவுள்ளது என்றும், அன்றைய தினம் வரும் நிதியாண்டுக்கான (2022–2023) நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) பேரவையில் தாக்கல் செய்யப்படும் என்றும் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்தார்.

## 'மகளிர் சக்தி புரஸ்கார்"

- சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 2020 மற்றும் 2021–ஆம் ஆண்டுக்கான மகளிர் (நாரி) சக்தி விருதுகளை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார். இரு ஆண்டுகளுக்கும் சேர்த்து வழங்கப்பட்ட 28 விருதுகளில் சென்னையைச் சேர்ந்த மன நல மருத்துவர், நீலகிரி தோடரின கைப்பின்னல் பெண்கள் தமிழகத்தைச் சேர்ந்த மூவர் விருது பெற்றனர்.
- சிறப்பாகச் சேவையாற்றி வரும் பெண்களுக்கு சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் ஆண்டு தோறும் 14 மகளிர் சக்தி விருதுகளை வழங்குகிறது.

- குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தமிழகத்தின் நீலகிரி தோடர் இனப் பெண்கள் ஜெயமுத்து, தேஜம்மா ஆகியோர் சிக்கலான தோடரின எம்பிராய்டரி கொண்ட சால்வைகள் மற்றும் ஆடைகளை உருவாக்குவதற்காக இந்த மகளிர் சக்தி விருதை இணைந்து பெற்றனர். நீலகிரி தோடரின மக்களின் கலைப் படைப்பான இது, பெண்களால் பிரத்யேகமாக செய்யப்படும் கைப்பின்னல் ஆகும்.
- சென்னை அண்ணா நகரில் ஸ்கார்ஃப் ஆராய்ச்சி அறக்கட்டளை இணை நிறுவனர் டாக்டர் ஆர். தாராவுக்கு 2021–ஆம் ஆண்டுக்கான மகளிர் சக்தி விருது வழங்கப்பட்டுள்ளது. மனநல மருத்துவர், ஆய்வாளரான தாரா, இந்த அமைப்பை 1984–ஆம் ஆண்டு டாக்டர் சாரதா மேனனுடன் தொடங்கினார். மனநோய் குறித்த மூடநம்பிக்கை, இத்தகைய நோயாளிகள் குறித்த தவறான கருத்துகள் போன்றவற்றை அகற்றியதற்காகவும், நோயாளிகள் தாமதமின்றி மருத்துவம் பெறுதல், மனநல நோய்க்கான விழிப்புணர்வு ஆகியவற்றை வழங்கியதற்காகவும் உலக சுகாதார அமைப்புடன் இணைந்து புனரமைப்பு உள்ளிட்ட புதுமையான, இடைவிடாத முயற்சிகளை மேற்கொண்டார். இதையொட்டி இவருக்கு மகளிர் சக்தி புரஸ்கார் விருது அளிக்கப்பட்டுள்ளது.
- மேலும், மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா இவரது நிறுவனத்துக்கு இலவசமாக நிலம் ஒதுக்கித் தந்துள்ளார். அதன்மூலம் தமிழகத்தின் 7 மாவட்டங்கள், கிராமங்களுக்கு இலவச கைப்பேசி வழி மனநல மருத்துவ சேவையையும் இவரது நிறுவனம் அளித்து வருகிறது.
- மேலும், ஜோதிர்கமயா அறக்கட்டளை மூலம் பார்வையற்றோருக்கான நடமாடும் பள்ளியை நிறுவி பணிகளை மேற்கொண்டு வரும் கேரளத்தைச் சேர்ந்த பார்வையற்ற டிஃப்பனி ப்ரார், வணிகக்கடற்படையின் முதல் இந்தியப் பெண் கேப்டனான திருச்சூரைச் சேர்ந்த ராதிகா மேனன்.

## குடும்பத் தலைவிகள் பெயரில் அரசு வீடுகள்: முதல்வர்

- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள், குடும்பத் தலைவிகளின் பெயரிலேயே இனி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- நிகழாண்டில், ரூ.20 ஆயிரம் கோடி அளவுக்கு சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் தர இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். இது வரை ரூ.6,77 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

## பேரிடர் மேலாண்மைக்கான முதல் மண்டல மாநாடு

- தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் ஒருங்கிணைப்பில் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் நடத்திய பேரிடர் மேலாண்மைக்கான முதல் மண்டல மாநாட்டை தமிழ்நாடு தலைமைச் செயலாளர் வி.இறைஅன்பு தொடங்கி வைத்தார்.
- மொத்தம் 10 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் இரண்டு நாள் நிகழ்வில் பங்கேற்கின்றன, இது பேரிடர் மேலாண்மையில் பங்கேற்பாளர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒருவருக்கொருவர் சிறந்த நடைமுறைகளைக் கற்றுக்கொள்வதற்கும் ஒரு தளத்தை வழங்கும்.

## 'நம் பள்ளி, நம் பெருமை' என்ற புதிய செயலி

- சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு விழா நினைவு நூலகத்தில், 'நம் பள்ளி, நம் பெருமை' என்ற பெயரிலான புதிய செயலி (App) ஒன்றை பள்ளிக் கல்வித்துறை வடிவமைத்துள்ளது. அதனை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி நேற்று அறிமுகப்படுத்தினார். மேலும், ஒவ்வொரு பள்ளிக்கும் திட்டக் கையேடு அடங்கிய பள்ளி மேலாண்மைக் குழுவுக்கான கையேடுகள் வெளியிடப்பட்டது. பள்ளி மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவத்தை மக்களுக்கு விளக்கும் வகையில் பரப்புரைப் பாடல் வெளியிடப்பட்டது. தமிழகம் முழுவதும் 4 பேர் கொண்ட 500 கலைக் குழுக்கள் கிராமங்களில் 15 நாட்கள் பயணம் செய்து பரப்புரைப் பணியில் ஈடுபட உள்ளனர்.
- நம் பள்ளி; நம் பெருமை' என்ற திட்டத்தின் மூலம், ஏற்கெனவே உள்ள பள்ளி மேலாண்மைக் குழுவை எப்படி மேம்படுத்துவது, அது குறித்து எப்படி விழிப்புணர்வு ஏற்படுத்துவது என்பதற்கான பரப்புரையை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி இன்று நடந்தது. தொலைக் காட்சி விளம்பரமும், வெளியிடப்பட்டது. அதற்கான புதிய செயலியும் வெளியிடப்படுகிறது. பள்ளி வராத குழந்தைகளுக்கு இது பெரிய அளவில் உதவும். இதில் பெற்றோர் பங்கு அதிகம் இருக்க வேண்டும் என்பதும் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம். சுயஉதவிக் குழுக்கள், தன்னார்வலர்கள், உள்ளூர் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட

20 பேர் கொண்ட குழுவும் அமைக்கப்படும். அனைவருக்கும் கல்வி திட்டத்தின் நிதியில் இருந்து இதற்கு செலவிடப்படும்.

## முதல்வரின் புத்தாக்கத் திட்டம்

- தமிழக இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் திறமையை அரசுக்கு உதவும் வகையில் மேம்படுத்தும், முதல்வரின் புத்தாக்கத் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதில், இளைஞர்களுக்கு தொழில்முறை மற்றும் கல்வி அடிப்படையில் இரண்டு ஆண்டு காலம் ஊக்க ஊதியத்துடன் பயிற்சி வழங்கி, பின்னர் தேர்வு செய்யப்படும் இளைஞர்கள் முதல்வர் அலுவலம், தமிழக அரசின் முதன்மை திட்டங்களைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.
- நடப்பாண்டில் 30 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளது. மேலும் இந்தத் திட்டத்துக்கு ரூ.5.66 கோடி ஒதுக்கப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சிக்காக அடையாளம் காணப்பட்ட பன்னிரண்டு பகுதிகள் – நீர் வளத்தை பெருக்குதல்; விவசாய உற்பத்தியை அதிகரிக்கவும் மற்றும் சந்தைப்படுத்தல் இணைப்புகளை உருவாக்கவும்; அனைவருக்கும் வீடு வழங்க வேண்டும்; கல்வி தரத்தை மேம்படுத்துதல்; சுகாதார குறிகாட்டிகளை அதிகரிக்கவும்; சமூக உள்ளடக்கத்தை அடைய; கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் தூசி வளர்ச்சியை எளிதாக்குதல்; திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் வளர்ச்சியை வழங்குதல்; நிறுவன கடன் வசதி; பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க; சுற்றுச்சூழல் சமநிலையை அடைதல் மற்றும் தரவு நிர்வாகத்தை மேம்படுத்துதல்.
- அவர்கள் தலா ₹50,000 மாதாந்திர ஊதியம் மற்றும் அவர்களின் தற்செயலான செலவுகளைச் சமாளிக்க தலா ₹10,000 கூடுதல் கொடுப்பனவுகளைப் பெறுவார்கள்.

## தொடங்குகிறது மாவட்ட ஆட்சியர்கள்–எஸ்.பி.க்கள் மாநாடு

- மாவட்ட ஆட்சியர்கள், காவல் அதிகாரிகளின் மூன்று நாள்கள் மாநாடு தலைமைச் செயலகத்தில் தொடங்குகிறது. இந்த மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார்.
- மூன்று நாள்கள்: மாவட்ட ஆட்சியர்கள், காவல் அதிகாரிகளின் மூன்று நாள்கள் மாநாடு காலை மற்றும் மாலை என இரண்டு வேளைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மாவட்ட ஆட்சியர்கள், காவல் அதிகாரிகளின் கூட்டுக் கூட்டம் நடக்கிறது.

## இயற்கை வேளாண்மை–விளைபொருள் ஏற்றுமதி

- இயற்கை வேளாண்மை, விளைபொருள் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு இனி பரிசு வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து, வேளாண்மைத் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி வெளியிட்ட அறிவிப்பு:–
- வேளாண் தொழில்நுட்பங்களையும், இயந்திரங்களையும் கண்டுபிடிக்கும் விவசாயிகளுக்கு ரூ.2 லட்சம் பரிசு வழங்கப்பட உள்ளது. இதே போன்று, இயற்கை வேளாண்மை, வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு மொத்தமாக ரூ.2 லட்சம் அளிக்கப்படும். இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயி, முதலில் செல்லிடப்பேசியில் உழவன் செயலி மூலமாகப் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்தப் போட்டியில் குத்தகைக்கு சாகுபடி செய்யும் விவசாயிகளும் கலந்து கொள்ளலாம்.

## சென்னை ஐஐடி–வால்மார்ட் நிறுவனம் இடையே புரிந்துணர்வு

- தொழில்நுட்பத்தின் புதிய பகுதிகளில் ஆராய்ச்சியை விரைவுப்படுத்தவும், வால்மார்ட் பணியாளர்களுக்கு தொடர்ச்சியான கல்வியை வழங்கவும், இந்தியாவில் உள்ள அந்த நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டங்களில் ஒத்துழைக்கவும், சென்னை ஐஐடி–வால்மார்ட் குளோபல் டெக் நிறுவனம் இடையே புரிந்துணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வால்மார்ட் நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அதிகாரி சுரேஷ்குமார், தலைமை மேம்பாட்டு அதிகாரி மகேஷ் பங்சக்நுலா, சென்னையில் உள்ள அமெரிக்க துணை தூதர் ஜுடித் ரவின் ஆகியோர் முன்னிலையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

## சிறப்பாகச் செயல்பட்ட காவல் துறையினருக்கு முதல்வர் கேடயங்கள்

- பல்வேறு பிரிவுகளின் கீழ் சிறப்பாகச் செயல்பட்ட காவல் துறையினருக்கு கேடயங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார். மாவட்ட ஆட்சியர்கள்,

காவல் கண்காணிப்பாளர்கள் மாநாடு, சென்னையில் தொடங்கியது. மாவட்டங்களில் பல்வேறு பிரிவுகளின் கீழ் சிறப்பாகச் செயல்பட்ட காவல் துறையினருக்கு மாநாட்டின் முதல் நாளில் கேடயங்களை முதல்வர் அளித்தார்.

- போதைப் பொருளுக்கு எதிரான சிறப்பு நடவடிக்கைக்காக தூத்துக்குடி மாவட்டத்துக்கும், இணையதளக் குற்றங்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக நாமக்கல் மாவட்டத்துக்கும், குற்றச்செயல்களில் ஈடுபடுவர்களுக்கு எதிரான சிறப்பு நடவடிக்கைக்காக மதுரை மாநகரத்துக்கும், கண்காணிப்பு கேமிராக்களை அதிகளவு பொருத்தியதற்காக வேலூர் மாவட்டத்துக்கும், இணைய அலுவலக மேலாண்மையைச் சிறப்பாக கையாண்டதற்காக கோவை மாவட்டத்துக்கும் கேடயங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்தார்.

## 2025–ம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க இலக்கு

- இதேபோல், ஆரம்ப சுகாதார மையங்களிலும் காசநோய் பரிசோதனைகளை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கான, கட்டமைப்புகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது ஒரு லட்சம்பேரில் அதிகபட்சமாக 162 பேர் காசநோயால் பாதிக்கப்படுகின்றனர். 2025–ம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து பணியாற்றி வருகிறோம்".
- "இந்தியாவில் ஒரு லட்சம் பேருக்கு 37 பேர் என்ற வீதத்தில் காசநோயால் உயிரிழக்கின்றனர். மேலும், கிராம அளவில் காசநோயைக் கண்டறிவதற்காக நடமாடும் சோதனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளன. காசநோய் சிகிச்சை பெறுபவர்களுக்கு நேரடி வங்கிப் பரிவர்த்தனை மூலம் அரசு நிதிஅளித்து வருகிறது".

## நியாயவிலைக்கடைகள் திறப்பு

- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தாம்பரம் மாநகராட்சி பகுதியில் 5 நியாய விலைக்கடைகள் திறப்பு.

## சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி

- கடைசியாக 2018 ஆம் ஆண்டு ஜனவரியில் திருத்தம் செய்யப்பட்டது.
- மாநில அரசால் முழுவதும் நிதியளிக்கப்படும் இத்திட்டத்திற்கு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதியில் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளை அடையாளம் கண்டு முன்மொழிகின்றனர்.
- இந்தத் திட்டமானது கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் செயல்படுத்தப்படுகின்றது.
- இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிர்வாக அனுமதியளித்து அதனைச் செயல்படுத்தும் நிறுவனங்களையும் அடையாளம் காண்பார்.

## சென்னையில் பன்னாட்டு கருத்தரங்கு: தொல்லியல் துறை ஏற்பாடு

- தமிழக அரசின் தொல்லியல் துறை மற்றும் ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் ஆகியவை சார்பில் கல்வெட்டியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் நினைவாக "பண்டைய தமிழ்ப் பண்பாடும் மரபும்" என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கு சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொடங்கியது.

## அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

- மாவட்ட ஆட்சியர்கள், காவல் அதிகாரிகள் மற்றும் வனப் பணி அலுவலர்களுடனான மூன்று நாள்கள் மாநாடு சென்னை தலைமைச் செயலகத்தில் தொடங்கி நடைபெற்ற வருகிறது.
- அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி: மாவட்ட நிர்வாகத்தின் முன்னுரிமைகள் அனைத்தும், மாநில அரசின் முன்னுரிமைகளுடன் ஒன்றியதாக இருக்க வேண்டும்.
- மாநில அரசின் பரந்துபட்ட நோக்கமாக இருக்கக் கூடிய அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியானது திட்டச் செயலாக்கத்திலும் வெளிப்பட வேண்டும். குறிப்பாக, விளிம்புநிலை மனிதர்கள், சிறுபான்மையினர், பட்டியலின மக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகள் துறையில் புதிய அடையாள அட்டை வழங்கும் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். விடுபட்ட மாற்றுத் திறனாளிகளைக் கண்டறிய வேண்டும்.

- மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒருங்கிணைந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அன்றைய தினமே அடையாள அட்டை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல திட்டங்கள், வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் அதே தருணத்தில், மக்களை உடனடியாக பாதிக்கக் கூடிய சில குறிப்பிட்ட அடிப்படை விஷயங்களிலும் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.
- உதாரணமாக, பட்டா மாறுதல், சான்றிதழ்கள் வழங்குதல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், குறிப்பாக நீர்நிலைப் புறம்போக்குகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவற்றில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.
- ஊட்டச்சத்து பட்டியலில் தமிழ்நாடு 19-ஆவது இடத்தில் உள்ளது. இதனை சரி செய்ய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதாந்திர வங்கியாளர்கள் கூட்டத்தை நடத்தி கல்விக் கடன், சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உள்ளிட்டவை முறையாக வழங்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு திட்டத்தையும் நுணுக்கமாக கண்காணித்து செயல்பட வேண்டும் என்றார் அவர்.

## திருகோணமலையில் சூரிய மின் உற்பத்தி மையம்

- NTPC, சிலோன் மின்சார வாரியம், CEB இணைந்து சூரிய மின் உற்பத்தி நிலையத்தை திரிகோணமலையில் அமைப்பதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. NTPCC சிலோன் மின்சார வாரியம், தேசிய அனல் மின்சார கார்ப்பரேஷன்.

## ஏழைகளுக்கு குறைந்த விலையில் வீடுகள்

- சென்னை அருகேயுள்ள மாமல்லபுரத்தில், 30-வது அனைத்திந்திய கட்டுநர் மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்து ஆற்றிய உரை: கட்டுநர் தொழிலில் சிறந்து விளங்குவோருக்கு "கரிகாலன் விருது" வழங்கப்படும் என்று முன்னாள் முதல்வர் கருணாநிதி வாக்குறுதி அளித்திருந்தார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு அது நடக்காமல் போய் விட்டதாக கட்டுநர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர். கருணாநிதி அளித்த உறுதிமொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.

## இணைய நெறிமுறையை அடிப்படையாகக் கொண்ட தானியங்கி செய்தி மாறுதல் அமைப்பு (IP-AMSS) மென்பொருள் சென்னை விமான நிலையத்தில் அமைப்பு

- இந்திய விமான நிலைய ஆணையம் (AAI), இணைய நெறிமுறை (IP) அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்மூலம், விமானங்கள் தரை இறங்குவதில் ஏற்படும் தாமதங்கள், வானிலை, விமானங்களின் செயல்பாடுகள், ராக்கெட் ஏவுதல், வான்வெளி மற்றும் விமானநிலைய இடையூறுகள் உள்ளிட்டவைகளை, விமான நிறுவனங்கள் மற்றும் விமானிகளுக்கு விரைவாக எச்சரிக்கை மேற்கொள்ள வழிவகை ஏற்பட்டு உள்ளது.
- இணைய நெறிமுறையை அடிப்படையாகக் கொண்ட தானியங்கி செய்தி மாறுதல் அமைப்பு (IP-AMSS) மென்பொருள், இந்திய விமான நிலைய ஆணைய பொறியாளர்களால் உருவாக்கப்பட்டு உள்ளது. இது தகவல்களை தன்னிச்சையாகவும், தரைத்தொடர்பு நெட்வொர்க்கின் மூலம் வேகமாக பகிர உதவுகிறது. இதன்மூலம், விமான நிறுவனங்கள், போக்குவரத்து அதிகமாக இருக்கும்போது, எவ்வித தடை தாமதங்கள் அதிக அளவில் இல்லாமல் பார்த்துக்கொள்வதோடு, தங்களது விமானிகளின் உதவியுடன் விமான சேவைகளை திறம்பட நிர்வகிக்க உதவுகிறது

## 60-க்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்திய IIT மாணவர்கள்

- ஓட்டுநர் இல்லாமல் இயங்கும் பேட்டரி வாகனம் உள்ளிட்ட 60-க்கும் மேற்பட்ட நவீன கண்டுபிடிப்புகளை சென்னை IIT மாணவர்கள் கண்டுபிடித்து காட்சிப்படுத்தியுள்ளனர். சென்னை IIT வளாகத்தில் நடைபெற்று வரும் CFI ஓபன் ஹவுஸ் எனும் புதிய தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தும் நிகழ்ச்சியில் இந்த கண்டுபிடிப்புகள் இடம் பெற்றுள்ளன.
- இதுகுறித்து சென்னை IIT இயக்குநர் காமகோடி கூறியதாவது: IIT மாணவர்களுடைய தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் விதமாக இந்த நிகழ்ச்சியை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.
- கண்டுபிடிப்புகளைப் பொருத்தவரை, ஓட்டுநர் இல்லாமல் இயங்கக்கூடிய வாகனத்தில், பயணிக்கும் போது எதிரில் ஏதேனும் மனிதர்கள்

அல்லது தடைகள் வந்தால் உடனடியாக நின்று பாதையை மாற்றி செல்லக்கூடிய வகையில் சென்ஸார் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. முதல்முறையாக பெட்ரோல், டீசல் இல்லாமல் பேட்டரி மூலமாக இயங்கக்கூடிய பார்முலா கார், மழைநீர் அதிகம் தேங்கும் இடங்களை முன்கூட்டியே கண்டறிந்து எச்சரிக்கும் நவீன கண்டுபிடிப்பு உள்ளிட்ட படைப்புகள் இடம்பெற்றிருந்தன.

## வருகிற ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்படும்

- வருகிற ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட இருக்கிறது என்று வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம்.
- வருகிற ஆண்டு சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்படவுள்ளது. நெல் சாகுபடிக்கு இணையாக சிறுதானிய உற்பத்தியை முனைப்பாகக் கொண்டு செல்லும் வகையில் இத்திட்டம் அறிவிக்கப்பட இருக்கிறது.
- தமிழகத்தில் கடந்தாண்டைவிட, நிகழாண்டு நெல் உற்பத்தி அதிகம். கடந்தாண்டு 48 லட்சம் ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு 54 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது. இது மிகப் பெரிய சவாலாக உள்ளது.

## உலக தூக்க நாளை முன்னிட்டு சென்னையில் நடை பேரணி

- தூக்கத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைப்பயணம் டாக்டர் வி.எஸ்.நடராஜன், Geriatric அறக்கட்டளை, இந்திய மருத்துவ சங்கம் மற்றும் MGM மருத்துவமனை இணைந்து இப்பேரணி நடத்தப்பட்டது.
- மார்ச் 18 ஆம் தேதி வரும் உலக தூக்க தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்ட அறிஞர்களுக்கு விருதுகள்

- தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்ட அறிஞர்கள், அமைப்புகளுக்கு தமிழக அரசின் பல்வேறு விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் வழங்கவுள்ளார்.
- இது குறித்து தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு:
- தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.
- விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றி தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழறிஞர்கள், தமிழ் அமைப்பு ஆகியோருக்கான விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்.
- இதில் திருவள்ளுவர், காமராசர், அம்பேத்கர், பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ.விசுவநாதம், கம்பர், ஜி.யு.போப், அண்ணா, பெரியார், உமறுப் புலவர், இளங்கோவடிகள், தேவநேயப் பாவாணர், சிங்காரவேலர், மறைமலையடிகள், வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர் ஆகியோர் பெயரிலான விருதுகள், முதல்வர் கணினித் தமிழ் விருது, சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது, தமிழ்த்தாய் விருது ஆகியவை உள்பட மொத்தம் 21 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் தமிழகம் முதலிடம்

- நாட்டிலேயே அதிக அளவில் நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. சுமார் 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல் சக்தி துறை இணையமைச்சர் விஸ்வேஷ்வர் துடு, மாநிலங்களவையில் திங்கள்கிழமை தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் 18,691 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
- நாட்டிலுள்ள நீர்நிலைகள் குறித்த கணக்கெடுப்புகள் இதுவரை 5 முறை நடத்தப்பட்டுள்ளன. இதில், 6–ஆவது கணக்கெடுப்பு கடந்த 2017–18–இல் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. இந்தக் கணக்கெடுப்பு முந்தைய 5–ஆவது கணக்கெடுப்பைப் போன்று இல்லாமல், ஊரகப் பகுதிகள், நகர்ப்புற பகுதிகளின் நீர் நிலைகள் குறித்த கணக்கெடுப்புகளும் இணைத்து மேற்கொள்ளப்பட்டது. மேலும், முதல் முறையாக நாட்டில், முதலாவது கணக்கெடுப்பில் எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலும் இந்த 6 –ஆவது கணக்கெடுப்புகள் மாநிலங்கள் வாரியாக மேற்கொள்ளப்பட்டது.

- இதில் 22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 9.45 லட்சம் நீர்நிலைகள் அடையாளம் காணப்பட்டன. ஒட்டு மொத்தமாக இந்த மாநிலங்களில் 18,691 நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.
- நாட்டிலேயே அதிக அளவில் நீர்நிலை உள்ள மாநிலங்களாக ஆந்திரம் (1,90,777), அஸ்ஸாம் (1,72,492) ஜார்க்கண்ட் (1,07,598), தமிழ்நாடு (1,06,957), ஹிமாசல பிரதேசம் (88,017), தெலங்கானா (64,056) ஆகியவை உள்ளன. இதில், 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.
- இதற்கு அடுத்ததாக ஆந்திரம் (3,920) தெலங்கானா (3,032), பஞ்சாப் (1578) போன்ற மாநிலங்களின் நீர்நிலைகள் அதிக அளவில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன.
- பிரதான் மந்திரி கிரிஷி நீர்நிலைகள் புதுப்பித்தல் மறுசீரமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் மாநில அரசுகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கு மதிப்பிடப்பட்டுள்ள ரூ.1,909.67 கோடியில் கடந்த ஜனவரி வரை ரூ.467 கோடியை மாநிலங்களுக்கு மத்திய அரசு விடுவித்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருக்குறள், ஒரு புளியமரத்தின் கதை

- உலகப் பொதுமறை என போற்றப்படும் திருக்குறள் நூலானது, பேராசிரியர் ஜெயப்பிரகாஷ் மூலமாக தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதேபோன்று, புகழ்பெற்ற எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை நூலானது, கௌரி கிருபானந்தனால் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- திசைதோறும் திராவிடம் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே நூல்கள் வெளியிடப்பட்ட நிலையில், இப்போது ஏழு மற்றும் எட்டாவது நூல்கள் வெளியாகியுள்ளன. இந்த நூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் ஹைதராபாத் புக் டிரஸ்ட் நிறுவனத்துடன் கூட்டு வெளியீடுகளாக வெளியிடப்பட்டுள்ளன.
- இந்த நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்.
- பல்வேறு மாவட்டங்களில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் உள்ள மாணவர்களுக்கு பிளஸ் 2 வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் கல்வி கரோனா நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டது. அந்தக் குழந்தைகளுக்கு மெய்நிகர் வகுப்பறை வசதி இல்லாத காரணத்தால் அரசால் கல்வித் தொலைக்காட்சி வழியாக நடத்தப்படும் நேரடி வகுப்புகளால் பயனடைவதில் சிரமம் இருந்தது.

## காக்னிசன்ட் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- அரசுப் பள்ளிகளில் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு, தொழில்நுட்பக் கல்வியை எளிமையாக்குவதற்கான ஆதாரங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறைக்கும், காக்னிசன்ட் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

## தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்ட அறிஞர்களுக்கு விருதுகள்

- தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்ட அறிஞர்கள், அமைப்புகளுக்கு தமிழக அரசின் பல்வேறு விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் வழங்கவுள்ளார்.
- இது குறித்து தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பு:
- தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.
- விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்புரையாற்றி தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழறிஞர்கள், தமிழ் அமைப்பு ஆகியோருக்கான விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கவுள்ளார்.
- இதில் திருவள்ளுவர், காமராசர், அம்பேத்கர், பாரதியார், பாரதிதாசன், கி.ஆ.பெ.விசுவநாதம், கம்பர், ஜி.யு.போப், அண்ணா, பெரியார், உமறுப் புலவர், இளங்கோவடிகள், தேவநேயப் பாவாணர், சிங்காரவேலர், மறைமலையடிகள், வள்ளலார், அயோத்திதாசப் பண்டிதர் ஆகியோர் பெயரிலான விருதுகள், முதல்வர் கணினித் தமிழ் விருது, சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது, தமிழ்த்தாய் விருது ஆகியவை உள்பட மொத்தம் 21 விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## நீர்நிலைகள் ஆக்கிரமிப்பில் தமிழகம் முதலிடம்

- நாட்டிலேயே அதிக அளவில் நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. சுமார் 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜல் சக்தி துறை இணையமைச்சர் விஸ்வேஷ்வர் துடு, மாநிலங்களவையில் திங்கள்கிழமை தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் 18,691 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
- நாட்டிலுள்ள நீர்நிலைகள் குறித்த கணக்கெடுப்புகள் இதுவரை 5 முறை நடத்தப்பட்டுள்ளன. இதில், 6–ஆவது கணக்கெடுப்பு கடந்த 2017–18–இல் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. இந்தக் கணக்கெடுப்பு முந்தைய 5–ஆவது கணக்கெடுப்பைப் போன்று இல்லாமல், ஊரகப் பகுதிகள், நகர்ப்புற பகுதிகளின் நீர் நிலைகள் குறித்த கணக்கெடுப்புகளும் இணைத்து மேற்கொள்ளப்பட்டது. மேலும், முதல் முறையாக நாட்டில், முதலாவது கணக்கெடுப்பில் எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலும் இந்த 6 –ஆவது கணக்கெடுப்புகள் மாநிலங்கள் வாரியாக மேற்கொள்ளப்பட்டது.
- இதில் 22 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 9.45 லட்சம் நீர்நிலைகள் அடையாளம் காணப்பட்டன. ஒட்டு மொத்தமாக இந்த மாநிலங்களில் 18,691 நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.
- நாட்டிலேயே அதிக அளவில் நீர்நிலை உள்ள மாநிலங்களாக ஆந்திரம் (1,90,777), அஸ்ஸாம் (1,72,492) ஜார்க்கண்ட் (1,07,598), தமிழ்நாடு (1,06,957), ஹிமாசல பிரதேசம் (88,017), தெலங்கானா (64,056) ஆகியவை உள்ளன. இதில், 8,366 நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டு தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.
- இதற்கு அடுத்ததாக ஆந்திரம் (3,920) தெலங்கானா (3,032), பஞ்சாப் (1578) போன்ற மாநிலங்களின் நீர்நிலைகள் அதிக அளவில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன.
- பிரதான் மந்திரி கிரிஷி நீர்நிலைகள் புதுப்பித்தல் மறுசீரமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் மாநில அரசுகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கு மதிப்பிடப்பட்டுள்ள ரூ.1,909.67 கோடியில் கடந்த ஜனவரி வரை ரூ.467 கோடியை மாநிலங்களுக்கு மத்திய அரசு விடுவித்து திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருக்குறள், ஒரு புளியமரத்தின் கதை

- உலகப் பொதுமறை என போற்றப்படும் திருக்குறள் நூலானது, பேராசிரியர் ஜெயப்பிரகாஷ் மூலமாக தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதேபோன்று, புகழ்பெற்ற எழுத்தாளர் சுந்தரராமசாமி எழுதிய 'ஒரு புளியமரத்தின் கதை நூலானது, கௌரி கிருபானந்தனால் தெலுங்கில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டு நூல்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- திசைதோறும் திராவிடம் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே நூல்கள் வெளியிடப்பட்ட நிலையில், இப்போது ஏழு மற்றும் எட்டாவது நூல்கள் வெளியாகியுள்ளன. இந்த நூல்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் ஹைதராபாத் புக் டிரஸ்ட் நிறுவனத்துடன் கூட்டு வெளியீடுகளாக வெளியிடப்பட்டுள்ளன.
- இந்த நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்.
- பல்வேறு மாவட்டங்களில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் உள்ள மாணவர்களுக்கு பிளஸ் 2 வரை இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. மறுவாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குழந்தைகளின் கல்வி கரோனா நோய்த் தொற்று காரணமாக பாதிக்கப்பட்டது. அந்தக் குழந்தைகளுக்கு மெய்நிகர் வகுப்பறை வசதி இல்லாத காரணத்தால் அரசால் கல்வித் தொலைக்காட்சி வழியாக நடத்தப்படும் நேரடி வகுப்புகளால் பயனடைவதில் சிரமம் இருந்தது.

## காக்னிசன்ட் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- அரசுப் பள்ளிகளில் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு, தொழில்நுட்பக் கல்வியை எளிமையாக்குவதற்கான ஆதாரங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறைக்கும், காக்னிசன்ட் நிறுவனத்துக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

## தமிழகத்தில் "புத்தகப் பூங்கா"

- மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும், தொண்டாற்றிப் பெருமை

சேர்த்த தமிழறிஞர்கள், தமிழ் அமைப்பு, திங்களிதழ் என மொத்தம் 21 விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது

- அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மாபெரும் புத்தகப் பூங்கா அமைக்கலாம் என்றும், அதற்கான நிலத்தை அரசு வழங்கும் என்றும் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி ஒருமுறை கூறியிருந்தார். அதற்கு "புத்தகப் பூங்கா' என்றும் அவரே பெயர் சூட்டினார்.

| | |
|---|---|
| முதல்வர் கணினித் தமிழ் விருது (2020) | முனைவர் வ.தனலட்சுமி |
| திருவள்ளவர் விருது (2022) | மறைந்த மு.மீனாட்சி சுந்தரம், அவருக்கான விருதை வசந்தா பெற்றுக் கொண்டார். |
| 2021–ஆம் ஆண்டுக்கான விருதுகள் | |
| அண்ணா விருது | சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத் |
| அம்பேத்கர் விருது | ஓய்வு பெற்ற நீதிபதி சந்துரு |
| பெரியார் விருது | எழுத்தாளர் க. திருநாவுக்கரசு |
| காமராசர் விருது | காங்கிரஸ் மூத்த தலைவர் குமரி அனந்தன் |
| பாரதிதாசன் விருது | புலவர் செந்தலை கவுதமன் |
| பாரதியார் விருது | ஆவணப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார் |
| தேவநேயப்பாவாணர் விருது | முனைவர் கு.அரசேந்திரன், முன்னாள் துணைவேந்தர் |
| கி.ஆ.பெ.விசுவநாதம் விருது | முனைவர் ம.இராசேந்திரன் |
| கம்பர் விருது | பட்டிமன்ற பேச்சாளர் பாரதி பாஸ்கர் |
| சொல்லின் செல்வர் விருது | சூர்யா சேவியர் |
| ஜி.யு.போப் விருது | பத்திரிகையாளர் அ.சு. பன்னீர் செல்வன் |
| உமறுப்புலவர் விருது | மதுரை நா.மம்மது |
| இளங்கோவடிகள் விருது | சொற்பொழிவாளர் நெல்லை கண்ணன் |
| சிங்காரவேலர் விருது | கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம் |
| மறைமலையடிகள் விருது | சொற்பொழிவாளர் சுகி. சிவம் |
| வள்ளலார் விருது | முனைவர் இரா. சஞ்சீவிராயர் |
| அயோத்திதாசப் பண்டிதர் விருது | ஞான. அலாய்சியஸ் |
| சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது | உயிர்மை திங்களிதழ் |
| தமிழ்த் தாய் விருது | மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் |

## தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் ரூ. 7,500 கோடியில் இரு சரக்குப் பெட்டக முனையங்கள்

- தூத்துக்குடி வ.உ.சி துறைமுகத்தில் ரூ. 7,500 கோடி செலவில் இரு சரக்குப் பெட்டகமுனையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக துறைமுக ஆணையத் தலைவர் தா.கி. ராமச்சந்திரன் தெரிவித்தார்.
- இதுகுறித்து அவர் அளித்த பேட்டி: தொழில் வளர்ச்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், மத்திய அரசில் உள்ள 16 துறைகளை ஒருங்கிணைத்து பிரதமரின் 'கதிசக்தி' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

## உயர் சிறப்பு மேற்படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50% ஒதுக்கீடு

- தமிழகத்தில் சூப்பர் ஸ்பெஷாலிட்டி எனும் உயர் சிறப்பு மருத்துவ மேற்படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இடங்கள் ஒதுக்கீடு செய்வதற்கு தமிழக அரசுக்கு அனுமதி அளித்து உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

## 2,900 மெகாவாட் மின்சாரம் கொள்முதல்

- தமிழ்நாட்டில் 2,900 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

- நெய்வேலி பழுப்பு நிலக்கரி (என்எல்சி) நிறுவனமானது தலா 800 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மூன்று அலகுகளை ஒடிஸா மாநிலம் தலபிரா என்ற இடத்தில் அமைக்க உள்ளது. அதில், 1,500 மெகாவாட் மின்சாரம் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 2026–27–ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது. இதற்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு ரூ.3.06 ஆகும். முதல்வர் முன்னிலையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
- மின்சாரத்தை கொள்முதல் செய்ய சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கான மின்சார யூனிட் ஒன்றின் விலை ரூ.2.61 ஆகும்.
- 2022–2023–ஆம் நிதியாண்டின் இறுதியில் இருந்து மின்சாரம் கிடைத்திடும். இதேபோன்று, பவர் டிரேடிங் காரப்பரேஷன் நிறுவனத்துடன் 400 மெகாவாட் மின்சாரத்துக்கான கொள்முதல் செய்யப்பட்டது. இதனுடைய யூனிட் ஒன்றின் விலை ரூ.3.26 ஆகும். மின்சார கொள்முதலுக்கான நான்கு நடுத்தர கால ஒப்பந்தங்கள் முதல்வர் முன்னிலையில் கையொப்பமானது.

## மாநில கல்விக் கொள்கையை வடிவமைக்க விரைவில் வல்லுநர் குழு: அமைச்சர் க.பொன்முடி

- தமிழகத்தில் மாநிலக் கல்விக் கொள்கையை வடிவமைக்க விரைவில் வல்லுநர் குழு அமைக்கப்படும் என உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி கூறினார்.
- பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பாடத் திட்டத்தை மேம்படுத்துவது குறித்து ஆலோசனைக் கூட்டம் சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமைச்சர் க.பொன்முடி பேசியது: "கல்லூரிகளில் மத வெறியைத் தூண்டும் வகையில் விரும்பத்தக்க நிகழ்வுகள் நடைபெறுவதாக தகவல்கள் வருகின்றன. அது குறித்து விவாதிக்கவுள்ளோம். நமது மாநிலத்திற்கான கல்விக் கொள்கை தயாரிப்பதற்கான வல்லுநர் குழு விரைவில் அமைக்கப்படும். அடுத்த கல்வியாண்டுக்கான பொறியியல் கலந்தாய்விற்கான ஆரம்பக் கட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. சென்னை பல்கலைக்கழகத்தின் கல்வித் தரம் குறைந்ததாக நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ள நிலையில், பல்கலைக்கழகத்தின் கீழ் இணைப்பு பெற்ற கல்லூரி முதல்வர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

## "ஒரே பதவி – ஒரே ஓய்வூதியம்"

- அரசின் கொள்கை முடிவுகளுக்கு உள்பட்டு, இந்த ஓய்வூதியைக் கொள்கையை மத்திய அரசு வகுத்துள்ளது. அதில், அரசமைப்புச் சட்ட மீறலும் இல்லை. அரசமைப்புச் சட்டத்தை பலவீனப்படுத்தும் முயற்சியிலோ அல்லது தன்னிச்சையான போக்கிலோ மத்திய அரசு செயல்படவில்லை.
- இந்த ஓய்வூதியக்கொள்கை, கடந்த 2015–ஆம் ஆண்டு நவம்பர் 7–ஆம் தேதி அமல்படுத்தப்பட்டது. முன்னாள் ராணுவ வீரர்களுக்கான ஓய்வூதியம், 2014–ஆம் ஆண்டு ஜூலை 1–ஆம் தேதியில் இருந்து முன்தேதியிட்டு கணக்கிட்டு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது.
- ஒரே பதவி ஒரே ஓய்வூதியக் கொள்கையின்படி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று பகத்சிங் கோஷியாரி பரிந்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை, கடந்த 2015–ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்ட நிலையில் 5 ஆண்டுகள் நிறைவடைந்து 2019–இல் ஓய்வூதியம் மாற்றி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## தமிழ்நாடு அரசு தரவுக் கொள்கை 2022–ஐ உருவாக்கியுள்ளது

- மாநில அளவிலான தரவை கண்காணிக்க தலைமை செயலாளர் தலைமையிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு இ.கவர்னன்ஸ் நிறுவனத்தின் தலைவராக கொண்ட குழு இதிட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கான வழிகாட்டுதலை வழங்கும்.
- TNeGA–யின் தலைமை செயல் அதிகாரி, மாநில தலைமை தரவு அதிகாரியாக செயல்படுவார்.

#### தரவுக் கொள்கை

- இது கொள்கை உருவாக்கத்தை ஆதரிக்கும், திட்டங்களை செயல்படுத்துவதை மேம்படுத்தும், மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை ஊக்குவிக்கும் மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- தமிழ்நாடு அரசின் பொது நிதியை நேரடியாகவோ அல்லது பல்வேறு துறைகள்/அமைப்புகள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட

ஏஜென்சிகள் மூலமாக உருவாக்கப்பட்ட, சேகரிக்கப்பட்ட மற்றும் காப்பகப்படுத்தப்பட்ட அனைத்து தரவு மற்றும் தகவல்களுக்கும் இந்தக் கொள்கை பொருந்தும்.

- தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, கடலூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மொத்த எண்ணிக்கையில் அதன் பங்கு 81%

## நெல் கொள்முதல் உயர்வு

- கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் நெல் கொள்முதல் உயர்வு.
- மார்ச் 14 வரை –25.07 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. (காரிப் காலத்தில், அக்டோபர் 1, 2021 முதல்). கடந்த வருடம் – 23.86 லட்சம் டன்.

## சிறு–குறு நிறுவனங்களுக்கு கடன் பெற தனி இணையதளம் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்

- சிறு, குறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனி இணையதளம் அமைக்கப்படுகிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் உற்பத்தி அலகுகளுக்காக தமிழ்நாடு கடன் உத்தரவாதத் திட்டம் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ரூ.40 லட்சத்துக்கு குறைவான வங்கி கடன்களுக்கு 90 சதவீத உத்தரவாதமும், அதற்கு மேல் ரூ.2 கோடி வரையிலான கடன்களுக்கு 80 சதவீத உத்தரவாதமும் மத்திய அரசின் கடன் உத்தரவாத நிதியத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு வழங்கும். இந்த கடன் உத்தரவாத திட்டத்துடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு விரிவான மதிப்பீட்டு திட்டமும் ஒருங்கிணைந்து வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்கு தமிழ்நாடு அரசு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
- ஆறு மாதங்களில் தொடங்கப்படும் வகையில் முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்ட இணையதளம் தயாரிக்கப்பட உள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை மற்றும் கடன் உத்தரவாத நிதியம் ஆகியவற்றுக்கு இடையே செய்து கொள்ளப்பட்டது.
- புதிய வசதிகள் தொடக்கம்: புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வினைத் தொடர்ந்து, புதிய வசதிகளை முதல்வர் துவக்கி வைத்தார். தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் செங்கிப்பட்டி கிராமத்தில் தென்னை நார் உற்பத்திக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இதை காணொலிக் காட்சி வழியாக முதல்வர் தொடக்கி வைத்தார். இதன்மூலம், நேரடியாக 100 பேருக்கும், மறைமுகமாக 200 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## இரண்டாம் நூற்றாண்டிலேயே சிறப்பான நீதிபரிபாலனம் இருந்துள்ளது

- நிகழ்ச்சியில் "சிலப்பதிகாரத்தில் சட்டமும், நீதியும்" என்ற தலைப்பில் உச்சநீதிமன்ற நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் பேசியதாவது:
- அநீதியை எதிர்த்த ஒரு பெண்ணின் (கண்ணகி) போராட்ட கதை சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் என்பது ஒரு வழக்கு சம்பந்தப்பட்டது என்று எல்லோரும் நினைக்கின்றனர்.
- ஒன்று கோவலன் மீது சுமத்தப்படும் திருட்டு வழக்கு; மற்றொன்று பாண்டிய மன்னன் மீது கண்ணகி தொடரும் வழக்கு; மூன்றாவது வழக்கு மதுரையை அழிக்க வேண்டாம், முற்பிறவி ஊழ் வினையால் இது நடந்துள்ளது என்று மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் முறையிடும் வழக்கு ஆகும்.
- பண்டைய இலக்கியங்களில் சிலப்பதிகாரத்திற்கு என்று தனிசிறப்பு உள்ளது. கி.பி.2–ஆம் நூற்றாண்டில் ஒரு சட்ட நூலாக சிலப்பதிகாரம் இயற்றப்பட்டுள்ளது.
- சட்ட நூலில் ஒவ்வொரு சட்டப் பிரிவுக்கும் நோக்கங்களும், வரையறைகளும் உண்டு. அதுபோல சிலப்பதிகாரத்திலும் உள்ளது.
- நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தமிழ்நாட்டில் சிறப்பான, அற்புதமான

நீதிபரிபாலனம் இருந்துள்ளது என்பதைக் காட்டும் நூலாக சிலப்பதிகாரம் உள்ளது. உரிமையியல் சட்டத்தை விட, குற்றவியல் சட்டங்கள்தான் அதிகமாகப் பண்டைய இலக்கியங்களில் பேசப்படுகின்றன.


## அரசுப் பள்ளி மாணவிகளின் உயர் கல்விக்கு மாதம் ரூ.1,000

- தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவிகளின் உயர் கல்விக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும். ஆண்டுதோறும் ஆறு லட்சம் மாணவிகளுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படும் என்று நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- புதிய வரிகள் ஏதும் விதிக்கப்படவில்லை. அதே வேளையில், திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.58 ஆயிரம் கோடியாக மதிப்பிடப்பட்டிருந்த வருவாய் பற்றாக்குறை ரூ.52 ஆயிரம் கோடியாகக் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ராமாமிர்தம் நினைவு நிதி: மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அரசுப் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை பயிலும் மாணவிகள் கல்லூரியில் சேர்ந்தவுடன் மாதந்தோறும் தலா ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.
- இந்த மாணவிகள் ஏற்கெனவே பிற கல்வி உதவித் தொகைகளை பெற்று வந்தாவும் இந்தத் திட்டத்தில் கூடுதலாக உதவியைப் பெறலாம் எனவும், இந்தத் திட்ட்தின் மூலம் சுமார் ஆறு லட்சம் மாணவிகள் பயன் பெற வாய்ப்புள்ளதாகவும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 5 ஆண்டுகளில் ரூ.7 ஆயிரம் கோடியில் 18 ஆயிரம் பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை சீர்செய்திட பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். ஆறு மாவட்டங்களில் புதிதாக மாவட்ட மைய நூலகங்கள், ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அறிவுசார் நகரம், ஆயிரம் கோடி ரூபாயில் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கான திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.
- வருவாய் பற்றாக்குறை: வளர்ச்சிக்கான இலக்குகளை மையப்படுத்தி செயல்படுவது, சமூக பாதுகாப்பு திட்ங்கள் போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கடந்த 2014–ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து உயர்ந்து வந்த வருவாய் பற்றகாகுறை குறைக்கப்பட்டுள்ளது. திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய் பற்றாக்குறையானது ரூ.58,692.68 கோடியாக மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், இப்போது ரூ.52,781.17 கோடியாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் வரும் ஆண்டுகளில் வருவாய் பற்றாக்குறை அளவு மேலும் குறையும் என நிதிநிலை அறிக்கையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மகளிர் உரிமைத் தொகை: நிதி நிலைமை சீரடைந்தவுடன் தேர்தல் வாக்குறுதிப்படி பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் உறுதியளித்தார்.

### ஒட்டுமொத்த வரவு – செலவு ஒரு பார்வை

- வருவாய் வரவுகள் – ரூ.2,31,407 கோடி
- செலவுகள் – ரூ.2,84,188 கோடி
- வருவாய் பற்றாக்குறை – ரூ.52,781 கோடி
- வரும் நிதியாண்டில் கடன் பெற இலக்கு – ரூ.90,000 கோடி
- நிகழாண்டில் பெற்ற கடன் – ரூ.82,000 கோடி
- நிகழாண்டில் ஒட்டுமொத்த கடன் அளவு – ரூ.5.63 லட்சம் கோடி
- எதிர்வரும் நிதியாண்டில் ஒட்டுமொத்த கடன் அளவு – ரூ.6.53 லட்சம் கோடி
- நிகழாண்டில் டாஸ்மாக வருவாய் – ரூ. 36,000 கோடி

### ஒரு ரூபாயில் வரவு–செலவு விவரங்கள




### முக்கிய அம்சங்கள்

- ரூ.7 ஆயிரம் கோடியில் 18 ஆயிரம் வகுப்பறைகளை எழில்மிக்கதாக்க 'பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்'.
- கல்லூரிகளுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவிகள் 6 லட்சம் பேருக்கு மாதம் தலா ஆயிரம் ரூபாய்.
- புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆறு மாவட்டங்களில் புதிய நூலகங்கள்.
- காலணி மற்றும் தோல் தொழில்களுக்கென தனித்த கொள்கை.
- ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை ஊக்குவிக்க அறிவுசார் நகரம்.
- காஞ்சிபுரம் புற்றுநோய் மருத்துவமனை உயர்தர மையமாக தரம் உயர்த்தப்படும்.
- ரூ.1,000 கோடியில், கல்லூரி கட்டமைப்புகள் தரம் உயர்த்தப்படும்.
- ஏற்றுமதி கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.100 கோடியில் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிதி.
- சென்னை கீழ்ப்பாக்கத்தில் உயர்நிலை மன நலம் மற்றும் நரம்பியல் நிறுவனம்.
- வளர்ந்து வரும் தொழில்களுக்கான தொடக்க நிதியாக ரூ.50 கோடி.
- சென்னை நந்தம்பாக்கத்தில் மாநில புத்தொழில் நிறுவன மையம்
- விளிம்பு நிலையில் உள்ள பழங்குடியினருக்கு ஆயிரம் வீடுகள்.
- சென்னை பெருநகரப் பகுதியில் ரூ.500 கோடிக்கான வெள்ள தணிப்புப் பணிகள்.
- அரசு நிதியுதவி பெறாத பள்ளி மாணவர்களுக்கும் இலவச புத்தகங்கள், இதர உபகரணங்கள்.
- ரூ.20 கோடியில் புதிய அருங்காட்சியகங்கள், அகழ்வைப்பகங்கள்.
- கைவிடப்பட்ட பிராணிகளை பராமரிக்க சேவை நிறுவனங்களுக்கு ரூ.20 கோடி.
- வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் என்ற பெயரில் புதிய திட்டம் .

- ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் மின்னணு கொள்முதல் முறை கட்டாயம்.
- ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கோயில்களை புனரமைக்க ரூ.100 கோடி.
- சமண மற்றும் பௌத்த புகழ்பெற்ற தலங்கள் அமைந்துள்ள இடங்கள் மேம்படுத்தப்படும்.
- ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்ல விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க ஒலிம்பிக் தங்கப் பதக்க தேடல் திட்டம்.
- ஆதிதிராவிடர்கள், பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு ஆதரவு தரும் வகையில் ரூ.30 கோடியில் திட்டம்.

## வளர்ப்பு பிராணிகளுக்கு வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்

- தமிழகத்தில் ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகளை பராமரிப்பதற்கு வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள் என்ற புதிய திட்டம் தொடங்கப்படும்.
- வள்ளலாரின் 200ஆவது பிறந்த ஆண்டை முன்னிட்டு, தமிழகத்தில் ஆதரவில்லாத, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசு சாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவியளிப்பதற்கு "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டம் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும்.

## அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் காட்சி: கல்விக்கு ரூ.36,895 கோடி

- **4 இலக்கிய திருவிழாக்கள்:** இத்துடன் இலக்கியச் செழுமை மிக்க தமிழ்மொழியின் இலக்கிய மரபுகளைக் கொண்டாடும் வகையில், ஆண்டுக்கு நான்கு இலக்கியத் திருவிழாக்கள் நடத்தப்படும். புத்தகக்காட்சிகள் மற்றும் இலக்கியத் திருவிழாக்கள் வரும் ஆண்டில் ரூ.5.6 கோடி செலவில் நடத்தப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கையில் பள்ளிக்கல்வித் துறைக்கு மொத்தம் 36,895.89கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## குறு, சிறு, நடுத்தர தொழில் துறைக்கு ரூ.911 கோடி நிதி

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு ரூ.911.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- **இதன் விவரம்:** தமிழகம் முழுவதும் குறுநிறுவனங்களைக் கொண்ட பல்வேறு குழுமங்கள் (micro clusters) உள்ளன. இத்தகைய குறு நிறுவனங்களுக்கு உதவும் வகையில், குறு நிறுவனக் குழும மேம்பாட்டுத்திட்டம் தொடங்கப்படும்.

## 21 மொழிகளில் பெரியார் சிந்தனை தொகுப்புகள்

- பெரியார் சிந்தனை தொகுப்புகள் 21 இந்திய மற்றும் உலக மொழிகளில் வெளியிடப்படும்.
- பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய தொகுப்பு, 21 இந்திய, உலக மொழிகளில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்புகளாகவும் வெளியிடப்படும். இப்பணிகள் ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.
- **அகரமுதலி உருவாக்கும் சிறப்புத் திட்டம்:** தமிழ்மொழியின் தொன்மையையும் செம்மையையும் நிலைநாட்டிட, பிற உலக மொழிகளுடன் தமிழின் மொழியியல் உறவு குறித்து அறிவியல்பூர்வமான ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

## பிரதமரின் கிராம சாலைத் திட்டத்தில் 280 சாலைகள், 54 பாலங்கள்

- பிரதமரின் கிராம சாலைத் திட்டத்தில் 280 சாலைகள் மற்றும் 54 பாலங்கள் அமைக்கப்படும் என நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- பிரதமரின் கிராம சாலைத்திட்டம் 3–இன் கீழ், 1,280 கி.மீ. நீளமுள்ள 280 சாலைகளை ரூ.791 கோடி மதிப்பீட்டிலும், 54 பாலங்களை ரூ.221 கோடி மதிப்பீட்டிலும் அமைப்பதற்கான பணிகள் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

## முதியோர் ஓய்வூதிய திட்டத்துக்கு ரூ.4,816 கோடி

- முதியோர் ஓய்வூதியத் திட்டத்துக்கு ரூ.4,816 கோடி தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ளோரின் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும்.

## 5 மாவட்டங்களில் புதிய தொழில் பூங்காக்கள்

- தமிழகம் முழுவதும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், கோயம்புத்தூர், பெரம்பலூர், மதுரை, வேலூர், திருவள்ளூர் ஆகிய

5 மாவட்டங்களில் புதிய தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும். இதன்மூலமாக, ரூ.50,000 கோடி முதலீடு ஈர்க்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

- வரும் 2030 –ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர் என்ற ஏற்றுமதி இலக்கை தமிழகம் அடைய, தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக்கொள்கை 2021–ஆம் ஆண்டு செப்டம்பரில் வெளியிடப்பட்டது.

## மாற்றியமைக்கப்பட்ட மூவலூர் ராமாமிர்தம் உதவித் திட்டம்

- திருமண உதவித் திட்டம்: மூவலூர் ராமாமிர்தம் திருமண உதவித் திட்டத்தில் பழைய நடைமுறைப்படி பயனாளிகளை சரியாக முறைப்படி தேர்வு செய்ய முடியவில்லை. இப்போதைய புதிய திட்டத்தில் நேரடியாக பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு நிதிகளை அளிக்கலாம். இதேபோன்று மீதமுள்ள 4 திருமண உதவித் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழகத்தில் 46 சதவீதம் பேர்தான் கல்லூரிகளில் படிக்கின்றனர். 54 சதவீதம் பேர் கல்லூரிகளில் சேர்வதில்லை. அவர்களும் கல்லூரியில் சேருவதற்கு இந்தத் திட்டம் வழிவகுக்கும்.
- பழைய திட்டப்படி 1 லட்சம் பேருக்கு மட்டுமே நிதியுதவிகள் கொடுக்கப்பட்டன. இப்போது ஆறு லட்சம் பேருக்கு அளிக்கப்படும். அரசுப் பள்ளிகளில் இருந்து கல்லூரி செல்லும் அனைத்து மாணவிகளுக்கும் இந்தத் திட்டம் பொருந்தும்.
- நிகழாண்டிலேயே இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும். இரண்டாவது ஆண்டு கல்லூரிப் படிப்பு படிப்போருக்கும் திட்டம் அமல்படுத்தப்படும். மூவலூர் ராமாமிர்தம் திட்டம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் ஏராளமானோர் பயன்பெறுவர்.

## சென்னை அருகே ரூ.300 கோடியில் தாவரவியல் பூங்கா

- சென்னை அருகே ரூ.300 கோடியில் தாவரவியல் பூங்கா அமைக்கப்படுகிறது.
- லண்டன் க்யூ பூங்கா (Kew Gardens) அமைப்புடன் இணைந்து சென்னைக்கு அருகே தாவரவியல் பூங்கா ரூ.300 கோடியில் அமைக்கப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை இவ்வாண்டு தயாரிக்கப்படும். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளவும் இடர் தணிக்கும் திட்டங்கள் மற்றும் பசுமையாக்கும் திட்டங்களுக்கு போதிய நிதியினை அளித்திடவும், 'தமிழ்நாடு பசுமைக் காலநிலை மாற்ற நிதியத்தை அரசு உருவாக்கும். இந்த நிதியத்தின் மூலம், வளர்ச்சி நிதி நிறுவனங்கள், பன்னாட்டு காலநிலை மாற்ற நிதியங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களிலிருந்து நிதி திரட்டப்படும்.
- தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடுகளைப் பாதுகாத்தல், அவற்றின் வாழ்விடத்தை விரிவுபடுத்துதல், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் 'வரையாடு பாதுகாப்புத்திட்டத்தை அரசு செயல்படுத்தும்.

## இலவச பாடநூல், நோட்டுப் புத்தகங்கள்

- தனியார் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை இலவச பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படும்.
- தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணம், அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- அகழாய்வுக்கு ரூ.5 கோடி: மாநிலத் நிலத் தொல்லியல் துறை கடந்த ஆண்டு சிவகங்கை மாவட்டம் கீழடி, தூத்துக்குடி மாவட்டம் சிவகளை, அரியலூர் மாவட்டம் கங்கைகொண்டசோழபுரம், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளுடன் திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி, விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, தருமபுரி மாவட்டம் பெரும்பாலை ஆகிய மூன்று இடங்கள் உள்பட ஏழு இடங்களில் நடப்பாண்டில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- விழுப்புரம், ராமநாதபுரத்தில் அருங்காட்சியகம்: நடப்பாண்டில் விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.10 கோடியில் புதிய அரசு அருங்காட்சியகங்கள் அமைக்கப்படும். தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள பழங்குடியினர் அகழ்வைப்பகம், திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் உள்ள தொல் பழங்கால அகழ்வைப்பகம், தருமபுரியில் உள்ள நடுகற்கள், அகழ்வைப்பகம் ரூ.10 கோடியில் மேம்படுத்தப்படும்.

## ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல் திட்டத்துக்கு ரூ.25 கோடி

- தமிழ்நாடு ஒலிம்பிக் பதக்க தேடல் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.25 கோடி வழங்கப்படவுள்ளது.
- இது குறித்து நிதிநிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்குவதில் வெற்றி கண்ட, ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல் (Olympic Gold Quest) போலவே, தமிழகத்திலிருந்து உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களையும் ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களையும் உருவாக்க, தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப்பதக்கத் தேடல் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.25 கோடி வழங்கப்படும்.
- வடசென்னையில் விளையாட்டு வளாகம்: பல்வேறு விளையாட்டுகளுக்குப் புகழ்பெற்ற வடசென்னையில், இளைஞர்களின் திறனை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், சென்னை ராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் முதல் கட்டமாக ரூ.10 கோடி செலவில் இந்த வளாகம் அமைக்கப்படும்.

## விவசாயிகள் இலவச மின்சாரத்துக்கு ரூ.5,157 கோடி

- வரும் நிதியாண்டுக்கான (2022–23) வேளாண் நிதிநிலை அறிக்கை, சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இரண்டாவது ஆண்டாக வேளாண்மைத்துறை அமைச்சர் பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.
- 126 லட்சம் மெட்ரிக் டன்: அரசின் சிறப்பு நடவடிக்கை காரணமாக, மார்ச் 14–ஆம் தேதி வரையிலான காலத்தில் தமிழகத்தின் நெல் சாகுபடி பரப்பு 53.50 லட்சம் ஏக்கரை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 4.86 லட்சம் ஏக்கர் கூடுதலாகும்.
- மானாவாரி நிலங்களில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நிதியாண்டில் 126 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தியை தமிழ்நாடு எட்டும் என நிதிநிலை அறிக்கையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.
- காலநிலை மாற்றங்களைத் தாங்கி வளரக் கூடிய பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்க மாற்றுப்பயிர் சாகுபடி முறை ஊக்குவிக்கப்படும். அதிக நீர்த்தேவை கொண்ட பயிர்களுக்கு மாற்றாக சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள் சாகுபடியை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்ய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- இயற்கை வேளாண்மை மேம்பாடு: இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்க ரூ.4 கோடியும், எண்ணெய் வித்து பயிர்கள் விளையக்கூடிய மாவட்டங்களில் அவற்றை மேம்படுத்தவும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நெல்லுக்கு அளிக்கும் முக்கியத்துவம்போன்றுபயறுசாகுபடிக்கும்அளிக்க போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நெல் அறுவடைக்குப் பிறகு, பயறுவகைகள் சாகுபடியை ஊக்கப்படுத்த ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு தானிய உற்பத்தி இயக்கம், பயறு பெருக்கத் திட்டம், நீடித்த நிலையான பருத்தி இயக்கம், எண்ணெய் வித்துப் பயிர் உற்பத்தி பெருக்கம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- பட்டதாரி இளைஞர்கள்: வேளாண் படிப்பு படித்த இளைஞர்கள் தொழில் தொடங்க 200 பேருக்கு தலா ரூ.1 லட்சம் அளிக்கப்படும். இயற்கை வேளாண்மை, பட்டதாரி இளைஞர்களுக்கு தொழில் வேலைவாய்ப்பு போன்ற திட்டங்களுடன் நவீன தொழில்நுட்பங்களும் வேளாண் துறையில் புகுத்தப்படும்.
- இயற்கையில் நவீனம்: இயற்கை சார்ந்த வேளாண்மையில் நவீனம் புகுத்தப்படும். அதன்படி புவியிடக் குறியீடு (Geo Tagging) மூலம் விளைநிலங்கள் வகைப்படுத்தப்பட்டு மண்ணின் நிலைக்கு ஏற்றாற் போன்று சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும். பூச்சி, நோய் தாக்கங்கள் குறித்து குறுஞ்செய்தியாக தகவல்கள் அனுப்புவது, பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிப்பது, பயிர் வளர்ச்சி நிலை கண்டறிவது போன்ற பணிகளுக்கு முழுமையாக நவீன தொழில்நுட்பங்கள் பின்பற்றப்படும். தமிழ் மண் வளம் என்ற தனி இணையதளம் உருவாக்கப்படும். கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.195 சிறப்பு ஊக்கத்தொகை அளிக்கப்படும். பழப்பயிர்கள் மேம்பாட்டு இயக்கம், ஊடு பயிர் சாகுபடி ஊக்குவிப்பு, உயர் தொழில் முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி போன்ற திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கப்படும்.
- உழவர் சந்தைகளில் காய்கறி வரத்தை அதிகரிக்க சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். பூண்டு சாகுபடிக்கு முக்கியத்துவம்.
- உழவர் சந்தைகள்: 50 உழவர் சந்தைகளின் கட்டமைப்புகள் புதுப்பிக்கப்படும். 4 மாவட்டங்களில் புதிய உழவர் சந்தைகள் அமைக்கப்படும். மாவட்டத்துக்கு ஓர் உழவர் சந்தையில் மாலையில் சிறுதானியம், பயறு வகைகள் விற்பனை நடைபெறும். தேனி, திண்டிவனம், மணப்பாறை ஆகிய இடங்களில் ரூ.381 கோடியில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள்

அமைக்கப்படும். இலவச மின்சாரத் திட்டத்துக்கு வரும் நிதியாண்டில் மின்சார வாரியத்துக்காக ரூ.5,157 கோடி நிதி ஒதுக்கப்படும்.

## ரூ.8.58 கோடியில் தேனீ தொகுப்புகள் அமைக்கப்படும்

- தேன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 37 தேனீ தொகுப்புகள் (Cluster based) ரூ.8 கோடியே 58 லட்சம் ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.
- வேளாண் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில், துல்லிய பண்ணையத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த முறையில், இடுபொருள்கள், பணி ஆள்களின் செலவு குறைவதோடு, அதிக மகசூல் மற்றும் ஏற்றுமதித் தரம் வாய்ந்த விளைபொருட்கள் கிடைக்கிறது. இத்திட்டம் 8,300 ஏக்கர் பரப்பளவில், ரூ.5 கோடி மாநில நிதியில் நடைபெறும். விவசாயிகளுக்கு நடவுச்செடிகள், விதைகள், இடுபொருள்கள் வழங்கி, உயர் தொழில்நுட்பத்துடன் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும்.
- ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல்: ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், தென்னை, மா, கொய்யா, வாழை பயிரிட்டுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு ஊடுபயிர் தொகுப்பு வழங்கப்படும். இந்தத்திட்டம் 38 ஆயிரம் ஏக்கர் பரப்பில், ரூ.27 கோடியே 51 லட்சம் நிதியில் செயல்படுத்தப்படும்.
- உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி (Hi–tech Horticulture).

## பனையேறும் கருவி கண்டுபிடிப்பவர்களுக்கு விருது

- சிறந்த பனையேறும் கருவி கண்டுபிடிப்பவர்களுக்கு விருது வழங்கப்படும்.
- தமிழகத்தில் 5 கோடி பனைமரங்கள் உள்ளன. சுமார் 3 லட்சம் குடும்பங்கள் பனை இலைகள், நார் ஆகியவற்றைக் கொண்டு கூடை பின்னுதல், பாய், கயிறு திரித்தல் போன்ற தொழில்களைச் சார்ந்தும், 11 ஆயிரம் பனைத்தொழிலாளர்கள் நுங்கு அறுவடை, பதநீர் இறக்குதல் மூலம் பனை மரங்களை வாழ்வாதாரமாகவும் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அதனால், பனை சாகுபடியை ஊக்குவிப்பதற்காகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும், கடந்த ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் இவ்வரசினால் பனை மேம்பாட்டு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில், சட்டப்பேரவைத் தலைவர் சென்ற ஆண்டில், தனது சொந்த முயற்சியினால், ஒரு லட்சம் பனை விதைகளை இலவசமாக இத்திட்ட செயல்பாட்டிற்கு வழங்கினார்.

## மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி உருவாக்கப்படும்

- மிளகு, சாதிக்காய், கிராம்பு ஆகியவற்றுக்கான மரபணு வங்கி நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, குற்றாலம், ஏற்காடு, ஜவ்வாது மலைகளில் உள்ள அரசு தோட்டப்பண்ணைகளில் உருவாக்கப்படும்.
- விவசாயிகள், உழவர் ஆர்வலர் குழு, உழவர் உற்பத்தியாளர் குழு ஆகியோராலும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்படும் செடிகள், விதைகள், இடுபொருள்கள், வாசனை பொருள்களான ஏலக்காய், மிளகு, பட்டை, கிராம்பு போன்றவையும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான ஜாம், ஜெல்லி, ஊறுகாய்,
- உலர் பழங்கள், யூகலிப்டஸ் தைலம், போன்றவையும் இணையம் வாயிலாக விற்க ஏற்பாடு செய்யப்படும்.
- பொருள்களைத் தரம் பிரித்து, சிப்பம் கட்டி விநியோகம் செய்ய மூன்று சேமிப்பு கிடங்குகள் சென்னை, மதுரை, கோவையில் ரூ.1.50 கோடி நிதியில் ஏற்படுத்தப்படும். இணையவழி விநியோக நிறுவனங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்குப் பொருள்கள் விநியோகம் செய்யப்படும். இத்திட்டம் ரூ.2 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.
- மரபணு வங்கி: விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ற ரகங்களை உற்பத்தி செய்து வழங்கும் வகையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுவைகூட்டும் பயிர்களின் வகைகளும் ரகங்களும் சேகரிக்கப்பட்டு அரசு தோட்டக்கலை பண்ணைகளில் நடவு செய்து பராமரிக்கப்படும்.

## ரூ.960 கோடியில் நுண்ணீர் பாசன முறையை மேம்படுத்தும் திட்டம்

- நுண்ணீர்ப்பாசன முறையை மேம்படுத்தும் திட்டம் 2.50 லட்சம் ஏக்கர் பரப்பில் ரூ.960 கோடியில் செயல்படுத்தப்படும்.

- தமிழகத்தில் தொகுப்பு அணுகுமுறையில் சிறு, குறு விவசாயிகளுக்கு சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கி, சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து பாசன சாகுபடிப் பரப்பை அதிகரிக்க 2.50 லட்சம் ஏக்கர் பரப்பில், மத்திய, மாநில அரசுகளின் ரூ.960 கோடி நிதியில் நுண்ணீர்ப்பாசன முறையை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.
- தமிழ்நாடு அங்கக வேளாண்மை இயக்கம்: தோட்டக்கலைத்துறை மூலம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும், 50ஹெக்டேர் அளவிலான தொகுப்புகள் (Cluster based) மாவட்டத்திற்கு இரண்டு என்ற விகிதத்தில் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு அங்கக வேளாண்மை இயக்கம் செயல்படுத்தப்படும்.

## விவசாயிகளுக்கு மானியத்தில் பம்புசெட்டைக் கட்டுப்படுத்தும் கருவி

- கைப்பேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டைக் கட்டுப்படுத்தும் கருவிகள் விவசாயிகளுக்கு ரூ.5 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படும்.
- விவசாயிகள் இரவு நேரங்களில் வயல்களுக்கு நேரில் சென்று பம்பு செட்டுகளை இயக்கும் பொழுது ஏற்படும் – பாம்புக்கடி, காயமடைதல் போன்ற இடர்பாடுகளைத் தவிர்க்கும் பொருட்டும், விவசாயிகளின் வயலிலுள்ள கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள பம்பு செட்டுகளைத் தொலைவில் இருந்து கைப்பேசியின் மூலம் இயக்கிடும்.

## தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள்

- தேனி, திண்டிவனம், மணப்பாறையில் தரம் உயர்த்தப்பட்ட உணவுப் பூங்காக்கள் அமைக்கப்படும்.
- தேனி, திண்டிவனம் (விழுப்புரம்), மணப்பாறை (திருச்சி) ஆகிய வட்டங்களில் 451 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் நிறுவனத்தினால் உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.
- மாநில அரசு எடுத்த முயற்சியினால் தற்போது இந்த மூன்று உணவுப் பூங்காக்களும் தரம் உயர்த்தப்பட்ட பெரிய அளவிலான உணவுப்பூங்காக்கள் என மத்திய அரசின் அங்கீகாரம் பெற்றுள்ளன.

## 5 ஆயிரம் விவசாயிகளுக்கு மின்மோட்டார் வாங்க ரூ.10 ஆயிரம் மானியம்

- விவசாயிகள் 5 ஆயிரம் பேருக்கு புதிய மின்மோட்டார்கள் வாங்க ரூ.10 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.
- விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள், கருவிகளை மானியத்தில் பெற்று, நிகர வருவாயை அதிகரிக்க 6,357 தனிப்பட்ட விவசாயிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- இளைஞர்களை விவசாய தொழிலில் ஈர்த்திட, விவசாயிகள், தொழில் முனைவோர்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் கிராம, வட்டார அளவிலான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைக்கப்படும். இவற்றில் கரும்பு சாகுபடிக்கேற்ற உயர்தொழில்நுட்ப வேளாண் இயந்திரங்கள், ட்ரோன்கள் உள்ளடங்கிய வாடகை மையங்கள் ஏற்படுத்தப்படும். இது தவிர, இயந்திரங்கள் வாங்க இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் வேளாண் இயந்திரப் பணிகளுக்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.800 வீதம், அதிகபட்சமாக ஐந்து ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும்.
- இதன் மூலம் 62 ஆயிரம் ஏக்கரில் உள்ள சுமார் 37 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.10 கோடி மத்திய, மாநில அரசு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்துக்கு நடப்பாண்டில் ரூ.150 கோடி மத்திய, மாநில அரசினால் ஒதுக்கீடு செய்யப்படும்.
- சூரிய சக்தி பம்புசெட்டுகள்: முதல்வரின் சூரியசக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைக்கும் திட்டத்தில் நடப்பாண்டில் 10 குதிரைத்திறன் வரையிலான தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 3,000 பம்பு செட்டுகள் 70 சதவீத மானியத்தில் ரூ.65.34 கோடியில் மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் அமைக்கப்படும்.
- சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், இதர வேளாண் விளைபொருள்களைத் தரம் பிரித்து, மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்தி அதிக லாபம் பெறும் வகையில், 292 மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை விவசாயிகளுக்கு 40 சதவீத மானியத்தில் வழங்குவதற்கு ரூ.5 கோடி மத்திய, மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

- விவசாயிகளும், விவசாயக்குழுக்களும் அதிக லாபம் பெற்றிடும் வகையில் பசுமைக் குடில் போன்ற 145 சூரிய கூடார உலர்த்திகளை 40 சதவீத மானியத்தில் அமைக்கும் திட்டம் நடப்பாண்டில் ரூ. 3 கோடியில் மத்திய, மாநில அரசு செலவில் செயல்படுத்தப்படும்.
- **பராமரிப்பு மையங்கள்:** விவசாயிகள் தங்கள் வேளாண் இயந்திரங்கள், கருவிகள், சூரிய சக்தி பம்புசெட்டுகள் போன்றவற்றை கால விரயமின்றி அவர்களின் இருப்பிடத்திலேயே பழுதுநீக்கிப் பராமரிக்கும்.

## பாரம்பரிய காய்கறி, பழ ரகங்களை பாதுகாக்க சேகரிப்பு மையங்கள்

- பாரம்பரிய காய்கறிகள், பழங்களின் ரகங்களைப் பாதுகாக்க, சேகரிப்பு மையங்கள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் ஏற்படுத்தப்படும்.
- மருத்துவ குணம் நிறைந்த பூண்டு சாகுபடி, புதிதாக கல்வராயன்மலை, கொல்லிமலை போன்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். 1,250 ஏக்கர் பரப்பளவில், ஏக்கருக்கு ரூ.8,000 வீதம், ரூ.1 கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.
- பாரம்பரிய ரகங்களை மீட்டெடுத்தல்: பாரம்பரிய ரக பழம், காய்கறி, மூலிகைப் பயிர்களைப் பாதுகாக்க, சேகரிப்பு மையங்கள் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் ஏற்படுத்தப்படும்.
- காய்கறி விதைகள், விவசாயிகளுக்கும், வீட்டுத் தோட்டத்தில் பாரம்பரிய ரகங்களைப் பயிரிட விரும்பும் பொதுமக்களுக்கும், அரசு தோட்டக்கலைப்பண்ணைகளில் உற்பத்தி செய்து வழங்கப்படும். இந்தத் திட்டம், ஏக்கருக்கு ரூ.8,000 வீதம் 2,500 ஏக்கர் பரப்பில் ரூ.2 கோடி மத்திய, மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.
- தக்காளி சாகுபடியை ஊக்குவித்தல்: தக்காளி உற்பத்தி குறைவாக உள்ள மே, ஜூன், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் சாகுபடியை அதிகரிக்கும் விதமாக, தக்காளி விவசாயிகளுக்கு, ஊக்கத்தொகையாக அல்லது இடுபொருள்களாக, ஏக்கருக்கு ரூ.8,000 மானியத்தில், 5,000 ஏக்கரில் இத்திட்டம் ரூ.4 கோடி மத்திய, மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும்.

## நரிக்குறவர்–குருவிக்காரர் சமூகத்தினரை எஸ்.டி. பட்டியலில் சேர்க்க வேண்டும்

- நரிக்குறவர், குருவிக்காரர் சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாடு அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில் குருவிக்காரர் குழுவினருடன் இணைந்த நரிக்குறவர் சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க இந்திய தலைமைப் பதிவாளர் ஒப்புக்கொண்டுள்ளார். இதனை தங்களது கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.
- கடந்த 1956–இல் அமைக்கப்பட்ட லோகூர் எனும் வல்லுநர் குழுவும், 1967–இல் நாடாளுமன்ற கூட்டுக் குழுவும் அவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரை செய்தன.

## வேளாண் நிதிநிலை அறிக்கை: சிறப்பு அம்சங்கள்

- கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த ரூ.300 கோடி நிதி ஒதுக்கீடு.
- தேனி, திண்டிவனம், மணப்பாறை ஆகிய இடங்களில் ரூ.381 கோடியில் உணவுப் பூங்கா.
- 7.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும் வகையில் முதல்வரின் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டம்.
- இயற்கை வேளாண்மை, இடுபொருள்கள் விநியோகத்துக்கென மாநில வேளாண்மை மேம்பாட்டுத்திட்டம் அறிமுகம்.
- பயிர்க் காப்பீட்டுத் திட்டத்துக்கு ரூ.2,546 கோடி.
- சிறுதானியங்கள் உற்பத்தியை ஊக்கப்படுத்த 2 சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்.
- துவரைப் பயிருக்கென சிறப்பு மண்டலம்.
- சிறுதானியங்களின் சத்தினை பற்றி அறிந்திட திருவிழாக்கள்.
- வேளாண்மைத் திட்டங்கள் ரூ.8 கோடியில் எண்மமயம்.
- ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ.5 கோடி மானியம்.
- பூச்சி – நோய் மேலாண்மைக்கு ரூ.5 கோடி சிறப்பு நிதி.
- கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.195 சிறப்பு ஊக்கத் தொகை.
- தோட்டக்கலைப் பயிர்களில் இயற்கை விவசாயத்துக்கு ரூ.30 கோடி நிதி.
- உழவர் சந்தைகளுக்கு காய்கனி வரத்தை அதிகரிக்க சிறப்புத் திட்டம்.
- காய்கறிகளில் பாரம்பரிய ரகங்களை மீட்டெடுக்க ரூ.2 கோடி நிதி.

- பனை மேம்பாட்டுக்கு ரூ.2.65 கோடி நிதி.
- பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க ரூ.150 கோடி நிதி.
- 50 உழவர் சந்தைகளை சீரமைக்க ரூ.15 கோடி, ரூ.10 கோடியில் 10 புதிய சந்தைகள்.
- மூன்று மாவட்டங்களில் மொத்த காய்கறி விற்பனை வளாகங்கள்.
- விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்க ரூ.5,157.56 கோடி.
- வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கிராம வங்கிகள் மூலம் ரூ.1,83,425 கோடி வேளாண் கடன்.
- ட்ரோன் மூலம் விவசாய இடுபொருள் தெளிப்பு.

## பெண்களுக்கான உயர்கல்வித் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது

- தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் குறைபாடுகள் இருந்ததால் பெண்களுக்கான உயர்கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## நரசிங்கம்போட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடு

- புகழ்பெற்ற நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்துக்கு புவிசார் குறியீடுக்கான அங்கீகாரச்சான்று கிடைத்துள்ளதாக சென்னை உயர் நீதிமன்ற அரசு வழக்கறிஞரும், புவிசார் குறியீடு பொருட்களை பதிவு செய்யும் அறிவுசார் சொத்துரிமைக் கழக வழக்கறிஞருமான ப.சஞ்சய்காந்தி தெரிவித்துள்ளார்.
- தென்னிந்தியாவின் கலாச்சார தலைநகரமாகவும், சங்கீதங்களின் கோட்டையாகவும் திகழும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 17–ம் நூற்றாண்டு முதல் நாதஸ்வரம் என்ற இசைக்கருவி பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1955–ம் ஆண்டுக்கு முன்பு பிரதி மத்தியமம் ஸ்வரம்' கொண்டு தான் நாதஸ்வரத்தில் தாய் ராகங்கள் வாசிக்கப்பட்டன. பின்னர், 1955–ம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம் நரசிங்கம் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த ரங்கநாத ஆச்சாரி என்ற கைவினைக் கலைஞர், நாதஸ்வரத்தில் 'சுத்த மத்தியமம் ஸ்வரம்' என்பதைக் கண்டுபிடித்து, அதை நாதஸ்வர கருவியில் உருவாக்கினார். இந்த இசைக்கருவியை எளிதாக இசைக்க முடிந்தது. இதனால்தான் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரம் என பெயர் வந்தது. நாதஸ்வர இசை வளர்ச்சிக்கு இந்தக் கருவி பெரிதும் உதவியது.
- தற்போது, இந்த நாதஸ்வரம் கருவிக்கு 158 நாடுகளில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ராஜரத்தினம் பிள்ளை, காருக்குறிச்சி அருணாச்சலம் உள்ளிட்ட புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்கள் பலர் நரசிங்கம்பேட்டை நாதஸ்வரத்தை வாசித்து பெரும் புகழ் பெற்றனர். எனவே, இந்த நாதஸ்வரம் திராவிடர்களின் இசைக்கருவி என அழைக்கப்படுகிறது.

### புவிசார் குறியீடு

- புவிசார் குறியீடு (பதிவு மற்றும் பாதுகாப்புச் சட்டம்) 1999.
- தொழில் ஊக்குவிப்பு உள் வர்த்தகம், வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் புவிசார் குறியீட்டை (GI Tag) வழங்குகிறது.
- 2005 ஆம் ஆண்டு டார்ஜலிங் டீ–க்கு முதன் முதலில் புவிசார் குறியீடு வழங்கப்பட்டது.
- கர்நாடகா 47 பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்று இந்தியாவில் முதல் இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் 41 பொருட்களுக்கு புவிசார் குறியீடு உள்ளது.

## திருவாரூரில் வேளாண் பொருள்களுக்கான தொழிற்பேட்டை

- திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களுக்கான தொழிற்பேட்டை தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலம் உருவாக்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் தங்களின் விளைபொருள்களுக்கு நல்ல விலை பெறுவதோடு, பெரும்பான்மையோருக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும்.
- வேளாண்மை தொடர்பான தொழில்நுட்ப சிக்கல்களுக்குத் தீர்வு காணக்கூடிய வேளாண் புத்தொழில் நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனமானது வேளாண்மை– உழவர் நலத்துறையுடன் இணைந்து ஒரு சிறப்புப் போட்டியினை ஏற்பாடு செய்யும். தேர்வு செய்யப்படும் வேளாண் புத்தொழில் நிறுவனங்களின் வேளாண் வணிகரீதியான முயற்சிகளுக்கு ரூ.10 லட்சம் வரை நிதியுதவி வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

## சாலை விபத்துகளில் உயிரிழப்பைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள்

- திட்டத்தின் மூலம் விபத்துகளில் சிக்குவோருடைய உயிர் காப்பாற்றப்படுகிறது.

- இந்தத் திட்டத்தால், அரசு மருத்துவமனைகளில் 29 ஆயிரத்து 142 பேரும், தனியார் மருத்துவமனைகளில் 4 ஆயிரத்து 105 பேரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக, 33 ஆயிரத்து 247 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதனால், 33 ஆயிரம் குடும்பங்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. நாட்டுக்கே முன்னோடியாக விளங்கும் இந்தத் திட்டத்துக்காக இதுவரை ரூ.29.56 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## '100 நாள் வேலைத் திட்டம் நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது

- தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம், திமுக தேர்தல்வாக்குறுதியின்படி நகர்ப்புறப்பகுதிகளிலும் தொடங்கப்பட்டுள்ளது என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேருகூறினார்.
- சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அதிமுக உறுப்பினர் கே.ஏ.பாண்டியன் பேசும்போது, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை. ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் 100 நாள்களில் இருந்து 150 நாள்களாக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், நிறைவேற்றப்படவில்லை. மேலும், நகர்ப்புற பகுதிகளில் 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம் கொண்டு வரப்படும் எனக் கூறப்பட்டது.

## சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசே ஏற்க மசோதா தாக்கல்

- சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசே ஏற்கவகைசெய்யும் சட்டமசோதா பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, தாக்கல் செய்தார். மசோதாவில் கூறப்பட்டுள்ளதாவது:–
- ஈரோட்டில் 1954–ஆம் ஆண்டில் சிக்கய்ய நாயக்கர் கல்லூரி நிறுவப்பட்டது. 1959–ஆம் ஆண்டில் இந்தக் கல்லூரியானது சிக்கய்ய நாயக்கர் மகாஜன கல்லூரி என பெயர் மாற்றப்பட்டது. அதன்பின்பு, 1970–இல் சிக்கய்ய நாயக்கர் கல்லூரி என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்தக் கல்லூரிக்கு எதிராக நிதி முறைகேட்டுப்புகார்கள் எழுந்தன. இதைத் தொடர்ந்து, கல்லூரியை மேலாண்மை செய்து வந்த அமைப்பை நீக்கி விட்டு கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டார்.

## சட்டப்பேரவையில் பெண் துபாஷி நியமனம்

- சட்டப்பேரவை வளாகத்துக்குள் அவைத் தலைவருக்கு முன்பாகச் செல்லும் நபராக பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 'துபாஷி' என்று அழைக்கப்படும் அந்தநபர் பேரவைத்தலைவருக்கு முன்பாகச் செல்வார்.
- இதுவரை பேரவைத் தலைவர்களுக்காக நியமிக்கப்பட்ட துபாஷிக்கள் ஆண்களாகவே இருந்தனர்.

## மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கப்படும்

- மக்கள் நலப் பணியாளர்களுக்கு நிச்சயம் மீண்டும் பணி வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறினார்.

## காதி வாரியத்தில் இனி பாரம்பரிய அரிசி–செக்கு எண்ணெய் கிடைக்கும்

- காதி வாரியத்தின் மூலம் பாரம்பரிய அரிசி, செக்கு எண்ணெய், தேன் ஆகியன தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய பொருள்கள் அனைத்தும் அறிமுகம் செய்யப்பட்டன. சென்னையில் நடந்த நிகழ்வில் அவற்றை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அறிமுகம் செய்தார்.
- சம்பா, ரத்தசாலி, தூயமல்லி, சீரகசம்பா, கருப்புகவுனி, பூங்கார் எனும் பாரம்பரிய அரிசி வகைகள், காதி பாரம்பரியம் என்ற பெயரில் தயாரிக்கப்பட்டுள்ளது. வாகை மரச் செக்கினால் தயாரிக்கப்பட்ட நல்லெண்ணெய், கடலெண்ணெய் ஆகியன 'காதி நியூலைப்' என்ற பெயரிலும், மல்லிகை, ரோஸ் போன்ற புதிய நறுமணங்களைக் கொண்ட ஊதுபத்திகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.
- காதித் தேனுடன் பேரிச்சம்பழம், அத்திப்பழம், வால்நட்ஸ், உலர் பழங்கள் ஆகியன தனித்தனியாக கலக்கப்பட்டு கண்ணாடி பாட்டில்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு உள்ளன.
- வெளியில் இருந்தே பார்க்கலாம்: காதி வாரியத்தின் மூலமாக தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ள பொருள்களின் தரத்தை பாக்கெட்டின் வெளிப்புறத்தில் இருந்தேபார்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பாக்கெட்டுகள் அனைத்தும் இளைய தலைமுறையினரையும் கவரும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

## அரசு பல் மருத்துவமனையில் உலக வாய் நல விழிப்புணர்வு நிகழ்ச்சி

- ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 20–ஆம் தேதி உலக வாய் சுகாதார தினம் கடைபிடிக்கப்படுகிறது. சிறந்த வாய் சுகாதாரத்தின் நன்மைகளை எடுத்துக்காட்டவும், வாய் நோய்களைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பவும், வாய் சுத்தத்தைப் பேண வலியுறுத்தவும் இந்நாள் கவனம் செலுத்துகிறது.
- மையக்கருத்து – "வாய் நலம் காத்து உடல் நலம் பேணுவோம்".

உலக வாய் நல விழிப்புணர்வு நிகழ்ச்சி

- சென்னை பாரிமுனையில் உள்ள அரசு பல் மருத்துவமனையில் உலக வாய் நல விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.
- ஆண்டுதோறும் மார்ச் மாதம் 20–ஆம் தேதி முதல் ஒரு வாரத்துக்கு 'உலக வாய் நல தினம்' கடைப்பிடிக்கப்படும்.

## வெளிநாடு வாழ் தமிழர் நலவாரிய நிர்வாகம் மாற்றியமைப்பு உள்பட 7 மசோதாக்கள் நிறைவேற்றம்

- தமிழகத்துக்கு வெளியே வாழும் தமிழர்கள் நலவாரிய நிர்வாகப் பொறுப்பு மாற்றியமைக்கும் சட்டத்திருத்த மசோதா உள்பட மொத்தம் 7 சட்டமசோதாக்கள் பேரவையில் நிறைவேற்றப்பட்டன.
- தமிழகத்தை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் நல வாரியத்தின் அமைப்பை, மேலாண்மை இயக்குநர் மற்றும் இயக்குநர்கள் என்பதற்குப் பதிலாக அதை நிர்வகிக்கும் பொறுப்பு வாரியத்தின் தலைவர் மற்றும் வாரிய உறுப்பினர் என மாற்றம் செய்யப்படும். மேலும் வாரியத்தின் எண்ணிக்கையை 13–இலிருந்து 15–ஆக உயர்த்தவும் அரசு முன்மொழிந்துள்ளது. அது தமிழகத்தை வாழ்விடமாகக் கொள்ளாத தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் நலன் ஆணையரை பதவிவழி உறுப்பினர் செயலாளராக செயல்பட முன்மொழிந்துள்ளது.

## உலகிலேயே உயரமான கட்டடத்தில் தமிழகம் குறித்த காட்சிப் படம்

- துபையிலுள்ள, உலகிலேயே உயரமான புர்ஜ் கலீஃபா கோபுரத்தின் மீது ஒளிபரப்பப்பட்ட தமிழகம் பற்றிய காட்சிப் படத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.
- தமிழ்நாடு வார விழாவையொட்டி, துபையிலுள்ள 2217 அடி உயரம் கொண்ட, உலகிலேயே அதிக உயர கட்டடமான புர்ஜ் கலீஃபா கோபுரம் மீது ஒளிபரப்பப்பட்ட தமிழகத்தின் வரலாறு, பண்பாடு, செம்மொழி, தமிழகத்தின் சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் பற்றிய அழகிய காட்சிப் படத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.
- இந்த நிகழ்வின் போது, தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன்.

## இல்லம் தேடிக் கல்வி மையங்கள் விரிவாக்கம் செய்கிறது கல்வித் துறை

- தமிழகத்தில் 'இல்லம் தேடிக்கல்வி மையங்களை வலுப்படுத்தி, விரிவாக்கம் செய்வதற்கான பணிகளை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.
- கரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளிமற்றும் இழப்புகளை ஈடுசெய்வதற்காக, தன்னார்வலர்களைக் கொண்டு தினமும் ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் வரை இல்லம் தேடிக்கல்வி' என்னும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- தற்போது ஒரு லட்சத்து 79,356 இல்லம் தேடிக் கல்வி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களை வலுப்படுத்தி விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகளில் பள்ளிக் கல்வித் துறை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.
- இதைக் கருத்தில் கொண்டு மண்டல அளவிலான ஆலோசனைக் குழுக்களுக்கு சில பணிகளை கல்வித் துறை ஒதுக்கீடு செய்துள்ளது.
- அதன்படி, இந்தக் குழுவினர் தேவைப்படும் குடியிருப்புப் பகுதிகளில் இல்லம் தேடிக் கல்வி மையங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அதேவேளையில், ஏற்கெனவே செயல்பட்டு வரும் மையங்களை தன்னார்வ இயக்கங்களை ஒருங்கிணைத்து பலப்படுத்துவது அவசியம். அனைத்துப் பகுதிகளிலும் செயல்பட்டு வரும் மையங்களில் கற்றல் செயல்பாடுகளை பார்வையிடவேண்டும்.
- களத்தில் தன்னார்வலர்கள் சந்திக்கும் பிரச்னைகளை, உரியவர்களிடம் தொடர்பு கொண்டு தீர்வு காண்பது அவசியம்.

## தமிழகத்தில் ரூ.2,600 கோடி முதலீட்டுக்கு ஒப்பந்தங்கள் துபையில் முதல்வர் முன்னிலையில் கையொப்பம்

- துபை தொழில் நிறுவனங்கள் ரூ.2600 கோடி முதலீடுகளை தமிழகத்தில் செய்யும் வகையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.
- நான்கு நாள் பயணமாக துபை மற்றும் அபுதாபி சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்குள்ள பல்வேறு முதலீட்டாளர்களைச் சந்தித்துப் பேசிவருகிறார். மேலும், தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில், ரூ.2500 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல் வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.
- ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை கலந்துரையாடினார். அப்போது, சில புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. அதன்படி, துபையைச் சேர்ந்த நோபுள் ஸ்டீல்ஸ் நிறுவனம் ரூ. 200 கோடி முதலீடு செய்யவுள்ளது. இதன்மூலம், 1200 பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

## இந்திய வரலாற்றை தெற்கிலிருந்து எழுதுவோம்: முதல்வர்

- இந்திய வரலாற்றைத் தெற்கிலிருந்து எழுதுவோம் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- 3 ஆயிரத்து 200 ஆண்டுகள் தொன்மையுடைய நமது வரலாற்றின் பெருமை வாய்ந்த கீழடி பொருநை ஆற்றங்கரை நாகரிகங்களின் சிறப்பை விளக்கும் காணொலி, உலகின் உயர கட்டடமான புர்ஜ் கலீஃபா–வில் காண்பிக்கப்பட்டது.

## திருக்குறள் தேசிய நூல் மாநாடு

- தமிழ் இந்திய ஒன்றிய ஆட்சி மொழி, திருக்குறள் தேசிய நூல் மாநாடு சென்னை தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது.
- தில்லி அனைத்திந்திய தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவர் இரா.முகுந்தன் தலைமை வகித்தார். பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன், புலவர் சுந்தரராசன், பாவலர் கணபதி, புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் முத்து, வா.மு.சே. திருவள்ளுவர் கவிஞர் இளமாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

## தமிழகத்தில் 2 புதிய வணிக வளாகங்கள் அரசு–அரபு நிறுவனம் ரூ.3,500 கோடிக்கு ஒப்பந்தம்

- அரபு நாடுகளில் மிகப்பெரிய வணிக வளாகங்களை நடத்தி வரும் லுலு நிறுவனம், தமிழகத்திலும் 2 புதிய வணிக வளாகங்களை கட்டமைக்கவுள்ளது. இதற்காக ரூ.3,500 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் அபுதாபியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பமானது.
- புதிய வணிக வளாகங்கள்: புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, ரூ.3,500 கோடி முதலீடு மற்றும் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 3 திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. அதில், ரூ.2,500 கோடி முதலீட்டில் 2 வணிக வளாகங்கள் மற்றும் ஆயிரம் கோடி ரூபாயில் ஓர் ஏற்றுமதி சார்ந்த உணவு பதப்படுத்தும் திட்டம் ஆகியன திட்டமிடப்பட்டுள்ளது.

## வருமுன் காப்போம் திட்டத்தில் 7 லட்சம் பேர் பயன்

- கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவத் திட்டம் மூலம் 1,035 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 7 லட்சம் பேர் பயனடைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.
- பெருநகர சென்னை மாநகராட்சி சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்து, அப்பள்ளியில் வேர்ல்டு விஷன் தொண்டு நிறுவனத்தின் பங்களிப்புடன் ரூ.12.36 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட 3 ஸ்மார்ட் வகுப்பறைகளையும் திறந்து வைத்தார்.
- இத்திட்டம் செயல்படத் தொடங்கியவுடன் மக்களிடமிருந்து பெறப்பட்ட வரவேற்பை அடுத்து 1,250 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என முதல்வர் அறிவித்தார்.

## திருநங்கைகள் கவுன்சில் உறுப்பினராக தினமணி புகைப்படக் கலைஞர் நியமனம்

- தேசிய திருநங்கைகள் கவுன்சில் உறுப்பினராக "தினமணி" விழுப்புரம் பதிப்பின் புகைப்படக் கலைஞர் என்.ராமமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வீரேந்திரகுமார் தலைமையிலான இந்த கவுன்சிலில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 4 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சூரிய கரும்புள்ளிகளால் பூமியின் வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

- சூரியனில் கரும்புள்ளிகள் ஏற்படத் தொடங்கியுள்ளதால் பூமியின் வெப்பம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாக கொடைக்கானல் வான் இயற்பியல் விஞ்ஞானி குமரவேல் தெரிவித்தார்.
- சூரிய காந்தப் புயல் இந்த ஆண்டு அதிக அளவில் வீச வாய்ப்பு உள்ளதால் செயற்கைக் கோள்கள் மற்றும் கைப்பேசி அலைவரிசைகள் பாதிக்கலாம் என நாசா மையம் எச்சரிக்கை விடுத்தது.
- கொடைக்கானல் வான் இயற்பியல் ஆய்வகத்தில், 4 தொலைநோக்கிகள் உதவியுடன் சூரியனை கண்காணித்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
- 11 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் சூரிய கரும்புள்ளிகள், கடந்த சில நாள்களாக சூரியனில் தோன்றி வருவதாகவும், இனி வரும் நாள்களில் அதன் வீரியம் அதிகரித்து, சூரிய காந்தப் புயலாக மாறி பூமிக்கு வரும்.

## சென்னை மத்திய சதுக்கத் திட்டம்: சுரங்க நடைபாதை உள்பட புதிய வசதிகள்

- சென்னை மத்திய சதுக்கத் திட்டத்தின் கீழ், ரூ.34.22 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். சென்னை சென்ட்ரல் பகுதியில் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் புதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
- சென்னை சென்ட்ரலை ஒட்டி, பெருநகர மாநகராட்சி அலுவலகத்தின் ரிப்பன் கட்டடம் அருகே மத்திய சதுக்கத் திட்டத்தின் கீழ் புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## கர்ப்பிணிகளுக்கான கரு வளர்ச்சி குறைபாடுகள் அறியும் சேவை

- கர்ப்பிணிப் பெண்களுக்கான கரு வளர்ச்சி குறைபாடுகளைக் கண்டறியும் புதிய சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- இதற்காக ரூ.1 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ள மருத்துவக் கருவிகளையும் அவர் இயக்கி வைத்தார்.
- சென்னை ஓமந்தூரார் அரசின் தோட்ட வளாகத்தில் உள்ள அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில், மாநில சுகாதாரப் பேரவைத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- இந்தத் திட்டமானது, இதுவரையில் சேலம், சிவகங்கை, புதுக்கோட்டை, கடலூர், அரியலூர், தருமபுரி, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, தென்காசி, நீலகிரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்தியாவிலேயே முதல் முறையாக அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கென பிரத்யேக கருவி வரவழைக்கப்பட்டுள்ளது. இந்த கருவியைக் கொண்டு பரிசோதனை செய்வதன் மூலம் கரு மரபணு சார்ந்த பல பிரச்னைகள் கண்டறியப்பட்டு உடல் உறுப்பு ஊனத்துடன் குழந்தை வளர்வது தடுக்கப்படும்.